

# நாமும் சுற்றாடலும்

ஆண்டு 4







புதிய பாடத்திட்டம்



வெளியீடு : கு. வி. அச்சகம் - யாழ்ப்பாணம்

505

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

நூலகம்

## முக்கிய அறிவித்தல்.

இப்புத்தகம் உங்களுடைய சொத்தாகும். இதில் கீறுதல், கிழித்தல், வெட்டுதல், மடித்தல், அழுக்குப்படியவிடுதல், போன்ற ஊறுகளைச் செய்ய வேண்டாம் என அன்புடன் வேண்டுகின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் இருப்பின் உடன் ஆசிரிய நூலகருக்குத் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்லநிலையில் இருந்ததாகக்கருதி அதற்காக விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

—ஆசிரிய நூலகர்—

# நாமும் சுற்றாடலும்

## புதிய பாடத்திட்டம்

## ஆண்டு

235

# 4

JIROPAY SARAVANA BAVANANTHA LTD.
DATE
LIBRARY

விளக்கப்படங்களுடன் கூடியது

*[1996 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள தேசியக் கல்வி நிறுவகம் ஆரம்பக் கல்வித்துறை ஆண்டு 4க்கு ஆன விரிவான பாடத்திட்டம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.]*

புத்தம் புதிய பதிப்பு

*[பதிப்புரிமையுடையது]*

*விலை : ரூபா - 75.00*

வெளியீடு :
**கு. வி. அச்சகம்**
**386, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| பாடம் 01 | எமது அயலில் காணப்படும் தாவரங்கள் | 01 - 07 |
| பாடம் 02 | எமது அயலில் காணப்படும் பிராணிகள் | 08 - 15 |
| பாடம் 03 | சுற்றாடலின் கோலங்கள் | 15 - 21 |
| பாடம் 04 | புவியும் வானும் | 22 - 26 |
| பாடம் 05 | வேலைகளை இலகுவாக்கும் முறைகள் | 27 - 31 |
| பாடம் 06 | எமது உணவு | 32 - 39 |
| பாடம் 07 | எமது பரிபாலன முறைகள் | 40 - 43 |
| பாடம் 08 | பழக்கவழக்கங்களும் பொறுப்புக்களும் | 44 - 47 |
| பாடம் 09 | நாமும் போக்குவரத்தும் | 48 - 51 |
| பாடம் 10 | நாம் எவ்வாறு வளர்கிறோம் | 52 - 57 |
| பாடம் 11 | எமது வளர்ச்சிக்குத் தடையாக அமைவன | 58 - 62 |
| பாடம் 12 | மனித நடத்தைகள் | 63 - 67 |
| பாடம் 13 | மனிதனும் காலமும் | 68 - 72 |
| பாடம் 14 | எமது நகரங்கள் | 73 - 80 |
| பாடம் 15 | வியாபாரக் கோலங்கள் | 81 - 84 |
| பாடம் 16 | எமது விழாக்கள் | 85 - 91 |
| பாடம் 17 | முயற்சியுடையோர் | 92 - 95 |
| பாடம் 18 | எமக்குச் சேவைகள் கிடைக்கும் வழிகள் | 96 - 100 |
| பாடம் 19 | சனசமூக அமைப்புக்கள் | 101 - 104 |
| பாடம் 20 | அபிவிருத்தி | 105 - 108 |

# 1. எமது அயலில் காணப்படும் தாவரங்கள்

## 1.1. அண்மைச் சுற்றாடலில் பெருமளவில் உள்ள புல்பூண்டுகள் ஆகியவற்றை இனங்காணல்.



படத்தில் ஒரு கிராமப்புற வீட்டினைக் காண்கின்றீர்கள்! வீட்டைச் சுற்றிப் பரந்தகன்ற நிலப்பகுதி தெரிகின்றது. நிலத்தின் ஒருபுறத்தில் வீட்டுத்தோட்டம் உண்டு. அதை அடுத்து ஒரு வெறும் வெளியும் தெரிகின்றது.

வீட்டுத் தோட்டத்தில் காய்கறிப் பயிர்கள் வளர்ந்துள்ளன. கத்தரி, வெண்டி, தக்காளி முதலியன காய்கறிச் செடிகள். பாகல், புடோல் முதலியன கொடிவகைகள். வற்றாளை, அடம்பு முதலியன நிலத்தில் படர்கின்றன. பயறு, பாகல் முதலியன மரத்தில் ஏறுகின்றன. வெறுவெளியில் புல்பூண்டு, முட்புதர் முதலியன காணப்படும்.








அறுகு, கோரை, சூடன் முதலியன புல்வகையைச் சேர்ந்தவை. கையாந்தகரை, தயிர்வேளை, நாயுருவி இவற்றை நாம் களைகள் என்று சொல்கின்றோம். களைகள், முடிதும்பை முதலியவை பூண்டுகள் எனப்படும். ஓரிரு ஆண்டுகளில் வாழ்ந்து மடியும் இயல்பின. குப்பைமேனி, ஊமத்தம் செடி, முடிதும்பை, இணுக்கு இப்படி எத்தனையோ வகையான புல்பூண்டுகள் உண்டு. இவற்றால் எங்களுக்கு என்ன உபயோகம்? இவற்றால் எங்களுக்கு உபயோகமில்லை. ஆனால் இவை ஆடு, மாடுகளுக்கு உணவாகின்றன. சில மருந்தாகவும் பயன்படுகின்றன. எல்லாத் தாவரங்களும் எங்களுக்கு உபயோகப்படுவதில்லை. சில பயிர்கள்தான் எங்களுக்கு பயன்படுகின்றன. உணவுக்கு உபயோகப்படும் தாவரங்களையே நாங்கள் அதிகமாக பயிரிடுகிறோம்.

வீட்டைச் சுற்றி மா, பலா, வாழை முதலிய மரங்கள் உண்டு. மற்றும் வேம்பு, புளி, இலுப்பை மரங்களும் நிற்கக் காணலாம்.

மரஞ் செடி கொடி புல் பூண்டு முதலிய அனைத்தும் தாவரம் என்ற பெயரால் அழைக்கப்படும். தாவரங்கள் மிகவும் பயன் உள்ளவை. தாவரங்களை அவற்றின் வளர்ச்சி, தோற்றம் என்பனவற்றைக் கொண்டு மரங்கள், செடிகள், கொடிகள், நகர்கொடிகள், பூண்டுகள் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## 1.2. காடு ஒன்றின் பண்புகளையும் அதனால் ஏற்படும் பயன்களையும் இனங்காணல்.


பிள்ளைகளே! நீங்கள் சில சமயங்களில் நீண்ட தூரப் பிரயாணத்தை மேற்கொண்டு இருப்பீர்கள். வசுவண்டி அல்லது புகைவண்டியிற் சென்றிருப்பீர்கள். அப்போது மரஞ்செடி கொடிகள் செழித்து உயர்ந்து வளர்ந்திருக்கும் இடங்களையும் புன்னிலங்களையும் கடந்து சென்றிருப்பீர்கள்.



முன்பெல்லாம் நமது நாட்டில் நிறையக் காடுகள் இருந்தன. பசுமையான காடுகள், இடைவெப்பக் காடுகள், முட்புதர்க் காடுகள், உலர்வலயக் காடுகள் என இவற்றைப் பிரிக்கலாம். பசுமையான இயற்கைக் காடுகளில் சிங்கராச சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

பிரதான மரவகைகள் ஹொர, கீண, ஆசனி, பலா, கொடபர, நாகமரம், காட்டாமணக்கு, கித்துள் போன்றதாகிய மரங்களும் பெறுமதிமிக்க வைர மரங்களான முதிரை, பாலை, யாவரணை; கருங்காலி, சமண்டலை போன்ற மரங்களும் மலைவேம்பு, ஈரப்பலா, பாலை, வீரை போன்ற மரங்களும் உண்டு.

உலர்வலயத்தில் பெருங்காடுகள் காணப்படுகின்றன ஆயினும் குடியிருப்புக்காகவும் அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் நிலம் பயன்பட்டு வருவதால் இக்காடுகள் அருகிவருகின்றன. விறகும் வெட்டுமரமும் பெறுவதற்கும் மண்ணரிப்பைத் தவிர்ப்பதற்கும் அரிதான தாவரங்களும் விலங்குகளும் நிலவுவதற்கும் காடு உதவுகின்றது.



காடுகளில் பாலை, முதிரை, கருங்காலி, தேக்கு முதலிய மரங்களும் காணப்படும். மேலும் மலைவேம்பு, நெதுன், ஹொர, ஈரப்பலா முதலிய பல மரங்களும் உண்டு.

நீங்கள் அமர்ந்திருப்பது படிக்கும் கதிரை மேசை முதலியன எல்லாம் மரத்தினால் செய்யப்பட்டன அல்லவா?

வீடுகளுக்கு வேண்டிய நிலை, யன்னல் செய்ய கூரை அமைக்க மரங்கள் உதவுகின்றன. பல்வேறு தளபாடங்களை ஆக்க மரங்கள் பயன்படுகின்றன. பல அலங்காரப் பொருள்களும் மரங்களினால் செய்யப்படுகின்றன.

இலா, ஏழிலைப்பாலை முதலிய மரங்களைக் கொண்டு தீக்குச்சி செய்கிறார்கள். நாம், கடதாசி செய்யக்கூட மரங்களைப் பயன்படுத்துகின்றோம். மேலும் மரத்தை விறகாகப் பயன்படுத்துவதும் உண்டல்லவா?

சில தாவரங்கள் மருந்து வகைகளுக்கும்கூட உபயோகிக்கப்படுகின்றன. கற்பூரவள்ளி, தயிர்வேளை, வட்டத்துருத்தி முதலியன அத்தகையன.

நிறப்பூச்சுக்கள் தயாரிக்க செஞ்சந்தனம், ஒதி, கண்டல் போன்ற மரங்கள் உதவுகின்றன.

காட்டுமுந்திரி, நரிஇலந்தை போல்வன "பிசின்" செய்யப் பயன்படுகின்றன.

மனிதன் பல்வேறு தேவைகளுக்காக முன்பு காடுகளை அழித்தான். இன்றும் அழிக்கிறான். அழிக்கப்பட்ட இடங்களில் மரங்களை வளர்க்கவேண்டும். அனுமதி இன்றிக் காடுகள் அழிக்கப்படுவதைத் தடை செய்யப்படுதல் வேண்டும். வீட்டுத் தோட்டம், மரம்நடுகை இயக்கம் முதலியவற்றை ஊக்குவித்தல் வேண்டும். பிறந்த நாள்கள் தோறும் மரம் ஒவ்வொன்று நடலாம்தானே!

காடுகள் அழிக்கப்பட்டால் இயற்கை அழகு கெடும். மண்ணரிப்பு முதலியன அதிகரிக்கப்படும். மழைவீழ்ச்சி குன்றும்.

## 1.3. மரஞ் செடி கொடிகளுக்கு ஏற்படும் தீங்குகள் தொடர்பாகக் கண்டறிதல்.

ஒரு நாள், மகா வித்தியாலய மாணவர்கள் நகரத்தில் உள்ள பூங்காவினைப் பார்வையிடச் சென்றார்கள். உள்ளே புகுந்ததும், அங்கு நாட்டப்பட்டிருந்த சூரியகாந்திச் செடிகள் சில வாடிவதங்கிக் கிடப்பதைக் கண்டார்கள்.

மேலே சென்றார்கள். அங்கு நாட்டப்பட்டிருந்த மலை வேப்பங்கன்று ஒன்றினை ஆடு கால் போட்டுக் கடித்துத் தின்பதைக் கண்டார்கள். எப்படியோ அந்த ஆடு, பூந்தோட்டத்துள் புகுந்து விட்டது. சில மாணவர்கள் அதைத் துரத்திப் பிடித்து வெளியே கொண்டுபோய் விட்டார்கள். பின்பு ஒரு இளம் வேப்பங்கன்றினைக் கண்டார்கள். அதன் அடிப்பாகத்தில் யாரோ மரத்தின் தோலை வெட்டியிருப்பதைக் கண்டார்கள். அதில் இருந்து பிசின் வடிந்து காய்ந்து போய் இருந்தது.




அடுத்து ஒரு பலா மரத்தின் அடிப்பாகத்தில் பட்டைகள் காய்ந்து இருந்தன. மேலே சில கொம்பர்களின் கிளைகளில் இருந்து இலைகளும் உதிர்ந்திருந்தன.

அயலில் சில பூஞ்செடிகளின் இலைகள் சுருண்டிருந்தன. செடிகளும் "சேட்டம்" இல்லாது இருந்தன. ஒரு இலையைப் பிடுங்கி, மாணவன் ஒருவன் விரித்துப் பார்த்தான். அதன் உள்ளே ஒரு புழு இருந்தது.






வெகு தொலைவில் மரம் ஒன்றினை சில மனிதர்கள் தறித்துவீழ்த்திக் கொண்டிருந்தனர் அதனுடைய கொம்பர்களை வெட்டி அடுக்கிக் கட்டிக்கொண்டிருந்தார்கள்.



மாணவர்களும் ஆசிரியரும் வீட்டுக்குத் திரும்பினர். ஆசிரியர் நன்கு கவனிக்கப்படாத தோட்டத்திற்குச் சென்று பார்க்கும்படி கூறினார். அங்கு செடிகளில் உள்ள இலைகளை நன்கு ஊன்றிக் கவனியுங்கள். அவ்விலைகளின்மீது எவையேனும் பூச்சிகளைக் காண்கிறாயா? இலைகளில் எவையேனும் அரிக்கப்பட்டிருக்கின்றனவா? நமக்கு உணவைத் தரக்கூடிய நெல், கத்தரி, தக்காளி, வெண்டை போன்ற பயிர்களுக்குப் பூச்சிகள் மிகுந்த தீங்கை விளைவிக்கின்றன. பயிர் முற்றிவரும் சமயங்களில் வெட்டுக்கிளிகள், வயல் எலிகள், ஆடு, மாடுகள் போன்றவை அப்பயிர்களுக்குப் பெருந்தீங்கை விளைவிக்கின்றன. வேலியிடப்படாத பயிர்களை ஆடு, மாடுகள் மேய்ந்து விடுகின்றன. தானியங்களை எடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் சமயங்களில் எலிகள், புழுப்பூச்சிகள் போன்றவை அவற்றை அழித்துவிடுகின்றன. இவ்வாறாக மரஞ் செடி கொடிகளுக்கு உண்டாகிய தீங்குகளைப்பற்றி கலந்து பேசினர்.

## 1.4. மரஞ் செடி கொடிகளுக்கு ஏற்படும் தீங்குகளைக் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்.

தாவரங்கள் மேலே கிளைகளைச் செலுத்துகின்றன. நிலத்தில் வேர்களை விடுகின்றன. அவை தமக்கு வேண்டிய உணவினை வேர்களின் மூலம் மண்ணில் இருந்து பெறுகின்றன. மண் துணிக்கைகளில் உள்ள வளி, நீர், கனிய உப்புகள் அவற்றிற்குப் பெரிதும் உதவுகின்றன. அவற்றில் குறைபாடு உண்டாகும்போது வளர்ச்சி தடைப்படுகின்றது. அதனால்தான் சூரியகாந்திச் செடிகள் வாடிவதங்கி இருந்தன.



பயன்தரு மரங்கள் வளர்ச்சி அடையும் பருவத்தில் ஆடு, மாடு முதலிய விலங்குகள் அவற்றின் இலைகுழைகளைத் தின்கின்றன. அதனால் அத்தாவரங்களின் வளர்ச்சி பாதிப்படைகின்றது. எனவே விலங்குகளிடம் இருந்து அவற்றிற்குப் பாதுகாப்பு அளித்தல் வேண்டும்.

தென்னங்கன்றுகளை நடுபவர்கள் சிறுசிறு கூடுகளை அமைத்து அவற்றுக்குப் பாதுகாப்பு அளிப்பதை நீங்கள் கண்டிருக்கக்கூடும்.

மரங்களின் தோலை வெட்டுவதனால் தீங்கு உண்டாகின்றது. வேரிலிருந்து உணவு மேலே கொண்டு செல்வது தடைப்படுகின்றது. அடிமரத்தில் வெட்டுதல் தோலுரித்தல் முதலியன தவிர்க்கப்பட வேண்டும்.

மரங்களுக்குப் போதுமான அளவு உணவுச்சத்துக்கள் கொண்டு செல்லப்படாமையாலும் காலநிலை வேறுபாட்டாலும் அழிவு உண்டாகின்றது.

தானிய வகைகளில் இருந்து உற்பத்தியாகும் செடி கொடிகள் எமது உணவின் பெரும் பகுதியை வழிநடத்துகின்றது. எனவே தானியங்களைச் செவ்வனே பாதுகாக்க வேண்டும். நீர் உள்ளே செல்லாத புழுப்பூச்சிகளும் நுழையமுடியாத கற்கோட்டைகளிலோ.களஞ்சியங்களிலோ கொள்கலன்களிலோ தானியங்களை சேமித்து வைக்கவேண்டும்.

தானியங்களைச் சேகரித்துப் பத்திரப்படுத்தி வைப்பதற்கு முன்னால் அவற்றை நன்கு உலர வைக்கவேண்டும். அவற்றிலுள்ள ஈரத்தைப் போக்கினால்தான் அவை பல நாட்கள் கெடாமலிருக்கும். இல்லையென்றால் அவற்றின்மீது பூஞ்சணம், பக்டீரியா, வைரஸ் போன்ற நுண்ணுயிரிகள் தோன்றி வளரத் தொடங்கிவிடும். தானியங்களிலுள்ள முளைக்கருவை இவை தின்று விடுவதால் இத்தகைய தானியங்கள் முளைபப்தில்லை. எனவே தானியத்திலுள்ள ஈரம் முதலில் நீக்கப்படவேண்டும். உழவர்கள் நெல், கோதுமை, சோளம் போன்ற தானியங்களைச் சூரிய ஒளியில் கெட்டியான தரையில் பரப்பி உலர வைப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். மேலும், பயிர்களுக்குத் தீமையை விளைவிக்கக்கூடிய புழுப்பூச்சிகளைக் கொல்லும், பயிர்களுக்கு சேதம் விளைவிக்காத மருந்துப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். இவற்றிற்கு பூச்சி கொல்லிகள் என்று பெயர். டி. டி. டி (D. D. T) பி. எச். சி (B. H. C) கந்தகம் போன்றவை சில பூச்சி கொல்லிகளாகும்.

சோப்புக் கரைசலும், புகையிலை நீரும் பூச்சிகள் அழிக்கப் பயன்படுகின்றன. இம் முறையில் தானியங்களை கிருமி கொல்லிகளைப் பயன்படுத்தி இலைச்சுருட்டை, பூஞ்சணம் முதலிய நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

மரங்களைக் கண்ட கண்டபடி வெட்டுதல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். பொதுமக்களும் அரசும் இந்த விடயத்தில் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும்.
தாவரங்கள் இயற்கை அன்னை தந்த பெரும் செல்வமாகும்.

**1.1. நீங்கள் கற்றவை :**

1. வீட்டின் அயலில் தோட்டம், வெறுநிலம் முதலியன காணப்படும்.
2. கத்தரி, வெண்டி, தக்காளி செடிகள்; பாகல், புடோல் கொடிகள். சில கொடிகள் நிலத்தில் படரும். சில கொடிகள் மரத்தில் ஏறும்.
3. வெறுவெளியில் புல்பூண்டு, முட்புதர் முதலியன காணப்படும்.
4. அறுகு, கோரை, சூடன் புல்வகைகள்.
5. தயிர்வேளை, நாயுருவி முதலியன பூண்டுவகைகள்.
6. காரை, வள்ளி முதலியன முட்செடிகள்.
7. வாழை, பலா, மா முதலியன பெரிய மரங்கள்.
9. மரஞ் செடி கொடி புல் பூண்டு அனைத்தும் தாவரங்கள் என்று வழங்கப்படும்.

**1.2. நீங்கள் கற்றவை :**

1. முன்பெல்லாம் நமது நாட்டில் காடுகள் இருந்தன.
2. மரஞ் செடி கொடிகள் வளர்ந்தோங்கி இருக்கும் இடம் காடு.

3. மரஞ் செடி கொடிகள் தாமாகவே வளர்ந்திருக்கும் இடம் இயற்கைக் காடு.
4. நமது நாட்டில் உள்ள இயற்கைக் காடு சிங்கராச வனம். அது மிகவும் சிறந்தது.
5. காடுகளில் பாலை, கருங்காலி, தேக்கு முதலிய பல்வேறு மரங்கள் காணப்படும்.
6. மரத்தினைப் பயன்படுத்தி கதிரை, மேசை, வாங்கு முதலியன செய்கிறார்கள்.
7. வீட்டுக்கு நிலை, யன்னல், கூரை முதலியன செய்யவும் உபயோகிக்கிறார்கள்.
8. மரம், கடதாசி, தீக்குச்சி முதலிய செய்யவும் பயன்படுகின்றது.
9. மருந்துக்காகப் பயன்படும் தாவர வகைகளும் உண்டு.
10. காடுகள் அழிக்கப்படுவதைத் தடைசெய்து, மரங்கள் வளர்க்கப்படுவதை ஊக்குவிப்போம்.

**1.3. நீங்கள் கற்றவை :**

1. மரங்கள் தக்க போசிப்பு இன்மையால் அழிகின்றன.
2. விலங்குகள் கடித்தும் முறித்தும் தின்றும் தீர்க்கின்றன.
3. மரங்களின் வேர், பட்டை, கொம்பர் முதலியவற்றை ஊறுபடுத்துகின்றனர்.
4. மரங்களைத் தேவைகளுக்காகத் தறித்து அழிக்கின்றனர்.
5. கொம்பர்கள் வெட்டப்படுவதாலும் தீயிடப்படுவதாலும் மரங்களுக்குத் தீங்கு உண்டாகின்றது.

**1.4. நீங்கள் கற்றவை :**

1. தாவரங்கள் கிளைகளை மேலே செலுத்துகின்றன. வேர்களைக் கீழே விடுகின்றன.
2. வேர்களின் மூலம் மண்ணில் இருந்து உணவினைப் பெறுகின்றன
3. மண் துணிக்கைகளில் வளி, நீர், கனிய உப்பு என்பன உண்டு.
4. தாவரங்களுக்குப் பாதுகாப்பு வேலிகள் அமைத்து விலங்குகளிடம் இருந்து பாதுகாப்பு வழங்கவேண்டும்.
5. தோல், பட்டை முதலியவற்றை வெட்டுதல் தடை செய்யப்படல் வேண்டும்.
6. மரங்கள் வெட்டி அழிக்கப்படுவதைத் தடுக்க பொது மக்களும் அரசும் முயற்சிக்க வேண்டும்.

## மீட்டற்பயிற்சி

**கீழே தரப்பட்ட அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| மரம் | செடிவகை | கொடிவகை | பூண்டுகள் |
|---|---|---|---|
| | | | |

கோடிட்ட இடங்களை நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிங்கராசவனம் | மண்ணரிப்பு | தாவரம் | களைகொல்லி | இயற்கை | மண் துணிக்கை |

i. மரஞ் செடி கொடி புல் பூண்டு அனைத்தும் ________________ எனப்படும்.

ii. நமது நாட்டில் பசுமையான ________________ காடுகள் உண்டு.

iii. மரம் வளர்ப்பதால் ________________ தடுக்கலாம்.

iv. இயற்கைக் காடுகளில் ________________ மிகவும் உயர்ந்தது.

v. வளி, நீர், கனிய உப்பு முதலியன ________________ உண்டு.

vi. இலைச்சுருட்டை நோய்க்கு ________________ அடிக்கப்படல் வேண்டும்.

புல்பூண்டுகள் பற்றி 5 வசனங்கள் எழுதுக.

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

செயற்பாடு :


i. பாடசாலைத் தோட்டத்தை அவதானித்து அங்குள்ள தாவரங்களைக் குழுக்களாகப் பிரித்து அட்டவணை செய்தல்.

ii. ஆண்டு 4 ஆசிரியர் உதவியுடன் மாணவர் நகரத்துப் பூங்காவைப் பார்வையிடச் செல்லுதல், குறிப்பெடுத்தல்.

## 2. எமது அயலில் காணப்படும் பிராணிகள்

### 2.1. அண்மைச் சுற்றாடலில் வழியில் இருபுறங்களிலும் அதிக அளவில் காணப்படும் பிராணிகளை இனங்காணல்.

பூனைகள், நாய்கள், மாடுகள், பறவைகள், பாம்புகள், ஓணான்கள், தவளைகள், மீன்கள், வண்ணாத்திப்பூச்சிகள், நுளம்புகள், சிலந்திகள், நத்தைகள், எறும்புகள், புழுக்கள் போன்றவை நாம் வாழும் சுற்றாடலில் பரவலாகக் காணக்கூடிய விலங்குகளாகும். இவை அனைத்திற்குமே ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குப் பயணம் செய்யும் தன்மை உள்ளது. அதாவது இடம் பெயருந்தன்மை உள்ளது. நமது சுற்றாடலில் நாள்தோறும் பலபல நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றோம். பசு பால் தருகின்றது; பூனை ஓடுகின்றது; எருது வண்டி இழுக்கின்றது; அணில் மரத்தில் ஏறுகின்றது; நாய் குரைக்கின்றது; ஆடு குழை தின்னுகின்றது. பசு, பூனை, எருது, நாய் முதலியன மிருகங்கள்.




சேவல் கூவுகிறது. காகம் கரைகிறது. கிளிகள் கூட்டங்கூட்டமாகப் பறக்கின்றன. குயில் கூவுகின்றது. சேவல், காகம், கிளி, குயில் முதலியன பறவைகள்.



பல்லி கதவில் நிற்கின்றது. ஓணான் வீதியில் ஓடுகின்றது. பாம்பு குப்பையுள் புகுகின்றது. பல்லி, ஓணான், பாம்பு முதலியன ஊர்வன.

வண்டு பூவில் தேனை உண்ணுகின்றது. எறும்பு நிலத்தில் ஊர்ந்து செல்கின்றது. வண்டு, எறும்பு முதலியன பூச்சிகள்.


மிருகம், பறவை, உர்வன, பூச்சி, புழு எல்லாமே பிராணிகள். அவற்றை விலங்குகள் என்றும் கூறுவர். நீர்வாழ்வனவும்கூட விலங்குகளுள் அடங்கும்.

பசு, எருது, நாய், பூனை முதலியன வீட்டில் வளருகின்றன. அவை வீட்டு மிருகங்கள். சிங்கம், புலி, கரடி, யானை முதலியன காட்டில் வளருகின்றன. அவை காட்டு மிருகங்கள்.

கோழி, வாத்து, முதலியன வீடுகளில் வளர்கின்றன. அவை வீட்டுப் பறவைகள். பருந்து, ஆந்தை முதலியன காடுகளில் வளர்கின்றன. அவை காட்டுப் பறவைகள். சிலர் கிளி, புறா முதலிய பறவைகளை வீடுகளில் வளர்க்கிறார்கள். பறந்து திரிவன பறவைகள்.

பல்லி வீட்டில் காணப்படுகின்றது. காட்டுப் பல்லியும் உண்டு. பாம்பு, ஓணான் முதலியன வெளியில் காணப்படுகின்றன. ஊர்ந்து திரிவன ஊர்வன. அவை நகருயிர்கள் என்றும் அழைக்கப்படும்.

மீன், திமிங்கலம் முதலியன நீரில் வாழ்வன. நீரிலும் நிலத்திலம் வாழக்கூடிய பிராணிகளும் உண்டு. தவளை, ஆமை முதலியன அத்தகையன. அவற்றை ஈரூடக பிராணிகள் என்று அழைப்பார்கள்.




## 2.2. மனிதனுக்கும் பிராணிகளுக்கும் இடையே உள்ள தொடர்பை இனங்காணுதல்.

மனிதனுக்கும் பிராணிகளுக்கும் இடையே உள்ள முக்கிய தொடர்புகளில் பிராணிகளும் மனிதனும் உயிருள்ளவை என்னும் பிரிவைச் சேர்ந்தவையாகும். இடம்பெயரும் தன்மையையும் உட்சுவாசம் வெளிச்சுவாசம் ஆகிய தொழிற்பாடுகளையும் கொண்டுள்ளன. மனிதனதும் விலங்குகளினதும் வளர்ச்சி எல்லைக்குட்பட்டது. மனிதனும் ஏனைய விலங்குகளும் இளம் குட்டிகளைத் தோற்றுவிக்கின்றன. வண்ணத்துப் பூச்சிகள், பறவைகள், ஓணான்கள் போன்ற மேலும் சில விலங்குகள் முட்டையிடுகின்றன. மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உணர்திறன் உண்டு. எல்லா விலங்குகளும் தூண்டல்களுக்கு துலங்கலைக் காட்டுகின்றன. எதிரியைக் கண்டதும் தப்பித்துச் செல்லுதல், அல்லது போரிடுதல், தீங்கு விளைவிக்கக்கூடிய யாதேனுமொன்றுடன் மோதியதும் அதிலிருந்து அப்புறமாக விலகிச் செல்லுதல் ஆகியன தூண்டலுக்கும் துலங்கலுக்குமான உதாரணமாகும்.

மனிதனுக்கு, உணவு, உடை, உறையுள், முதலிய அடிப்படைத் தேவைகள் இன்றியமையாதன. உணவைப் பொறுத்தவரை அவன் தானியம், காய்கறி, இறைச்சி, மீன், பால், பழம், முட்டை முதலியவற்றைப் பயன்படுத்துகிறான். பலவகைப் பானங்களும் அவனுக்குத் தேவைப்படுகின்றன. இவை யாவும் இன்றியமையாதவை.

மனித உணவில், இறைச்சி, பால் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. பால் பூரண உணவாகும். விலங்குகளில் இருந்து இறைச்சி வற்றல் முதலியன கிடைக்கின்றன. மீனைப் பச்சையாகவும் கருவாடாகவும் பயன்படுத்துகிறார்கள்.





இறைச்சிக்காக, மாடு, வெள்ளாடு, செம்மறியாடு, பன்றி, கோழி முதலிய விலங்குகள் வளர்க்கப்படுகின்றன. கோழி முட்டைக்காகவும் வளர்க்கப்படுகின்றது. பசு, செம்மறியாடு, எருமை முதலியன பால் தருகின்றன. பாலைக் குளிரூட்டி வைக்கிறார்கள். மாவாக்கியும் கொள்கலங்களில் அடைத்தும் உபயோகிக்கிறார்கள். கால்நடை வளர்ப்பு பெரும் கைத்தொழிலாக வளர்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் உள்ளவர்கள், ஒட்டகப்பாலைப் பருகுகின்றனர். மிருகங்கள் அதிகமாக வளர்க்கப்படும் இடம் பண்ணை எனப்படும்.

விலங்குகளின் தோல், உரோமம் முதலியன பலவிதமான தேவைகளுக்குப் பயன்படுகின்றன. தோலைப் பதனிட்டு கைப்பை, பயணப்பை, பந்து, செருப்பு முதலியன செய்யப்படுகின்றன. உரோமம் சட்டை, போர்வை முதலியன உண்டாக்கப் பயன்படுகின்றது. எலும்பு, உரத் தயாரிப்புக்கு உதவுகின்றது.

## 2.3. பிராணிகளுக்கு இடையே உள்ள தொடர்பை இனங்காணுதல்.

விலங்கு என்னும் பிரிவில் மனிதன், மிருகம், பறவை, ஊர்வன, பூச்சி, புழு எல்லாமே அடங்கும். முள்ளெலும்புத் தொகுதியைக் கொண்ட அதாவது முள்ளந்தண்டைக் கொண்டுள்ள விலங்குகள் முள்ளந்தண்டுள்ள விலங்குகள் என அழைக்கப்படுகின்றன. முள்ளந்தண்டற்ற விலங்குகள் முள்ளந்தண்டில்லாத விலங்குகள் என அழைக்கப்படுகின்றன. முலையூட்டிகள், பறவைகள், நகருயிர்கள் ஈரூடக வாழ்வுள்ளவை. தரையிலும் நீரிலும் வாழும் தன்மை கொண்டவை. மீன்கள் ஆகியவை முள்ளந்தண்டுள்ள விலங்குக் கூட்டங்களைச் சேர்ந்தவையாகும். விலங்குகள் அனைத்தும் தாவரங்களை நம்பியே உயிர் வாழ்கின்றன. பிராணிகள் உண்ணும் உணவுகளுக்கேற்ப உடலுறுப்புக்கள் இசைவாக்கம் பெற்றுள்ளன. பிராணிகளில் ஒருபகுதியானவை, தாவர உணவை மட்டும் உண்ணுகின்றன. பிறிதொரு பகுதியினர், ஊனை மட்டும் உண்ணுகின்றன. தாவரங்களையும் ஊனையும் உண்ணும் பிராணிகளும் உண்டு.




தாவரம் உண்பனவற்றை தாவர பட்சணி என்றும், இலை உண்ணிகள் என்றும் அழைப்பதும் உண்டு. ஆடு, மாடு, குதிரை முதலியன அவ்வகையின.

ஊன் உண்ணும் பிராணிகளை மாமிச பட்சணிகள் என்று அழைப்பதும் உண்டு. சிங்கம், புலி, கரடி முதலியன அத்தகையன. ஆந்தை, கழுகு முதலியனவும் ஊன் உண்பனவே! தாவரம், ஊன் இரண்டையும் நாய், பூனை, எலி முதலியன உண்ணுகின்றன. இவை அனைத்தும் ஊனுண்ணிகள் எனப்படுவதும் உண்டு.

இலை உண்ணிகளுக்கு, அவற்றின் வாய், நாக்கு, பல்லு முதலியன உண்ணும் உணவுக்குத் தக்கவாறு அமைந்துள்ளன. ஊன் உண்ணிகளுக்கு அவற்றின் பற்களும் நகங்களும் கிழிக்கவும் வெட்டவும் தக்கனவாக அமைந்துள்ளன.

விதை உண்ணும் பிராணிகளுக்கு சொண்டுகள் கால்விரல்கள் கொறிக்கும் தன்மையும் பற்றும் தன்மையும் உள்ளனவாக அமைந்திருக்கும்.



## 2.4. பிராணிகளுக்கும் மரஞ் செடி கொடிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை இனங்காணல்.

தாவரங்களும் விலங்குகளும் சுற்றாடலில் காணப்படும் உயிரினங்களாகும். பொதுவாக எல்லா விலங்குகளுக்கும் இடப்பெயர்ச்சியடையும் தன்மை உண்டு. தாவரங்கள் இடப்பெயர்ச்சியடையும் தன்மையைக் கொண்டிருந்தபோதிலும், சில தாவரப் பகுதிகள் அசையும் தன்மையைக் கொண்டுள்ளன. விலங்குகளிற் போன்றே தாவரங்களிலும் சுவாசம் நடைபெறுகின்றது. தாவரங்கள் தமக்குத் தேவையான உணவைத் தமது உடலினுள்ளேயே தயாரித்துக் கொள்ளுகின்றன. எனவே, தாவரங்கள் தற்போசணை உடையவையாகும். விலங்குகளால் தமது உணவைத் தாமே தயாரித்துக் கொள்ள முடியாது. இவை தமது உணவுக்காகத் தாவரங்களின் மீது அல்லது ஏனைய விலங்குகளின் மீது தங்கியுள்ளன. எனவே, இவை பிறபோசணை உடையவைய்ாகும். வளர்ச்சி, தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் பொதுவான ஒரு இயல்பாகும். விலங்குகளின் வளர்ச்சி எல்லைக்குட்பட்டது. எனினும், தாவரங்களின் வளர்ச்சி எல்லையற்றது. தாவரங்களும் விலங்குகளும் தமது இனத்தைப் பெருக்கிக்கொள்ளும். அதாவது இனப்பெருக்கம் செய்யும் தன்மையைக் கொண்டுள்ளன.


ஆடு, மாடு போன்ற இலையுண்ணிகள், இலை முதலான பலவிதமான தாவரப் பொருள்களை உண்ணுகின்றன. கிளி, மைனா போன்ற பறவைகள் பழங்கள், விதைகள் முதலியவற்றை உண்பதை அறிவோம். தேனீ, வண்ணாத்தி போல்வன தேனை உறிஞ்சி உண்கின்றன. சில விலங்குகள் உணவை விழுங்குமுன் கடித்து சென்று பதம்பண்ணி உண்ணுகின்றன. சில விலங்குகள் மெல்லாமல் விழுங்குகின்றன. மேலும் சில விலங்குகள் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன.




விலங்குகள் உணவை உட்கொள்ளும் வகையிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. தாவரங்களில் இருந்து விலங்குகள் உணவைப் பெறுகின்றன. அங்ஙனம் தாவரங்களை உணவாகக் கொண்ட விலங்கை ஊனுண்ணும் விலங்குகள் மீண்டும் உணவாக்குகின்றன. இது ஓர் உணவுச் சங்கிலியாக நிகழ்கின்றது.

இலையை ⟶ ஆடு உண்ணுகிறது ⟶ ஆட்டை ⟶ புலி உண்ணுகின்றது.
தானியத்தை ⟶ எலி உண்ணுகிறது ⟶ எலியை ⟶ பூனை உண்ணுகின்றது.

இவ்வாறு உணவு வட்டம் தொடர்கின்றது. தாவரங்கள் மிகுந்துள்ள காட்டில் விலங்குகளின் வாழ்விடங்கள் அமைந்துள்ளன. விலங்குகளின் உடல் உறுப்புக்களும் அதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.





விலங்குகள் ஒன்றுக்கு மேற்பட்ட விலங்கினங்களையும், தாவர வகைகளையும் உணவாகக் கொள்வதால் உணவுச் சங்கிலிகள் தனித்தனியாக அமைந்திருப்பதில்லை. அவை ஒன்றுடன் ஒன்று தொடுக்கப்பட்டு வலை போன்று அமைந்துள்ளன. ஒன்றுடன் ஒன்று தொடுக்கப்பட்ட ஒரு கூட்ட உணவுச் சங்கிலிகள் உணவுவலை எனப்படும்.

## 2.5. பிராணிகளின் நிலைத்திருத்தலுக்கு மனிதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகத் தேடியறிதல்.

ஒரு புலவர் பாடினார்; "எருதுகள் புலம்புவதாக; " ஏன் தெரியுமா? இப்போது மோட்டார்வண்டி உபயோகத்தில் இருக்கின்றன அல்லவா? அப்படியிருந்தும் மனிதன் தன்னை வண்டி இழுக்கவும் பாரம் சுமக்கவும் வைத்திருக்கின்றானே! தமக்கு விடுதலை இல்லை என்று அழுதனவாம்.

மனிதன் இன்றும் தனது தேவைகளுக்கு மிருகங்களை வைத்து வேலை வாங்குகின்றான். மான், மரை, பன்றி முதலியனவற்றை இறைச்சிக்காகக் கொன்று குவிக்கின்றான். காட்டிலே சுதந்திரமாகத் திரிந்த யானையைப் பிடித்து வந்து பழக்கிப் பாரமான வேலைகளைச் செய்விக்கின்றான்.

கிளி, நாகணவாய், முதலிய பறவைகளைப் பிடித்து வந்து கூட்டில் அடைத்து வளர்க்கின்றான். அவை சுதந்திரம் இன்றி வருந்துகின்றன.

கொம்பு, தோல், இறகு முதலியவற்றின் பொருட்டும் பிராணிகளை அழிக்கின்றான். விலங்குகளின் வாழ்விடமாக அமைந்த காடுகளை அழித்து அவற்றின் அமைதியைக் கெடுக்கின்றான்.

மான், கடலாமை போன்ற பிராணிகள் இன்று அருகிக்கொண்டே செல்கின்றன. முற்காலத்தில் நமது நாட்டில் வாழ்ந்த அபூர்வமான விலங்குகள் இறந்து அழிந்தொழிந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

மனிதன் தனது வசதிகளுக்காகப் பீடைகொல்லிகளையும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துகின்றான். அதனாலும் பல பிராணிகள் அழிந்தொழிந்து போகின்றன.

பிராணிகளுக்கு உதவும் முகமாக அரசார் பல இடங்களில் விலங்குப் புகலிடங்களை அமைத்துள்ளார்கள். அவற்றை நல்லவண்ணம் பரிபாலித்து வருகின்றன.

சட்டத்தின் மூலம் மான், சிறுத்தை முதலிய விலங்குகளை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது. நாம் பிராணிகள் இடத்தில் அன்பாய் இருத்தல் வேண்டும்.

### 2.1. நீங்கள் கற்றவை :

1. மிருகம், பறவை, ஊர்வன, பூச்சி, புழு எல்லாமே பிராணிகள்.
2. அவற்றையெல்லாம் விலங்கு என்ற பெரும்பிரிவில்' அடக்கிவிடலாம்.
3. நீர்வாழ்வனவும் விலங்குகளே!
4. பசு, நாய், பூனை, எருமை முதலியன வீட்டு விலங்குகள்.
5. சிங்கம், புலி, கரடி காட்டு விலங்குகள்.
6. பறவைகளிலும் வீட்டுப்பறவை, காட்டுப்பறவை எனும் பிரிவுகள் உண்டு.
7. பாம்பு, ஓணான் முதலியன ஊர்வன. அவற்றை நகருயிர்கள் என்றும் கூறுவர்.
8. மீன், திமிங்கலம், முதலியன நீர்வாழ்வன.
9. தவளை, ஆமை முதலியன நிலத்திலும் நீரிலும் வசிப்பன. அவை ஈரூடக பிராணிகள் எனப்படும்.

### 2.2. நீங்கள் கற்றவை :

1. உணவு, உடை, உறையுள் என்பன அடிப்படைத் தேவைகள்.
2. உணவில் தானியம், காய்கறி, இறைச்சி, மீன், பால், பழம், முட்டை முதலியனவும் இடம் பெறுகின்றன.
3. மனிதனுக்குப் பலவகைப் பானங்களும் தேவைப்படுகின்றன.
4. இறைச்சிக்காக வெள்ளாடு, செம்மறியாடு, கோழி முதலிய விலங்குகள் வளர்க்கப்படுகின்றன.
5. பசு, எருமை முதலியன பால் தருகின்றன. ஒட்டகத்தின் பாலும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

### 2.3. நீங்கள் கற்றவை :

1. விலங்குகள் தாவரம் உண்ணிகள், ஊன் உண்ணிகள், அனைத்தும் உண்ணிகள் என வகுக்கப்படுகின்றன.
2. அவை உண்ணும் உணவுக்கேற்ப உடலுறுப்புக்கள் இசைவாக்கம் பெற்றுள்ளன.
3. ஆடு, மாடு முதலிய பிராணிகள் தாவர உணவை உண்ணுகின்றன.
4. சிங்கம், புலி, கழுகு முதலிய பிராணிகள் ஊனுணவை உண்ணுகின்றன.
5. நாய், பூனை, எலி முதலியன இருவகை உணவுகளை உண்ணுகின்றன.

## 2.4. நீங்கள் கற்றவை :

1. எருமை முதலியன வண்டி இழுக்கவும் வயலை உழவும் பயன்படுகின்றன.
2. இக்காலத்தில் எந்திரத்தின் உதவியால் வாகனங்கள் ஓட்டப்படுகின்றன. வயல்கள் உழப்படுகின்றன.
3. சிலர் இறைச்சிக்காக மான், மரை, பன்றி முதலியவற்றைக் கொல்கின்றார்கள்.
4. மனிதன் யானையைப் பிடித்து பழக்கி வேலை வாங்குகிறான்.
5. கிளி, நாகணவாய் முதலிய பறவைகளும் பூனை, நாய் முதலிய மிருகங்களும் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படுகின்றன.
6. விலங்குகளின் உரோமம், தோல், கொம்பு, எலும்பு, இறகு முதலியனவும் பயனுள்ள பொருள்களாம்.
7. இக்காலத்தில் மான், கடலாமை போன்ற பிராணிகள் அருகிக்கொண்டு போகின்றன.
8. பீடைகொல்லிகளாலும் பல பிராணிகள் அழிந்து போகின்றன.
9. நமது நாட்டில் "வில்பத்து" "யால" முதலிய இடங்களில் விலங்குப் புகலிடங்கள் உண்டு.
10. மான், யானை, சிறுத்தை முதலிய விலங்குகளை வேட்டையாடுவது சட்டமூலம் தடுக்கப்பட்டுள்ளது.

### மீட்டற்பயிற்சி

**அம்புக்குறியால் இணைத்துக்காட்டுக.**

| | | |
|---|---|---|
| i. | பூவில் தேனை உண்கின்றது | நாகணவாய் |
| ii. | காட்டு விலங்குகளுள் ஒன்று | தவளை |
| iii. | செல்லப் பிராணிகளில் ஒன்று | பாம்பு |
| iv. | நகர் உயிர்களுள் ஒன்று | வண்டு |
| v. | நிலத்திலும் நீரிலும் வாழ்வது | சிறுத்தைப்புலி |

**செவ்விய விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**

i. இறைச்சிக்காக வளர்க்கப்படும் பிராணி : (கிளி / பன்றி / குயில்)
ii. மத்தியகிழக்கில் உள்ளவர்களுக்குப் பால்தரும் பிராணி -: (பசு / ஆடு / ஒட்டகம்)
iii. விலங்குகளின் தோலினால் செய்யப்படும் பொருள் ஒன்று : (கைப்பை / உண்கலம் / எழுதுகோல்)
iv. வெட்டும் பல்லுள்ள பிராணி : (ஆடு / நாய் / கிளி)
v. தாவரபட்சணி ஒன்று : (புலி / எலி / பசு)

**செயற்பாடு :**

i. ஆசிரியரும் மாணவரும் மிருகக் காட்சிச் சாலைக்குச் செல்லுதல்.
ii. பிராணிகளின் பல், அலகு, இறகு முதலியவற்றைச் சேகரித்தல்.
iii. பறவைகளின் இறகை எடுத்துச் சேர்த்து ஒட்டுதல்.
iv. மூவகையான உணவுண்ணும் விலங்குகளை அட்டவணைப்படுத்தல்.

# 3. சுற்றாடலின் கோலங்கள்

## 3.1. பிராணிகளின் நடத்தைக் கோலங்களை இனங்காணுதல்.

கா! கா! என்று கத்தும் காகம்; கொக்கர கோ என்று கூவும் சேவல்; பறந்து செல்லும் பச்சைக்கிளி; தோகை விரித்தாடும் மயில்; துள்ளிக் குதிக்கும் கன்றுக்குட்டி; வாலைக் குழைத்துவரும் நாய்; இவ்வாறு நாம் காணும் காட்சிகள் கொஞ்சம் அலவே!











மனிதன் தொழில்களில் ஈடுபடுகிறான்; பள்ளிமாணவர் கோல உடை அணிந்து செல்கின்றனர். மிருகங்கள் நடந்து செல்கின்றன. பறவைகள் கூட்டங் கூட்டமாக வானில் செல்கின்றன. எறும்புகள் வரிசை வரிசையாக நிலத்தில் ஊர்ந்து செல்கின்றன.

மரங்களையும் மலர்ச் செடிகளையும் ஒழுங்குபட நாட்டுகின்றோம். வீட்டுத் தளபாடங்கள், இருக்கைகள் எல்லாமே சீராக வைக்கப்படுகின்றன. எங்கும் எவற்றிலும் கோலத்தைக் காண்கின்றோம்.

விலங்குகளைப் பாருங்கள்! அவை தத்தமக்கென விதவிதமான நடத்தைகளைக் கொண்டிருக்கின்றன. காகத்தைக் கவனியுங்கள்! அது காலையில் எழுந்திருக்கின்றது; இரை தேடுகின்றது; மாலையில் குளிக்கின்றது; பின்தன் கூட்டை அடைகின்றது. உற்றாரோடு உண்கின்றது, உறவாடுகின்றது, துயில்கின்றது, சுற்றுப்புறங்களைத் தூய்மை செய்கின்றது. அதனால் ஆகாயத்தோட்டி எனவும் படுகிறது. " காக்கையின் குணத்தைக் கற்கவேண்டும் தானே! "

பொழுது சாய்ந்ததும் இருள் சூழ்கின்றது; பிராணிகள் தத்தம் வதிவிடங்களை நாடிச் செல்கின்றன. எல்லாமே அமைதியாக உறங்குகின்றன.

மாலையில் வானத்தைப் பாருங்கள்! வான்மீன்களும் வளர்மதியும் அங்கு தெரிகின்றன. அவற்றிடையேயும் கோலம் உண்டு. ஒலி, இசை பல்வேறு அமைப்புகள் எங்குமே கோலம் உண்டு.

## 3.2. சுற்றாடலில் வேறுசில கோலங்களை இனங்காணுதல். காலநிலை மாற்றம், வெப்பமேற்றுவதால் பொருட்களில் ஏற்படும் மாற்றம்.


காலையில் சூரியன் உதிக்கின்றான். மெல்ல மெல்ல உயர்ந்து செல்கின்றது. மத்தியான நேரத்தில் வானிலே உச்சிக்கு மேலே நிற்கின்றான். பின்னர் வெப்பம் குறைந்து கொண்டே செல்கின்றது. அவன் மாலையில் மறைகின்றான்.




ஒரு நாளை அதிகாலை, காலை, நண்பகல், மாலை, நடுஇரவு என்றெல்லாம் பிரிப்பார்கள். சில வேளைகளில் வானம் வெளிப்பாக இருக்கும். சில வேளைகளில் மூடமாக இருக்கும். மூடமான வேளைகளில் வெப்பம் குறைவாக இருக்கும்.


வெப்பம் கூடுதலான வேளைகளில் நீர்நிலைகள் சூடாகும். நீர் சூட்டினால் ஆவியாகி மேலெழும். ஆவி மேலெழுந்து முகிலாகி குளிர்ந்து மழை பொழிகின்றது.

எமது சுற்றாடலில் காணப்படும் பொருள்களைத் திண்மம், திரவம், வாயு என மூன்று பகுதிகளாகப் பிரிக்க முடியும். மெழுகு போன்ற திண்மப் பொருள்களை வெப்பமேற்றும் போது அவை திரவமாக மாறுகின்றன. நீர் போன்ற திரவங்களை வெப்பமேற்றும் பொழுது அவை வாயுவாக மாறுகின்றன. திண்மப் பொருள்கள் விரிவடைகின்றனவா? என்பதை அறிய, நீங்கள் புகைவண்டிப் பாதையைக் கண்டிருப்பீர்கள். அங்கே இரும்பினால் பாதை போடுவார்கள். இரும்புப் பாதையை தண்டவாளம் என்று கூறுவதும் உண்டு. தண்டவாளத்தைப் பொருத்தும்போது சிறிது வெளிவிட்டுப் பொருத்துகிறார்கள். ஏன் அவ்விதம் செய்கிறார்கள்? வெப்பத்தால் விரிவடைந்த இரும்பு வளைந்துவிடாமல் இருப்பதற்காக அவ்விதம் செய்கிறார்கள்.





சூரிய ஒளியின் நேரடித் தாக்கம் பொருட்களின் மேல் ஏற்படும்போது பொருட்கள் சூடேறுவதைக் கவனியுங்கள்.



1. கைக்குட்டை ஒன்றை நிழலிலும், சூரிய வெப்பத்திலும் வைத்தபின் தொட்டுப் பார்த்தால் சூரிய வெப்பத்தில் இருந்த கைக்குட்டை சூடேறியிருப்பதை அவதானியுங்கள்.
2. காரை நிழலிலும் வெய்யிலிலும் நிற்பாட்டி வைத்து அதன் வேறுபாட்டை உணர்ந்து கொள்ளலாம். இதேபோல் வெப்பத்தைத் தொட்டு உணரலாம்.
3. நீங்கள் வெய்யிலில் நிற்கும்பொழுது குடை கிடைத்தால் அதனைப் பாவித்து சூரிய ஒளியின் நேரடித் தாக்கத்தை உணரலாம்.

வண்டிச் சக்கரங்களுக்கு இரும்புவளையம் இட்டிருப்பார்கள். மரச்சில்லில் அதை இறுக்குமுன் சூடுகாட்டி வெப்பமூட்டுவர். இரும்புவளையம் விரிவடைகின்றது. மரச்சில்லில் அதனைப் பொருத்துவார்கள். பொருந்திய சில்லின் மேலே நீரூற்றிக் குளிரவைப்பார்கள். இரும்புவளையம் சுருங்கி கெட்டியாகச் சில்லில் பிடித்துக் கொள்ளும்.



சில்லுடன் உலோக வளையத்தை இணைத்தல்

வெப்பத்தின் நிலையை அளப்பதற்கு வெப்பமானி இருக்கின்றது. அதன் அடிப்பாகத்தில் பாதரசத்தை வைத்திருப்பார்கள். வெப்பநிலைக்கு ஏற்ப அது விரிவடைகின்றது. கீழே செல்சியஸ் வெப்பமானி தரப்பட்டிருக்கின்றது. அதன் ஊற்றுநிலை 32 செல்சியஸ் கொதிநிலை ஆகும்.




செல்சியஸ் வெப்பமானி

**3.3. மனிதனின் செயற்பாட்டின் காரணமாகச் சுற்றாடலின் கோலங்கள் மாற்றமடையும் விதத்தை விளங்கிக்கொள்ளல்.**


நாம் வாழும் சூழல் அழகியது. எம்முடன் மிருகம், பறவை, ஊர்வன, பூச்சி, புழு முதலியனவும் வாழ்கின்றன; பல்வேறு வகையான தாவரங்களும் காணப்படுகின்றன. எங்கோ ஒரு நாட்டில் விலங்கு, பறவை முதலியவற்றுக்கு ஆலயம் அமைத்துள்ளார்களாம்.


முன்பெல்லாம் மனிதன் விவசாயத்தை நம்பி வாழ்ந்தான். இப்பொழுது விஞ்ஞான அறிவு மிகவும் உயர்ந்து விட்டது. புதிய எந்திரங்கள் தோன்றி விட்டன. தொழிற்சாலைகள் பெருகியுள்ளன.

மனித செயற்பாட்டின் காரணமாக அணுப் பரீட்சைகளினாலும் ஏனைய பரிசோதனைகளினாலும் நம்மைச் சூழ்ந்திருக்கும் வளி அசுத்தமாகின்றது. தொழிற்சாலைகளும் வானூர்திகளும் எழுப்பும் இரைச்சல் பல தீய விளைவுகளுக்கு காரணமாகின்றது. மிக புராதன காலந்தொட்டு நெல் பயிர் செய்யப்படும் நமது நாட்டில் இயற்கையாகவே கிருமிகளும் பூச்சிகளும் அழிக்கப்படுகின்றன. பயிர்களை நாசஞ் செய்த பூச்சிகளை கொன்றழிக்கும் மீன் கொத்திகள், நெற் குருவிகள் போன்ற சின்னஞ்சிறிய பறவைகள் பலவகையான நாரைகள் விவசாயியின் தோழர்களாகக் கருதப்பட்டன. இன்று மக்கள் நவீன பூச்சி கொல்லிகளை உபயோகிப்பதால் மண்ணினுள் புழுக்களும் அழிகின்றன. இவற்றை தின்னும் பறவைகளும் அழிகின்றன. மண் வளமும் மாறுகின்றது.

இன்றைய மக்களுக்காகவும் அவர்களின் வருங்கால சந்ததிக்காகவும் நாம் வாழும் உலகின் சுற்றாடலைச் சிறந்த நிலையில் வைத்திருக்க நாம் யாவரும் கடமைப்பட்டுள்ளோம். நீர்ப்பாதைகளில் அழுக்குநீர் விடப்படுகின்றது. இதனால் நீர்த் தேக்கங்களில் நீர் மாசுறுகின்றது. பூச்சி கொல்லிகள், இரசாயனப்பசளைகள் ஆகியன நீருடன் சேர்தல், தொழிற்சாலைகளில்

இருந்து வெளியேறும் அழுக்குகள் நீருடன் கலந்து நீர் வளமும் மாறுகின்றது. சமுத்திரங்களும் கப்பல்களில் இருந்து வெளியேறும் இரசாயனப் பொருள்கள் காரணமாக மாசுறுகின்றது. இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களும் கடல்த் தாவரங்களும் அழிகின்றன.





சூழல் அழுக்காதல்

புதியபுதிய குடியிருப்புகள் தோன்றுகின்றன. வீதியோரங்கள் எங்கும் வீடுகள் எழுந்துள்ளன. முகட்டு வீடுகள் மறைகின்றன. வானை முட்டத் தொடர் மாடிகள், அடுக்குமனைகள் எழுந்து நிற்கின்றன.

காற்றோட்டம், வெளிச்சம் முதலியன போதிய அளவு கிடைப்பதில்லை. கழிவுப் பொருள்கள் மிகுந்துவிட்டன. ஆங்காங்கே சாக்கடைநீர் தேங்கி நிற்கின்றது. சூழல் மாசடைந்து விட்டது. மழைநீர் ஓட வழியில்லை.

வீதிகளில் போக்குவரத்துச் சாதனங்கள் மிகுந்துள்ளன. அவை வெளியிடும் புகைமண்டலம் வளியை மாசுபடுத்துகின்றது.

விடுதலையுடன் திரிந்த விலங்குகள் குறுகிய இடத்தில் வசிக்கவேண்டி உள்ளது. சுதந்திரமாகத் திரிந்த கிளி முதலிய பறவைகள் கூட்டில் கிடந்து தவிக்கின்றன. நிழல்தரு மரங்களைக் காணோம்.

பொதுப்படக் கூறின் அழகிய தூய்மையான சுற்றாடலின் கோலங்கள் மனித செயற்பாட்டினால் மாற்றமடைகின்றன.

### 3.1. நீங்கள் கற்றவை :

1. காலையில் எழுந்தது முதல் இனிய காட்சிகளைக் காண்கின்றோம்.
2. மனிதன் முதலான அனைத்துயிர்களும் பல்வேறு தொழில்களில் ஈடுபடுதல்.
3. மரம் - செடிகளை ஒழுங்குபட நடுவதில் கோலம் உண்டு.
4. சூரியன் உதிக்கும்போதும் சாயும்போதும் அழகிய எழிற்கோலங்கள் உண்டு.
5. வானத்துச் சந்திரனும் வளர்மதியும் விண்மீன்களும் எழிற்கோலத்தனவே.
6. ஓசை, ஒலி, நேரம் முதலியவற்றிலேயும் கோலம் உண்டு.
7. கோலம் இயற்கையாயும் செயற்கையாயும் அமைவதுண்டு.

**3.2. நீங்கள் கற்றவை :**

1. வெப்பம் ஏறுதலும் இறங்குதலும் எல்லாம் கால அளவில் நிகழ்கின்றன.
2. ஒரு நாளை அதிகாலை, காலை, நண்பகல், மாலை, நடுஇரவு என்றெல்லாம் வகுத்துள்ளனர்.
3. வான் சில காலங்களில் வெளிப்பாகவும் சில காலங்களில் மப்புமந்தமாகவும் காணப்படுவது உண்டு.
4. பொருள்களைத் திண்மம், திரவம், ஆவி என வகுப்பர். நீராவி குளிர்ந்து மழையாகப் பொழிகின்றது.
5. வெப்பமேற்றுவதால் பொருள்கள் விரிவடைகின்றன. குளிரினால் சுருங்குகின்றன.
6. தண்டவாள இடைவெளி விரிவின்போது வளைவடையாமல் இருத்தற்காக வைக்கப்படுகின்றது.
7. வண்டிற் சில்லுக்கு இரும்பு வளையத்தை வெப்பமேற்றி விரியச் செய்து இறுக்குகிறார்கள்.
8. வெப்ப உயர்வு இழிவுகளை அளக்க வெப்பமானி உண்டு.

**3.3. நீங்கள் கற்றவை :**

1. மனிதனுடன் கூட விலங்குகள் வாழ்கின்றன.
2. முன்பு விவசாயத்தில் ஈடுபாடு கொண்ட மனிதன் மரத்தினால் ஆன உழவு கருவியை - கலப்பையைப் பயன்படுத்தினான்.
3. பாரிய கைத்தொழில்கள் வளர்ந்துவிட்டன.
4. பாரிய அடுக்கு மாளிகைகள் தோன்றிவிட்டன.
5. தொழில்மாற்றங்களால் சூழல் மாசடைந்துவிட்டது.
6. வளங்களின் விசாலம் இன்று குறுகிவிட்டது.
7. கனிதரு மரங்கள் அழிக்கப்படுகின்றன.
8. சூழலை எந்நிலையிலும் காப்போம் என்று சத்தியம் செய்வோம்.

## மீட்டற்பயிற்சி

**சுருக்கமான விடை எழுதுக.**

i. எமது சூழலில் பூச்சிவகைகள் சில கூறுக.

.......................................................................................................................

ii. விஞ்ஞான விருத்தியால் வந்த நன்மைகள் 2 கூறுக.

.......................................................................................................................

iii. சாக்கடை நீரினால் தோற்றும் தீமைகள் எவை?

.......................................................................................................................

iv. வளிகெடாமல் இருக்க 2 வழிவகை கூறுக.

.......................................................................................................................

v. சூரியனைச் சுற்றிச்சுற்றிவரும் கிரகங்களைக் கூறுக.

.......................................................................................................................

**செவ்விய விடையைத் தெரிவுசெய்க.**

i. அதிகாலையில் நாம் கேட்கும் ஒலி :
(1) சேவல் கூவுதல் (2) துப்பாக்கி வேட்டு (3) சதங்கை ஒலி

ii. மாலையில் குளித்து வீட்டை அடையும் பறவை :
(1) கிளி (2) குயில் (3) காக்கை

iii. வெப்பத்தின் நிலையை அளக்க உதவும் கருவி :
(1) மழைமானி (2) வெப்பமானி (3) பாரமானி

**சந்திரனைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.**

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

**செயற்பாடு :**


i. விவசாயத்துடன் தொடர்புபட்ட எந்திரங்களின் படங்களை வெட்டி ஒட்டுதல்.

ii. நகரத்தில் உள்ள அடுக்கு மாளிகையொன்றைச் சென்று பார்வையிடல்.

## 4. புவியும் வானும்

### 4.1. சதுப்பு நிலம், நீர்த்தேக்கம் என்பவற்றுடன் தொடர்புபட்ட சுற்றாடற் பண்பு இனங்காணல்.

நாம் புவியில் வாழ்கின்றோம். புவி உருண்டை வடிவானது. அதன் மேற்பரப்பில் பெரும்பகுதி நீராக இருக்கின்றது. சிறுபகுதி நிலமாக உள்ளது. பெரிய நீர்ப்பகுதி சமுத்திரம் எனப்படும். சமுத்திரம் உவர்நீராக இருக்கும். சிறிய உவர் நீர்ப்பகுதி கடல் என்றும் கூறப்படும்.



நம்மைச் சூழ்ந்து நீர், மண், மலை, தாவரம், விலங்கு முதலிய பலவுள. பூமி பலவகையில் மாசடைகின்றது.

நிலமும் இடத்துக்கு இடம் வேறுபடுகின்றது. அவ்வாறே அவற்றில் வளரும் தாவரங்களும் வேறுபடுகின்றன. மணல் நிலங்களில் தென்னை, பனை, பூவரசு முதலிய மரங்களும் சிறு பற்றைகளும் வளருகின்றன. கடற்கரைகளில் தாழை, பொற்பத்தை முதலியன உண்டாகின்றன. களிமண் நிலங்களில் நீர் தேங்கி நிற்பதினால் அவை பெரும்பாலும் சதுப்பு நிலங்களாகவே இருக்கும். அங்கே கோரை, பன்புல் முதலியன வளர்கின்றன.

நாம் வாழும் தேசம் இலங்கை. இது இந்தியத் துணைக் கண்டத்துக்குத் தெற்கில் இருக்கின்றது. இந்தியாவில் இருந்து பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கடற்கரை ஓரம் பல்வேறு இயல்புகளை உடையது.

சில இடங்களில் களப்பு உண்டு; சில இடங்களில் குடாக்கள் உண்டு; சில இடங்களில் முனைகள் உண்டு; சில இடங்களில் உவர் நீர்த்தேக்கம் உண்டு; சில இடங்களில் சதுப்பு நிலங்கள் உண்டு. ஆறுகள் கலக்குமிடங்களில் கழிமுகங்களில் ஆற்றிடைமேடு உண்டு.

களப்பு, மூன்று பக்கமும் தரையினால் சூழப்பட்டிருக்கும். அது ஒடுங்கிய வாய்மூலம் கடலோடு தொடுக்கப்பட்டிருக்கும். மட்டக்களப்பு நீர்த்தேக்கம் முதலியன அத்தகையன.

குடா, களப்பினைப் போலவே மூன்று பக்கமும் தரை இருக்க, அகன்ற நீர்வாயினால் தொடுக்கப்பட்டிருக்கும். திருகோணமலைக் குடா போல்வன அத்தகையன.

கரையோரத்தில் சிற்சில பகுதிகளில், கடலைத் தொடுத்து உவர்நீர்த் தேக்கங்கள் காணப்படும். அவை உப்பளம் எனப்படும். புத்தளம், ஆனையிறவு, அம்பாந்தோட்டைப் பகுதிகளில் உப்பளங்கள் உண்டு.

கடற்கரைகளில் வற்றுப்பெருக்கு, மழைவெள்ளம் முதலியவற்றால் நீர் தேங்கி நிற்பதும் உண்டு. அவற்றைச் சதுப்பு நிலம் என்பர். அங்கு, கண்டல், தாளை போன்ற தாவரங்கள் காணப்படும்.

ஆறுகள் கடலோடு கலக்கும் இடத்தைக் கழிமுகம் என்பர். அங்கு வண்டல்கள் நிறைந்து காணப்படும்.

**4.2 ஒரு தீவு என்ற வகையில் இலங்கையின் அமைவை இனங்காணுதல்.**

பூமியில் இந்து சமுத்திரம், ஆட்டிக் சமுத்திரம், அந்தாட்டிக் சமுத்திரம், அத்திலாந்திச் சமுத்திரம், பசுபிக் சமுத்திரம் எனப் பெருங்கடல்கள் இருப்பதை அறிவீர்கள்.

அவற்றுள் இந்துசமுத்திரம், வடக்கே ஆசியாக் கண்டத்தையும், தெற்கே அந்தாட்டிக் கண்டத்தையும், கிழக்கே அவுஸ்திரேலியாக் கண்டத்தையும், மேற்கே ஆபிரிக்காக் கண்டத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. "இந்து சமுத்திரத்தின் நித்திலம்" என வர்ணிக்கப்படும்





இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இது நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். தீவு நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட சிறு நிலப்பரப்பாகும்.

இலங்கையையும் இந்தியாவையும் பாக்குநீரிணை என்னும் ஒடுங்கிய கடற்பகுதி பிரிக்கின்றது.

இலங்கையின் வட கரையை அடுத்து நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணைத்தீவு, நயினாதீவு, காரைதீவு, மண்டதீவு மற்றும் கச்சதீவு முதலிய தீவகங்களும் உண்டு.

இந்து சமுத்திரத்தில் இலங்கைக்கு அப்பாலும் சில தீவுகள் உண்டு. அவை மாலைதீவு, அந்தமான்தீவு, நிக்கோபார்தீவு முதலியனவாம்.

இலங்கைக்கு அண்மையில் இந்தியா, பாகிஸ்தான், வங்காளம், நேபாளம், பூட்டான் முதலிய பல நாடுகள் இருக்கின்றன.

உலக நாடுகளைப் பொறுத்தவரை இலங்கை முக்கியமான இடத்தை வகிக்கின்றது. அது உலகக் கப்பற் போக்குவரத்துப் பாதையில் இந்துசமுத்திரத்தின் நடுவில் இருக்கின்றது. கப்பல்கள் உணவு, நீர், எரிபொருள் முதலியவற்றுக்காகக் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துபோகவேண்டி உள்ளது.

இலங்கையில் உயர்ந்த மலைகளும் நீண்ட ஆறுகளும் உண்டு. பேதுருதாலகால மலை அதிகம் உயர்ந்தது. மகாவலி ஆறுகளில் அதிகம் நீண்டது.

நமது நாட்டில் தேயிலை, இறப்பர், தென்னைப் பிரயோசனமும் மற்றும் விளைபொருள்களும் உண்டு. இரத்தினக்கல், காரியம் என்பனவும் கிடைக்கின்றன.

நீர்வளம், நிலவளம் செறிந்த இந்நாடு இன்று கைத்தொழில் உற்பத்தியிலும் முன்னேறிச் செல்கின்றது.

### 4.3. நட்சத்திரக் கோலங்களை இனங்காணுதல்.

பூமியைச் சுற்றி வானம் அமைந்துள்ளது. வானிலே, நட்சத்திரங்களையும் கோள்களையும் உபகோள்களையும் காண்கின்றோம். சூரியன் ஒரு நட்சத்திரமாகும். நட்சத்திரங்களை விண்மீன்கள் என்றும் அழைப்பார்கள். கோள்களையும் கிரகங்கள் என்று கூறுவதுண்டு.

புதன், வெள்ளி, பூமி, சனி, யூரானேஸ், நெப்ரியூன், புளூட்டோ முதலியன கோள்களாகும். சந்திரன் பூமியைச் சுற்றிவரும் ஓர் உபகோளாகும். பூமிக்கு உபகோள் இருப்பதுபோலச் செவ்வாய், வியாழன், யூரானேஸ், நெப்ரியூன் முதலியவற்றுக்கும் துணைக்கோள்கள் உண்டு.



மேகங்களும் சந்திரனும் அற்ற இருண்ட இரவொன்றில் ஆகாயத்தைப் பாருங்கள். எண்ணற்ற விண்மீன்களை நீங்கள் காணமுடிகிறதல்லவா? இவற்றுள் ஒரு கோளுக்கும் விண்மீனுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை எப்படிக் கண்டு கொள்வீர்கள்? விண்மீன் மின்னிமின்னி மிளிரும் தன்மை வாய்ந்தது. ஆனால் கோள் அப்படியன்றி ஒரே சீராகப் பிரகாசிக்கும் தன்மையுடையது. மேலும் கோள்கள் ஓரிடத்தில் நிலைத்து நிற்காது நகர்ந்து கொண்டிருப்பதையும் காண்பீர்கள்.

சூரியன் ஒரு பெரிய நட்சத்திரம் என்று அறிவோம். அது பந்து போன்றது. வெகுதொலைவில் இருப்பதனால் எமக்குச் சிறிதாகத் தெரிகின்றது. சூரியனையும் கோள்களையும் சேர்த்து சூரியமண்டலம் அல்லது சூரியகுடும்பம் என்று அழைப்பார்கள்.

வானிலே கூட்டங்கூட்டமாக நட்சத்திரங்கள் இரவிலே மின்னுகின்றன. இவற்றில் இருந்து ஒளியைப் பூமியைச் சூழ்ந்துள்ள காற்றுமண்டலம் சிதறச் செய்கின்றன. அதனால் அவை மின்னுவது போலத் தெரிகின்றன. சூரியன் ஏனைய நட்சத்திரங்களை விடப் பூமிக்கு மிக அருகில் இருக்கின்றது. அதனால் தெளிவாகத் தெரிகின்றது. சூரியனைவிடப் பெரிய நட்சத்திரங்கள் உண்டு. சூரிய ஒளியில் ஏனைய நட்சத்திரங்க்ள் மங்கிவிடுகின்றன. அதனால் அவற்றை நாம் காணமுடிவதில்லை. நம்முன்னோர், நட்சத்திரங்களை அச்சுவினி தொடக்கம் ரேவதி ஈறாக 27 ஆகக் கணக்கிட்டனர். இவற்றிற்கு வடிவங்களைக் கற்பித்தனர்.




வானத்தை மேகங்கள் இல்லாத இரவில் பார்த்தால், விண்மீன்கள் பற்பல சிறு கூட்டங்களாகச் சிதறிக் கிடப்பதைக் காணலாம். சில விண்மீன் கூட்டங்களைச் சிறிது கற்பனை செய்து பார்த்தால், வேடிக்கையான உருவங்களை உடையனவாகத் தோன்றுகின்றன. அவற்றை விண்மீன் தொகுதி என்று கூறுகிறோம். நம் முன்னோர்கள் பல விண்மீன் தொகுதிகளை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள அவற்றிற்குப் பெயர் வைத்திருக்கின்றனர். அவற்றுள் ஒன்றான சப்தரிஷி மண்டலம் என்னும் விண்மீன் தொகுதியின் உருவம் ஒரு கரடியின் உருவத்தை ஒத்திருப்பதனால், இதற்குப் பெருங்கரடி விண்மீன்



தொகுதி என்று மேலை நாட்டினர் பெயரிட்டனர். நம் நாட்டில் நம் முன்னோர்களோ இதன் ஏழு விண்மீன்களும் ஏழு முனிவர்களைக் குறிப்பதாகக் கொண்டு, 'சப்தரிஷி மண்டலம்' என்று இத்தொகுதிக்குப் பெயரிட்டனர்.

நட்சத்திரம் கோள் முதலியவற்றிடையே ஒழுங்கு உண்டு. வானத்தை இரவில் அண்ணார்ந்து பாருங்கள். அங்கு நாம் காணும் கோலம் மிக்கமகிழ்ச்சியூட்டும்.

**4.1. நீங்கள் கற்றவை :**

1. பூமியின் மேற்பரப்பில் பெரும்பகுதி நீர்; சிறுபகுதி நிலம்.
2. பெரிய உவர் நீர்ப்பகுதி சமுத்திரம்; சிறிய உவர் நீர்ப்பகுதி கடல்.
3. நம்மைச் சூழ நீரும் மண்ணும் மலையும் விலங்கும் தாவரங்களும் உண்டு.
4. இலங்கை இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்து பாக்குநீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளது.
5. இலங்கைக் கடற்கரையோரத்தில் களப்பு, குடாக்கடல், முனை, உவர் நீர்த்தேக்கம், சதுப்புநிலம், கழிமுகம், ஆற்றிடைமேடு என்பன உண்டு.
6. உவர் நீர்த்தேக்கம் உப்பளம் என்று கூறப்படும்.
7. சதுப்பு நிலங்களில் மழைநீர், வெள்ளம் முதலியன தேங்கிநிற்கும்.
8. அங்கு தாழை, கண்டல், போன்ற தாவரங்கள் காணப்படும்.
9. கழிமுகத்தில் ஆறுகள் கடலுடன் கலக்கின்றன.

**4.2. நீங்கள் கற்றவை :**

1. இந்து, பசுபிக், அத்திலாந்திக், ஆட்டிக், அந்தாட்டிக் எனச் சமுத்திரங்கள் ஐந்து உண்டு.
2. இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
3. நான்கு புறமும் கடல் சூழ்ந்த சிறு நிலப்பரப்பு தீவு எனப்படும்.
4. இலங்கையின் வடகரையை அடுத்து நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு, மண்டைதீவு, கச்சதீவு என்பன உண்டு.
5. இலங்கைக்கு அப்பால் மாலைதீவு, அந்தமான்தீவு முதலியன உண்டு.
6. இலங்கை பல்வேறு காரணங்களால் உலக நாடுகளில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.
7. இங்கு அதி உயர்ந்த பேதுருதாலகால மலையும் வேறு மலைகளும் உண்டு.
8. அதி நீண்ட மகாவலி கங்கையும் மற்றும் ஆறுகள் பலவும் உண்டு.
9. இங்கிருந்து தேயிலை, இறப்பர், கொக்கோ, தெங்குப் பிரயோசனம் ஆகியன ஏற்றுமதியாகின்றது.

**4.3. நீங்கள் கற்றவை :**

1. வானிலே நட்சத்திரங்களையும் கோள்களையும் உபகோள்களையும் காணலாம்.
2. சூரியன் ஒரு பெரிய நட்சத்திரம். வெகு தொலைவில் இருப்பதால் சிறிதாகத் தெரிகின்றது.
3. புதன், வியாழன், வெள்ளி, பூமி, சனி, யூரானேஸ், நெப்டியூன், புளூட்டோ முதலியன கோள்களாகும்.
4. பூமிக்கு உபகோள் சந்திரன்; அதுபோல் செவ்வாய், வியாழன் முதலியவற்றுக்கும் உபகோள்கள் உண்டு.

5. சூரியனும் கோள்களும் சேர்ந்தது சூரியமண்டலம்.
6. நட்சத்திரங்களுக்குச் சுயஒளி உண்டு; கிரகங்களுக்கு சுயஒளி இல்லை.
7. சூழ்ந்துள்ள காற்றுமண்டலம் ஒளியைச் சிதறச் செய்வதால் அவை நட்சத்திரங்கள் மின்னுவது போலத் தெரிகின்றன.
8. சூரியனைக் காட்டிலும் பெரிய நட்சத்திரங்களும் உண்டு.
9. நம்முன்னோர் அண்மையில் உள்ள நட்சத்திரங்களை அச்சுவினி, பரணி, சந்திகை முதல் 27

## மீட்டற்பயிற்சி

**பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

i. மூன்று பக்கமும் தரையினால் சூழப்பட்டிருக்கும் இடம் : (முனை / களப்பு / குடா)
ii. ஆறு கடலோடு கடக்கும் இடம் : (சலசந்தி / கழிமுகம் / நீர்த்தேக்கம்)
iii. மூன்றுபக்கமும் கடலாற் சூழப்பட்ட நிலப்பரப்பு : (தீவு / தீபகற்பம் / முனை)
iv. இலங்கையில் அதிநீளமான ஆறு : (களுகங்கை / களனிகங்கை / மகாவலி)
v. பூமியைப் போன்று துணைக்கோள் உள்ள கிரகம் : (சந்திரன் / வியாழன் / வெள்ளி)

**சரியாயின் சரி என்பதன் கீழும் பிழையாயின் பிழை என்பதன் கீழும் கீறிடுக.**

i. பூமி தட்டை வடிவினது. (சரி / பிழை)
ii. இந்துசமுத்திரத்துக்கு தெற்கே அந்தாட்டிக்கா சமுத்திரம் உண்டு. (சரி / பிழை)
iii. நேபாளம் இலங்கைக்கு வெகு தொலைவில் உண்டு. (சரி / பிழை)
iv. கிரகம் நட்சத்திரத்திடமிருந்து ஒளியைப் பெறுகின்றது. (சரி / பிழை)
v. சூரியனும் கிரகங்களும் சேர்ந்தது சூரியமண்டலம். (சரி / பிழை)

**சூரியனைப்பற்றி 5 வசனம் எழுதுக.**

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

**செயற்பாடு :**

i. இலங்கைப் படத்தில் களப்பு, குடாக்கடல், துறைமுகம், முனை முதலியவற்றை அடையாளம் இடுதல்.
ii. நட்சத்திரங்களின் படங்களை வெட்டி ஒட்டுதல்.
iii. சந்தர்ப்பம் வாய்ப்பின் கடற்கரைக்குச் சென்று சில அமைவைப் பார்வையிடல்.


# 5. வேலையை இலகுவாக்கும் முறைகள்

**5.1. மனிதர்கள் வேலைகளில் ஈடுபட்டுள்ள இடங்களையும் அவர்கள் செய்யும் பல்வேறு வேலைகளையும் இனங்காணல்.**

மனிதன் நல்வாழ்வு வாழவேண்டும். அவனுக்கு உணவு, உடை, வீடு என்பன வேண்டும். பிரயாண வசதிகள் வேண்டும். ஓய்வுநேர வசதிகள் வேண்டும். மற்றும் பல தேவைகள் முற்றுப்பெறல் வேண்டும். அதற்காக ஒருவர் இருவரல்லர். பலரும் வேலை செய்தல் வேண்டும். நிலம், நீர், வான் எங்குமே வேலை நடைபெற வேண்டும்.


மனிதன் வயலை உழுது வேலைசெய்து உணவுப் பொருள்களை விளைவிக்கின்றான். நெசவுசெய்து துணிகளைத் தருகின்றான். தச்சுத் தொழிலாளி, மேசன் தொழிலாளி இவர்களின் உழைப்பால் வீடுகள் உண்டாகின்றன. இவ்வாறு அனைத்துத் தேவைகளும் நிறைவெய்த வேலைகள் அவசியமாகின்றன. பிறபிற தேவைகளை நிறைவேற்றவும் வேலை வேண்டப்படுகின்றது.

நடந்தும் மிருகங்களில் ஏறியும் பிரயாணஞ் செய்தவன், இன்னும் பலவகை ஊர்திகளைப் பயன்படுத்துகின்றான். பொதுப்படக்கூறின், மிருகங்களின் உழைப்பையும் தனது உழைப்பையும் பயன்படுத்திய மனிதன் இன்று தனது வேலைகளை இலகுவாக்க பல்வேறு எந்திரங்களைப் பயன்படுத்துகின்றான்.



**5.2. வேலையை இலகுவாக்கிக் கொள்வதற்கும், விரைவுபடுத்திக் கொள்வதற்கும் பிரயோகித்த உத்திகள் காலத்துக்குக்காலம் மாற்றமடைந்துள்ள விதத்தை மதித்தல்.**

பாரமான கல்லொன்றை தள்ளிவைக்க, முதலில் தனது கையைப் பயன்படுத்தினான். பின்பு மரத்தை உபயோகித்தான். அதிலும் முன்னேற்றம் அடைந்து மிண்டியைப் பயன்படுத்துகின்றான்.



கிணற்றில் தண்ணீரைக் கைவாளியால் அல்லது ஓலைப்பட்டையால் எடுத்தான். அதில் முன்னேற்றமடைந்து கப்பியைக் கையாளுகின்றான்.

வண்டியில் பொருளைக் கையினால் தூக்கி ஏற்றியவன் இன்று சாய்தளத்தைப் பயன்படுத்தி இலகுவாகவும் விரைவாகவும் ஏற்றுகின்றான். பாரமான பொருளை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் கொண்டுசெல்ல நினைத்தவன், தலையில் சுமந்து சென்றான். பின்னர் மிருகத்தின் உதவியுடன் வண்டியில் கொண்டு சென்றான். இப்போது லொறிமூலம் கொண்டு செல்கின்றான்.

நிலத்தைக் கிண்டிக்கிளறி பண்படுத்தினான். மண்வெட்டியினால் கொத்தினான். மரக்கலப்பையால் உழுகின்றான். இப்போது எந்திரக்கலப்பை அவனுக்கு உதவுகிறது. அறுவடை, சூடுமிதித்தல் முதலியவற்றுக்குக்கூட எந்திரங்களைப் பயன்படுத்துகிறான்.


உடை வகைக்குரிய துணிகளை மரத்தறி மூலம் நெசவு செய்தான். இப்போது மின்சத்தித் தறிகளை நெசவு எந்திரங்களாகப் பயன்படுத்துகின்றான்.

வீடமைப்பதற்கு வேண்டிய கல், மரப்பலகைகள் முதலியனவெல்லாம் மனித உழைப்பால் பெறப்பட்டன. இப்போது அவை எந்திரங்களின் உதவியுடன் அரியப்படுகின்றன.

இவ்வாறே அனைத்துத் தேவைகளுக்கும் உடலுழைப்பையும் விலங்குகளின் உழைப்பையும் நம்பியிருந்த மனிதன் படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளான். எந்திரங்களைப் பயன்படுத்தும் நிலைக்கு வந்துள்ளான்.

### 5.3. மனிதனதும், மிருகங்களினதும் சத்திக்குப் பதிலாக எரிபொருள் பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்களை மனிதன் பயன்படுத்த ஆரம்பித்த விதத்தை மதித்தல்.

மனிதன் படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளான். அவனுடைய முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் பெரும்பங்களிப்புச் செய்துள்ளது. கப்பி, நெம்புகோல் (மிண்டி) ஆப்பு, சாய்தளம், சில்லு அச்சாணி என்னும் எளிய பொறிகளை அறிந்து கொண்டான். அவற்றின் உதவியுடன் பெரியபெரிய எந்திரங்களை அமைத்தான்.




விவசாயத் தேவைகளுக்கு உழவியந்திரம், சாகுபடி எந்திரம், திறாக்டர் எந்திரம், இரசாயன மருந்து காவும் எந்திரம் முதலிய பல உதவுகின்றன.

நெசவுத் தேவைகளுக்கு நூல்நூற்கும் எந்திரம், நெசவு எந்திரம், மின் விசைத்தறி முதலியன பயன்படுகின்றன. நிலத்திலே பிரயாணம் செய்ய மோட்டார்வண்டி, புகைவண்டி, வசுவண்டி முதலியன உண்டு. நீர்வழிப் பயணத்துக்குப் புகைக்கப்பல், எந்திரப்படகு முதலியன உண்டு. வான்வழிப் பயணத்துக்கு விமானங்கள் உண்டு.

மாட்டுவண்டி, குதிரைவண்டி முதலியவற்றை எடுத்துக் கொள்ளுவோம். இவை விலங்குகளினால் இயங்குகின்றன. விலங்குகள் உணவினால் சத்தி பெறுகின்றன. அதுபோலவே எந்திரங்கள் வேலை செய்ய எரிபொருள்கள் சத்தி அளிக்கின்றன.

பலகோடி வருடங்களுக்கு முன் இறந்த காட்டு மரங்கள், சேற்று, சதுப்பு நிலங்களினால் மூடப்பட்டு புதைந்து போயின. பின் பூமியின் தாக்கங்களினாலும் அமுக்கங்களினாலும் நசுக்கப்பட்டு பூமியின் வெப்பத்தினாலும் அமுக்கத்தினாலும் இவ்வண்டல்கள் தாக்கப்பட்டு நிலக்கரியாயின. இந்த நிலக்கரிகள் எல்லாம் பல வண்டல் படைகளாக மூடப்பட்டுக் கிடக்கின்றன. இவைகள் தற்பொழுது மனிதனால் அகழ்ந்து எடுக்கப்பட்டு எரிபொருளாக பல இயந்திர சாதனங்களை இயக்குவதற்குப் பாவிக்கப்படுகின்றது.




இதேபோல் மிக நுண்ணிய உயிர் அங்கிகளும் தாவரங்களும் இறந்து கடல்மட்டத்தில் சேர்க்கப்பட்டு பின் மண்ணுடனும் சேற்றுடனும் கலக்கப்பட்டு வண்டல் படைகளாக மண் கற்களாகவும் சேற்றுக் கற்களாகவும் இயற்கையினால் மாற்றமடைந்தன. பூமியின் வெப்ப அழுத்தத்தினாலும் அமுக்கங்களினாலும் இவைகள் ஒயில் ஆகவும் எரிவாயுவாகவும் சில நேரங்களில் வெளிவந்தன. வெளிவராதவை மூடுபாறைகளினால் படைகளாக அடைக்கப்பட்டன. இவற்றை தற்பொழுது நவீன உபகரணங்களை நிலத்துக்கடியில் செலுத்தி தார், பெற்றோல், மசகு எண்ணெய், மண்ணெய் இப்படி பல எரிபொருள்களாக சுத்திகரிப்பு ஆலைகள் மூலம் பெற்று இயந்திரங்களை இயக்குகின்றனர்.

சில எந்திரங்கள் பெற்றோலால் இயங்குகின்றன. மற்றுஞ் சில டீசல் எண்ணெயால் இயங்குகின்றன. மேலும் சில எரிவாயுவினாலும் இயக்கப்படுகின்றன. மண்ணெய், நிலக்கரி முதலியவற்றால் செயற்படும் எந்திரங்களும் உண்டு. தற்காலத்தில் அணுச்சத்தியினாலும் சில பெரிய எந்திரங்கள் இயக்கப்படுகின்றன.

### 5.1. நீங்கள் கற்றவை :

1. மனிதவாழ்வுக்கு அடிப்படைத் தேவைகளுடன் பிறவசதிகளும் வேண்டும்.
2. நிலத்திலும் நீரிலும் ஏன்? வானிலும்கூடத் தொழில்புரிகின்றனர்.
3. உழவன் உழுதும், நெசவாளி நெசவு செய்தும், தச்சுத்தொழிலாளி, மேசன் முதலியோர் தொழில் செய்தும் உணவு, உடை, வீடு முதலியவற்றைத் தருகிறார்கள்.

4. எத்தகைய தேவைகளும் உழைப்பின் வழியிலேயே கிடைக்கின்றன.
5. முன்பெல்லாம் வண்டி வாகனங்களுக்கு மிருகங்களின் சக்தி பயன்படுத்தப்பட்டது.
6. இன்று பலவகை ஊர்திகள் உபயோகத்தில் உண்டு.
7. அவை எரிபொருள்களின் சக்தியால் இயங்கும் எந்திரங்களால் தொழிற்படுகின்றன.

**5.2. நீங்கள் கற்றவை :**

1. முதலில் பாரமான பொருள்களை நகர்த்த அலவாங்கு முதலியவை பயன்படுத்தப்பட்டன.
2. தண்ணீர் எடுக்கக் கைவாளி பயன்படுத்தப்பட்டது. பின் கப்பியின் உபயோகம் வந்தது.
3. தரைமீது இழுத்துச் செல்லப்பட்ட பாரிய சுமைகள், சாய்தளங்கள் மூலம் லொறிகளில் ஏற்றப்பட்டன. கிறெயின் (crane) உபயோகத்தில் இருக்கின்றது.
4. இன்று உழுவதற்கு எந்திரக் கலப்பைகள் நெசவுக்கு மின்தறிகள் மற்றும் பொறிகள் பயன்படுத்தப் படுகின்றன.
5. தொழிற்சாலைகளில் பல்வேறு எந்திரங்கள் வேலை செய்கின்றன.
6. எல்லாமே எந்திரமயம் ஆகிவிட்டன.

**5.3. நீங்கள் கற்றவை :**

1. மனித முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் பெரும் பங்களிப்பு செய்துள்ளது.
2. எந்திரங்களில், கப்பி, நெம்புகோல், ஆப்பு, சாய்தளம், சில்லும் அச்சாணியும் முதலிய எளிய பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன.
3. விவசாயத்துடன் பயன்படுத்தப்படும் எந்திரங்கள் பல.
4. நெசவுடன் பயன்படுத்தப்படும் எந்திரங்களும் பலவாகும்.
5. பிரயாணத் தேவைக்கு பலவகை ஊர்திகள், புகைவண்டிகள், வானவூர்திகள் முதலியன பயன் படுகின்றன.
6. எந்திரங்கள் வேலை செய்ய பெற்றோல், மண்ணெய் முதலிய எரிபொருட் சக்திகள் உதவுகின்றன.
7. தற்காலத்தில் அணுச்சக்தி கூடப் பயன்படுத்தப்படுகிறது.

## மீட்டற்பயிற்சி

### அடைப்புக்குறிக்குள் இருக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

i. உணவு, உடை, உறையுள் மனிதனது (பொது / அடிப்படை) தேவையாகும்.
ii. ஆதிமனிதன் தொடக்கத்தில் (மாட்டுவண்டியில் / வசுவண்டியில்) பிரயாணம் செய்தான்.
iii. எந்திரங்கள் (மனிதவலுவால் / எரிபொருள் வலுவால்) இயங்குகின்றன.
iv. தண்ணீரைக் கிணற்றில் இருந்து எடுக்க (கிறெயின் / கப்பி) உதவுகின்றது.
v. நிலத்தை உழப் பண்டைக்கால மனிதன் (மரக்கலப்பையை / திறாக்டரை) உபயோகித்தான்.

**கீழே சில விடைகள் உண்டு. அவற்றிற்குரிய வினாக்கள் கூட்டினுள் உண்டு. அவற்றை உரிய புள்ளிக்கோட்டில் எழுதுக.**

i. .......................................................................................................

கப்பி, நெம்புகோல், சாய்தளம், சில்லும் அச்சாணியும் ஆகும்.

ii. .......................................................................................................

பஞ்சு நூற்கப்பட்டு இழைகள் முறுக்கப்பட்டு நூல் உண்டாக்கப்படுகின்றது.

iii. .......................................................................................................

எந்திரப்படகு.

iv. .......................................................................................................

யேம்ஸ் உவாட்டு.

v. .......................................................................................................

கூற்றன் பேர்க்கு.

1. நீர்வழிப் பயணத்தில் விரைவாகச் செல்ல உதவும் சாதனம் எது?
2. இலகு பொறிகள் எவை?
3. அச்சியந்திரத்தைக் கண்டறிந்தவர் யார்?
4. நீராவியின் சத்தியால் புகைவண்டியை இயங்கவைத்தவர் யார்?
5. நூல் எவ்வாறு ஆக்கப்படுகிறது?

**செயற்பாடு :**

i. சைக்கிள் திருத்தும் நிலையம் சென்று அதன் உதிரிப்பாகங்களின் பெயர்களை விசாரித்தறிதல்.

ii. ஆசிரிய துணையுடன் அயலில் உள்ள நெசவாலையைத் தரிசித்து அங்கு நடைபெறும் வேலைகள் குறித்துக் குறிப்பு எடுத்தல்.

## 6. எமது உணவு

**6.1. உணவுப் பொருள்களின் விலைகள் குடும்பப் போஷாக்கின் மீது செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றி விசாரித்தல்.**

பிள்ளைகளே! சிலர், சிரங்கு, சொறி முதலியவற்றால் துன்பப்படுவதைக் கண்டிருப்பீர்கள்; வேறுசில குழந்தைகள் வயிற்றுப் போக்கால் துன்பப்படுவதையும் பார்த்திருப்பீர்கள். சிறுவருட் சிலர், இரத்த சோகையால் வேதனைப் படுவதையும் வருத்தப் படுவதையும் தெரிந்திருப்பீர்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் உணவில் போதிய போசாக்கு இன்மையேயாகும்.

அம்மா, உணவுப் பொருள்களை அவித்தும், வேகவைத்தும், பொரித்தும், வெதுப்பியும், சுண்டியும், மெல்லவியல் செய்தும் பாகப்படுத்துகின்றார். உயிர்ச்சத்து அழிந்துவிடாது கவனம் எடுக்கின்றார்.

உணவிலே முக்கியமான சில அடிப்படைக் கூறுகள் உண்டு. அவை, காபோவைதரேற்று - (மாச்சத்து) இலிப்பிட்டு - (கொழுப்புச்சத்து) புரோட்டீன் - (புரதச்சத்து) விட்டமின்கள் - (உயிர்ச்சத்து) கனியச்சத்து முதலியனவாகும்.

அரிசி, கோதுமை, சோளம், கிழங்கு, தேன், கரும்பு, பழம் முதலியவற்றில் மாச்சத்து அதிகம் உண்டு.

தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய், வெண்ணெய் முதலியவற்றில் கொழுப்புச்சத்து உண்டு.




பால் பட்டர் முட்டை இறைச்சி மீன் பருப்பு சோறு




எண்ணெய் நெய் பாண் பழங்கள் மரக்கறிகள்

பயறு, உழுந்து, பருப்பு, சோயா அவரை, இறைச்சி, மீன், கருவாடு, முட்டை முதலியவற்றில் புரதச்சத்து உண்டு.

உயிர்ச்சத்துக்களும் கனிச்சத்துக்களும் பலவாகும். அவற்றுள் A, B, C, D, E, K முதலியன முக்கியமானவை. கனிச்சத்துக்களில் கல்சியம், அயடீன், பொஸ்பொஸ்ர முதலியன சிலவாகும்.

பால், கொழுப்பு, வெண்ணெய், மீன், முட்டை, ஈரல் முதலியவற்றில் உயிர்ச்சத்து A உண்டு. கடலை, பால், கைக்குத்தரிசி, அவரை முதலியவற்றில் உயிர்ச்சத்து B உண்டு. புதிய கீரை, வாழைப்பழம், தோடம்பழம், அன்னாசி, வெண்டி, தக்காளி, பால் முதலியவற்றில் ஊயிர்ச்சத்து C உண்டு. மீனெண்ணெய்,. வெண்ணெய், பால் முதலியவற்றில் உயிர்ச்சத்து D உண்டு.

நாம் வேலை செய்யவும் நடக்கவும் மாச்சத்தும் கொழுப்புச்சத்தும் பெரிதும் உதவுகின்றன. புரதம் உடல் வளர்ச்சிக்கு வேண்டி இருக்கின்றது. உயிர்ச்சத்தும் கனியப் பொருள்களும் உடற்பாதுகாப்புக்கும் நோய்த் தடுப்புக்கும் உதவுகின்றன.

உணவின் போசணைப் பெறுமானத்தைக் கலோறி என்னும் அளவையால் குறிப்பிடுகின்றார்கள். போசாக்குக் குறைபாட்டினால் பெரும்பாலும் எல்லோருமே பாதிப்படைகின்றார்கள். சிறப்பாக சிறுகுழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியோர் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

உலக சனத்தொகையின் 2/3 பங்கினர் குறைப்போசணை நிலமைகளினால் பாதிப்புற்றுள்ளனர். உலக உணவு உற்பத்தி வேகத்தைவிட சனத்தொகை வளர்ச்சி வேகம் அதிகமாகையால் பயிர்ச்செய்கைக்கான நிலப்பரப்பு குறைவுற்றுள்ளது. முன்னேற்றமடைந்த நாட்டு மக்களால் கைக்கொள்ளும் அதிக புரத பாவனையும் உணவுப் பிரச்சினையை உக்கிரமடையச் செய்யும் மற்றுமோர் காரணமாகும். அதிக விளைவை அளிக்கவல்ல பயிர் வகைகளை வளர்த்தல், உணவுப் பயிர் செய்யும் போகங்களை அதிகரித்தல் உணவுப் பிரச்சனையைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளாகும்.



மராமரசு நோயினால்
பாதிப்புற்ற குழந்தையொன்று



குவாசியோர்கோர் நோயினால்
பாதிப்புற்ற ஒரு குழந்தை



கேடயச்சுரப்பி வீக்கமுற்ற
ஒருவர்

**போசாக்கின்மையால்
பாதிக்கப்பட்டோர்**

எமது வீட்டார் பெரும்பாலும் உணவுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் அனைத்தையும் கடைகளிலேயே பெறுகின்றார்கள். அங்கு தரமான பொருள்கள் கிடைக்கின்றன. அன்றி, நாட்பட்டனவும் பதங்கெட்டனவும் உபயோகத்துக்கு வேண்டாதவையும் கூட விலைப்படுகின்றன.



விலைப்பட்டியல் வைக்கப்பட்ட
விற்பனை நிலையம்

இந்நாளில் பொருள்களின் விலைவாசி மிகவும் உயர்ந்து விட்டது. போசாக்கு உணவுகளுள் மிகமுக்கியமான பாலுணவுகள் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன. நெஸ்பிரே, அங்கர், லக்ஸ்பிரே முதலிய பால்மாக்களின் விலைகள் அவற்றின் பெட்டிகளில் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டிருப்பீர்கள்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களும் நடுத்தர வர்க்கத்தினரும் போசாக்கு உணவுகளைப் பெறமுடியாதிருக்கின்றது. இப்படி இருப்பின் மனிதவளம் சுருங்கிப்போகும். ஆரோக்கியமான சந்ததியாரைக் காணமுடியாது ஆகிவிடும்.

அரசார் தலையிட்டுக் கட்டுப்பாட்டு விலை, மானிய விலை முதலியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.

## 6.2. உணவிற்காக வியாபார நிலையங்களை நம்பி வாழ்வதில் உள்ள நட்டத்தை விசாரித்தறிதல்.

மக்களில் சிலர், சிற்றுண்டிகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், சமைக்கப்பட்ட உணவுகள் முதலியவற்றுக்காக கடைகளை நம்பி வாழ்கின்றனர். மற்றும் ஒரு பிரிவினர் உணவுகளுக்குரிய தானியம், காய்பிஞ்சு, மீன், முட்டை முதலிய பொருள்களை கடைகளிலே பெற்றுக்கொள்ளுகின்றனர்.

கடைக்காரர்களில் சிலர், பொதுமக்களின் தேவைகளை சிறந்தவகையில் நிறைவேற்றுகின்றனர். சிலர் பணம் பறிக்கும் பேராசை உடையவர்களாகவும் இருக்கின்றனர்.

கடைகளில் பெறும் பண்டங்கள் எப்பொழுதும் தரமானவைகளாக இருக்கும் என்று கூறமுடியாது. உற்பத்தி நிலையங்களில் இருந்து பொருள்கள் வெளியே கொண்டு வரப்பட்டதும் பலமுறை தரமானவையும் தரமற்றவையும் கலப்படம் செய்யப்படுகின்றன. அதனால் பாவனையாளர்கள் தான் பாதிக்கப்படுவர்.

உணவுத்தானியங்கள் ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் பழுதடைந்துவிடும். காய்பிஞ்சுகள் காலஞ் செல்வதால் வாடி வதங்கியிருப்பதைக் கண்டிருப்பீர்கள். அவற்றுள் போசணைப் பெறுமானமும் வீழ்ச்சி அடைந்திருக்கும்.



சிற்றுண்டிகள் மற்றும் தின்பண்டங்கள் உரிய பாதுகாப்பின்றி வைத்து விற்கப்படுவதும் உண்டு. அதனால் கிருமித் தொற்றுக்கு வாய்ப்பும் உண்டு.

மீன், முட்டை, இறைச்சி என்பன நாட்படுவதால் நச்சுத்தன்மை அடையக்கூடும். அவை தேக ஆரோக்கியத்துக்குக் கெடுதி விளைவிக்கும்.



நடைபாதை வியாபாரிகள், பாதுகாப்பற்ற கடைகளில் விற்பனையாகும் சிற்றுண்டிகளில் இலையான் முதலிய நோய் காவிகள் "ஙொய்" என்று பாட்டு இசைப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவற்றால் பாவனையாளர் வயிற்றுளைவு, வாந்திபேதி முதலிய தொற்று நோய்களுக்கு ஆளாகின்றனர்.

நமக்கு வேண்டிய காய் பிஞ்சுகளை வீடுகளில் உற்பத்தி செய்யலாம். பாற்பயன்களைப் பெறுவதற்கு பசுக்களை வளர்க்கலாம். கோழி முதலியவற்றை வளர்க்கலாம்.

## 6.3. போசாக்கிற்காகத் தேவையான உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு வீட்டுத் தோட்டத்தைப் பயன்படுத்தும் திறன் தொடர்பாக ஆராய்தல்.

கண்ணன் நல்ல சிறுவன்; அவன் ஆண்டு 4 இல் கல்வி கற்று வருகிறான். அவனுடைய தந்தையார் எழுது வினைஞராகக் கடமை புரிகின்றார். அவர் தமது வீட்டின் அயலில் தோட்டம் ஒன்று வைத்திருக்கின்றார். மாலை வேளைகளிலும் விடுதலை நாள்களிலும் அவர் தோட்டத்தில் வேலை செய்வார். கண்ணன் தனது தந்தையாருடன் தானும் தோட்டத்தில் சிறுசிறு வேலைகள் செய்வான்.

முதலில் அவர் தோட்டஞ் செய்யும் நிலத்தைச் சுற்றி நான்கு புறமும் வேலி அடைத்தார். உள்ளே சென்று வருவதற்குப் "படலை" ஒன்றும் போட்டிருந்தார்.

நிலத்தைக் கொத்தினார்; எரு, ஆட்டுப்பிளுக்கை, சருகு முதலிய பசளைகளை இட்டு நிலத்தைப் பண்படுத்தினார்.

ஒரு பகுதியில், கத்தரி வெண்டி, தக்காளி முதலிய செடிவகைகளை உண்டாக்கினார். ஒரு புறத்தில் மிளகாய்க் கன்றுகளும் நின்றன.

இன்னொரு பகுதியில், பாகல், புடோல் முதலிய கொடி வகைகளைப் பயிரிட்டார். மற்றொரு புறத்தில் மேடையிட்டு கோவா, பீட்றூட், கீரை முதலியவற்றை உண்டாக்கினார். சற்றுத் தொலைவில் மரவள்ளித் தடிகளை வெட்டியெடுத்து துண்டுகளை நாட்டினார்.

வேலிப்புறமாக வாழைமரங்கள் நின்றன. எல்லாவற்றுக்கும் பாத்திகள் அமைத்து வாய்க்கால்கள் மூலம் தொடர்பு படுத்தினார். ஒழுங்காகப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சி வந்தார். செடி கொடிகள் செழித்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் குலுங்கின.

அன்றாடம் சமையலுக்குத் தேவையான காய் பிஞ்சுகளை அம்மாவும் அப்பாவும் பறித்தெடுத்துக் கொள்ளுவார்கள். தங்கள் தேவைகளுக்கு வேண்டியவை போக மீதியை அயலவர் உறவினர் நண்பர்களுக்குக் கொடுப்பார்கள்.

மேலும் தயிர்வேளை, கீழ்காய்நெல்லி, கற்பூரவள்ளி, குப்பைமேனி முதலிய மருந்து மூலிகைகளையும் ஒருபகுதியில் வளர்த்திருந்தார்.

பிள்ளைகளே உங்கள் வீட்டிலும் ஒரு தோட்டத்தை உண்டாக்குங்கள். அது பயனுள்ள முயற்சியாகும். மகிழ்ச்சிகரமான பொழுதுபோக்கும் கூட.

### 6.4. வீட்டுத் தோட்டமொன்றில் காணப்படவேண்டிய பண்புகளை இனங்காணல்.

சில வீடுகளில் தோட்டம் தயாரிப்பதற்குப் போதிய விஸ்தாரமான இடம் கிடைக்கும்; சில வீடுகளில் சிறு இடமே தோட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும். சந்தையில் வாங்கும் காய்கறிகளைக் காட்டிலும் நமது சொந்த வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் காய்கறிகள் மிகவும் புதியனவாய் இருப்பதால் ருசியாயிருக்கும். நாமே போட்டுண்டாக்கிய காய்கறிகள் என்ற சந்தோஷமும் நமக்குண்டாகும். நாம் அதிகமாக விரும்பும் காய் சில சமயங்களில் சந்தைகளில் கிடைக்காது; கிடைத்தாலும் விலை அதிகமாக இருக்கும். ஆதலால் வீட்டில் ஒரு சிறு தோட்டம் உண்டாக்கிப் பல காய்கறிகளைப் பயிர் செய்வது மிகச் சிறந்தது. ஓய்வு நேரத்தைத் தோட்டப்பயிர் செய்வதில் பயன்படுத்துவது மிகவும் இன்பமாயிருக்கும். "வீட்டுக்கொரு தோட்டம் வேண்டும்" என அரசியலார் விளம்பரப்படுத்துகின்றனர். வீட்டுத் தோட்டத்தில் காய்கறிகளை உண்டாக்குவதன் மூலம், உணவுத் தானியங்கள் போதாத நெருக்கடியை ஒருவாறு தீர்க்கலாம். வீட்டுத் தோட்டங்கள் மூலம் நம் மாகாணத்தில் ஏராளமான காய்கறிகள் உண்டாகின்றன.

வீடுகளில் பயிர்க்குழிகள் போட்டு அவரை, புடல், பாகல், பீர்க்கு, பூசணி முதலிய செடிகள் பயிரிடலாம். இடம் இருக்குமானால், கத்தரி, வெண்டை, மிளகாய் முதலிய காய்கறிச் செடிகளையும் தாண்டங்கீரை, அரைக்கீரை, கொத்தமல்லி போன்ற கீரை வகைகளையும் சேம்பு, கருணை போன்ற கிழங்கு வகைகளையும் பயிரிடலாம். சில வீடுகளில் வெறும் அழகு தரும் குரோட்டன்ஸ் செடிகளை மட்டும் விசேட கவனம் செலுத்தி வளர்த்து வருகின்றனர். மக்களுக்குப் பயன்படும் கீரை, காய்கறிச் செடிகளும் வீட்டுக்கு அழகு செய்வனவே.


235



மரங்கள், சுவர்கள் இவற்றின் நிழல் விழாத இடம் கண்டு பயிர்க் குழிகள் தோண்ட வேண்டும். பெரும்பாலும் ஆடிமாதமேதான் பயிர்க் குழிகள் தயாரிப்பதற்குச் சிறந்த காலம். "ஆடிப் பட்டம் தேடி விதை" என்பது இதனை வலியுறுத்தும். மூன்றடிச் சதுரமாகக் குழிகளைத் தோண்டலாம். ஒரு குழிக்கும் மற்றொரு குழிக்கும் இடையே சுமார் 6 அடி தூரமாவது இருக்கவேண்டும். குழிகளை வெட்டி நாலைந்து நாட்கள் ஆறப்போடவேண்டும். அவ்வாறு செய்வதால் சூரிய உஷ்ணம், காற்று, ஈரம் முதலியவற்றால் மண் மிருதுவாக மாறும். பின்னர் வண்டல் மண்ணும் உரமும் போட்டுக் குழிகளைச் சமப்படுத்தி நல்ல உறுதியான திரண்ட விதைகளைத் தெரிந்தெடுத்து நடல் வேண்டும். விதைகளை மாலை நேரம் ஊன்றித் தண்ணீர் விடுவது நல்லது.

வீட்டில் கிணறு இருக்குமாயின், அதன் ஓரத்தில் வாழை மரங்கள் வைக்கலாம். வீட்டின் முன்புறத்தில் மல்லிகை, ரோஜா, சம்பங்கி, முல்லை முதலிய புஷ்பச் செடிகளைப் பயிர் செய்வதால் அன்று மலர்ந்த மணமிக்கப் பல வர்ணமுள்ள புதிய மலர்களைப் பெறலாம். வீட்டுக்கு அவை அழகூட்டும்.

நிலத்தின் தன்மைக்கு ஏற்பவே அங்கு பயிரிடப்படும் தாவரங்களும் பயனளிக்கின்றன. நமது நாட்டின் மண்ணை வண்டல் மண், மணல் மண், செம்பூரான் மண், சுண்ணாம்பு மண் என்றெல்லாம் பிரிப்பார்கள். சாதாரண குடியிருப்பு மண்ணை களிமண், மணல்மண், இருவாட்டிமண் என்னும் மூன்றனுள் அடக்கிவிடலாம்.



வீட்டுத் தோட்டம்

தோட்டம் செய்வதற்கு இருவாட்டி மண்ணே பெரும்பாலும் சிறந்தது. இருவாட்டிமண் மணல்மண்ணும் களிமண்ணும் கலந்ததால் உண்டானதே! மண்ணினை இயற்கைப் பசளை, செயற்கைப் பசளை முதலியனவற்றை இட்டு வளம் உடையதாக்கலாம். இயற்கை வளமாக்கிகள் வகையில் ஆட்டெரு, மாட்டெரு, கூட்டெரு என்பன இடம்பெறும். செயற்கை வளமாக்கிகளில் யூரியா, அமோனியா முதலிய இரசாயனப் பொருள்கள் இடம்பெறும்.

தாவரங்கள் மண்ணில் இருந்து நீரையும் கனியுப்புகளையும் பெறுகின்றன. மண்வளியும் தாவரங்களின் வளர்ச்சிக்குப் பயனளிக்கின்றது. மேலும் சூரிய ஒளியும் இன்றியமையாததாகும்.

வீட்டுத் தோட்டத்துக்கு நீர்வசதி வேண்டும். யாழ் குடாநாட்டார் முன்பெல்லாம் துலாவின் மூலம் கிணற்று நீரை எடுத்தனர். இப்போது நீரிறைக்கும் எந்திரங்களும் மோட்டார் எந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

தோட்டத்தைப் பகைப் பிராணிகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டும். ஆடு, மாடு, கோழி, பன்றி முதலியன ஒருவகையானவை. கிளி, குருவி முதலியன மற்றொரு வகையின. வேலிகள் அமைத்தும், வெருளி முதலியன அமைத்தும் இவற்றிலிருந்து தோட்டத்தைப் பாதுகாக்கலாம்.

DATE
LIBRARY

தோட்டத்துக்குப் பல்வகை நோய்கள் உண்டாகலாம். அதனாலும் போதிய பயனைப் பெறமுடியாது போகும். ஆகவே காலத்துக்குக்காலம் உரியஉரிய பீடை கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டும். கமத்தொழில் விரிவாக்கப் பிரிவினரின் ஆலோசனைகளையும் பெறலாம். நல்வாழ்வுக்கு வீட்டுத்தோட்டமும் ஓர் அங்கம் என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

### 6.1. நீங்கள் கற்றவை :

1. உணவில் போதிய போசாக்கு இல்லாதிருப்பின் நோய்கள் உண்டாகும்.
2. உணவை அவித்தும், வேகவைத்தும், பொரித்தும், வெதுப்பியும், சுண்டியும், மெல்லவியல் செய்தும் பாகம் பண்ணுகிறார்கள்.
3. காபோவைதரேட்டு (மாச்சத்து) இலிப்பிட்டு (கொழுப்புச்சத்து) புரோட்டீன் (புரதச்சத்து) விட்டமின் (உயிர்ச்சத்து) கனியச்சத்து முதலிய கூறுகள் அடிப்படை ஆனவை.
4. அரிசி, கோதுமை, கிழங்கு, தேன், பழம் முதலியவற்றில் காபோவைதரேட் அதிகம் உண்டு.
5. தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், வெண்ணெய் முதலியவற்றில் இலிப்பிட்டு அதிகம் உண்டு.
6. பருப்பு, சோயா அவரை, இறைச்சி, மீன், முட்டை முதலியவற்றில் புரோட்டீன் அதிகம் உண்டு.
7. விட்டமின் சத்துக்கள் A, B, C, D முதற் பலவாகும்.
8. கனியச்சத்துகள் கல்சியம், அயடீன், பொஸ்பொரஸ் முதற் பலவாம்.
9. நடக்க, வேலை செய்ய காபோவைதரேட்டும் இலிப்பிட்டும் தேவை.
10. உடல்வளர்ச்சிக்குப் புரதம் தேவை.
11. போசாக்குப் பெறுமானத்தை கலோரி அளவையில் குறிப்பிடுவர்.
12. குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் போசாக்குக் குறைந்தால் பெரிதும் பாதிப்புக்கு ஆளாவர்.
13. பால் உணவு பூரணமானது; பாலின் விலை உயர்ந்துவிட்டது.
14. எதிர்காலச் சந்ததியின் ஆரோக்கியத்துக்கும் போஷாக்கு நிறைந்த உணவு வேண்டும்.
15. இல்லையேல் எதிர்காலம் பாதிப்புக்கு உள்ளாகும்.

### 6.2. நீங்கள் கற்றவை :

1. மக்களில் சிலர் கடையில் கிடைக்கும் பக்குவப்படுத்தப்பட்ட உணவுப் பண்டங்களை உண்கின்றனர்.
2. சமையலுக்கு வேண்டிய காய், பிஞ்சு, மீன், முட்டை முதலியனவும் வியாபாரிகளிடமே இருந்து விலைக்குப் பெறப்படுகின்றன.
3. சிலர் பெரும்பாலும் நாட்படாத நல்ல பொருள்களை விற்பர். சிலர் பதம்கெட்ட தரக்குறைவு அடைந்த பொருள்களையும் கலப்படப் பொருள்களையும் விற்கின்றனர்.
4. காலங்கடந்தால் உணவுப் பண்டங்கள் போஷாக்குப் பெறுமதியை இழந்துவிடுகின்றன.
5. பாதுகாப்பற்ற சிற்றுண்டிகளில் நோய்கள் வந்து சேர்ந்து விடுகின்றன.
6. நடைபாதை வியாபாரிகளிடம் உணவுப் பொருள்களை வாங்கக்கூடாது.
7. உணவுக்கு வேண்டிய பொருள்களை வீட்டுத் தோட்டம் செய்கை பண்ணலாம்.

### 6.3. நீங்கள் கற்றவை :

1. கண்ணன் வீட்டில் ஒரு வீட்டுத் தோட்டம் உண்டு.
2. அங்கு ஒரு பகுதியில் கத்தரி, வெண்டி, தக்காளி, மிளகாய்ச் செடிகளும் மறுபுறத்தில் பாகல், புடோல் முதலிய கொடிவகைகளும் பயிரிட்டிருந்தனர்.
3. மேடையில் கோவா, பீற்றூட் வகைகள் வளர்ந்திருந்தன.
4. வேலிப்புறமாக, வாழை மரங்கள் நின்றன. வீட்டுடன் மா, பலாக்கள் காணப்பட்டன.
5. குடும்பத்தைச் சேர்ந்தோர் அனைவரும் அங்கு வேலை செய்தனர்.
6. வீட்டார் தங்கள் தேவைகளுக்குரிய பெரும்பாலான பொருள்களைத் தோட்டத்தில் இருந்து பெற்றனர்.
7. மருந்துத் தேவைகளுக்குரிய மூலிகைகளும் பயிரிடப்பட்டிருந்தன.

### 6.4. நீங்கள் கற்றவை :

1. நிலத்தின் தன்மைக்கேற்ற தாவரங்கள் பயிரிடப்படவேண்டும்.
2. நமது நாட்டில் வண்டல்மண், மணல்மண், செம்பூரான்மண், சுண்ணாம்புமண் முதலிய பல இன மண்கள் உண்டு.
3. பொதுவாக மண்ணை மணல்மண், களிமண், இருவாட்டிமண் என்று மூன்றாகப் பிரிக்கலாம்.
4. தோட்டச் செய்கைக்கு இருவாட்டிமண் சிறந்தது.
5. மண்ணை இயற்கை செயற்கைப் பசளைகளை இட்டு வளமாக்கலாம்.
6. இயற்கை வளமாக்கிகள் மாட்டெரு, ஆட்டெரு, கூட்டெரு முதலியனவாகும்.
7. செயற்கை வளமாக்கிகள் யூரியா, அமோனியா முதலியனவாகும்.
8. வீட்டுத் தோட்டத்துக்கு நீர்வசதியும் வேண்டும்.
9. வேலிப்பாதுகாப்பும் வேண்டும்.

## மீட்டற்பயிற்சி

**முதற்பகுதியை நிறைவுசெய்தற்கேற்ற இரண்டாம் பகுதியைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

i. அம்மா கோவா இலையை ..............................

ii. உணவில் உள்ள அடிப்படைக் கூறுகள் ..............................

iii. புதிய கீரை, வாழைப்பழம், தோடம்பழம் முதலியவற்றில் ..............................

iv. உணவின் போஷணைப் பெறுமானத்தை ..............................

v. பால்மாவின் விலை ..............................

vi. கடைகளில் கிடைக்கும் பண்டங்கள் ..............................

(அ) உயிர்ச்சத்து பல உண்டு.
(ஆ) மலைபோல உயர்ந்துவிட்டது.
(இ) கலோரி அளவையில் மதிப்பிடுவர்.
(ஈ) மெல்லவியல் செய்து தந்தார்.
(உ) எப்பொழுதும் தரமானவையாக இருக்கமாட்டா.
(ஊ) காபோவைதரேட்டு, இலிப்பிட்டு, புரதம், விட்டமின், உயிர்ச்சத்து முதலியனவாம்.

**செவ்விய விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**

i. தரக்குறைவான உணவுப்பண்ட விற்பனையால் பாதிப்படைவர் :
(1) வியாபாரி (2) பாவனையாளர் (3) இறக்குமதியாளர்

ii. இயற்கை உரவகையைச் சேர்ந்தது :
(1) அமோனியா (2) பொசுப்பரசு (3) கூட்டெரு

iii. மருந்து மூலிகையைச் சேர்ந்தது :
(1) புதியகீரை (2) தயிர்வேளை (3) புடோல்

iv. பயிர் செய்வதற்கு ஏற்ற மண் :
(1) களிமண் (2) மணல்மண் (3) இருவாட்டிமண்

v. நாட்டபட்ட பண்டங்களில் உள்ள மிகப் பாரிய தீங்கு :
(1) சுவையின்மை (2) நச்சூட்டப்படுதல் (3) மழைவீழ்ச்சி

**உணவுபற்றி 5 வசனங்கள் எழுதுக.**

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

**செயற்பாடு :**

i. அயலில் உள்ள வீட்டுத்தோட்டத்தைப் பார்வையிடுதல்.
ii. சந்தைக்குச் சென்று அங்குள்ள பொருள்களை அட்டவணைப்படுத்தல்.
iii. மூவகை மண்ணையும் சிறு போத்தல்களில் எடுத்துவைத்தல்.
iv. தோட்டத்து வெருளியின் படத்தை வரைதல்.

# 7. எமது பரிபாலன முறைகள்

## 7.1. கிராமங்களை / நகரங்களை ஒன்றுசேர்த்து நிர்வகிப்பதற்காக அலகுகள் நிறுவப்பட்டுள்ள விதம் தொடர்பாக ஆராய்தல்.

எமது நாடு இலங்கை. இதில் கிராமங்கள் பலவுள. நகரங்கள் பலவுள. கிராமங்களைவிட சற்று வளர்ச்சி அடைந்தவை நகரங்கள். நகரத்தைவிட மாநகரம் மேலும் உயர்ந்தது. கிராமங்கள். நகரங்கள் பலவற்றைக் கொண்டது பிரதேசம். மேலும் பரப்பளவில் பெரியன.

எமது நாடு. 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாகாணங்கள் முழுவதும் 25 மாவட்டங்களாக இயங்குகின்றன. மாவட்டங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உடையன. உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் கிராம சேவை அலுவலர் பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்க அதிபர் இருக்கிறார். தேர்தல் தொகுதி வாரியான பிரிவுகளும் உண்டு.

அரசாங்க அதிபர். உதவி அரசாங்க அதிபர். கிராம சேவை அலுவலர் என்று இவர்கள் மூலமாகவே நிருவாகம் இயக்கப்படுகின்றது.

நமது நாட்டின் அதி உயர்ந்த அரசுத்தலைவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி. அவரின் கீழ்ப் பாராளுமன்றம். அங்கு தலைமை அமைச்சர் ஏனைய அமைச்சர்கள் பதவி வகிக்கிறார்கள்.இவர்கள் நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. பாராளுமன்ற ஆட்சிமுறை மத்திய அரசு எனப்படும்.

மத்திய அரசு நாட்டின் அபிவிருத்திப் பணி வெளிநாட்டுத் தொடர்பு. அனைத்து மக்களையும் பாதிக்கும் தேசியப் பிரச்சனை முதலியவற்றை நிருவகிக்கின்றது.

உள்ளூராட்சி அமைப்பில். நகரசபை மாநகரசபை. பிரதேசசபைகள் இடம்பெற்றுள்ளன. பிரதேசசபைகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் உண்டு.

நகரசபையும் மாநகரசபையும் வீதிகளை அமைத்துப் பேணுதல். பொதுச் சந்தைகளை அமைத்தல். சுகாதார சேவைகளை ஏற்படுத்திக் கண்காணித்தல் முதலியவற்றை நிருவகிக்கின்றன. பொதுப் பயன்பாட்டுச் சேவைகளையும் பேணுகின்றன.

பிரதேச சபைகள். அபிவிருத்தி நிருவாகம் தொடர்பாக மக்கள் செயற்பட சந்தர்ப்பம் வழங்கும் வகையில் பணிபுரிவதற்காக அமைக்கப்பட்டன. அவை சமய விழாக்கள். இலக்கிய விழாக்கள். அறநெறிப் பாடசாலைகளை நடத்துதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளன. வேறு கிராம எழுச்சிச் சபைகளும் பணிபுரிந்து வருகின்றன.

## 7.2. நாட்டின் பொதுச் சட்டதிட்டங்கள் சிலவற்றை இனங்காணல்.

உங்கள் ஒவ்வொருவரதும் வீடு ஒரு சிறிய சமூகம். அதன் தலைவர் தந்தையார். தாயார். பிள்ளைகள் என்று அங்கு பலர் வசிக்கின்றார்கள். குடும்பம் சீராக இயங்குவதற்குச் சில சட்டதிட்டங்களை ஆக்கி நடைமுறைப் படுத்துவார்கள். குடும்ப உறுப்பினர் அனைவரும் சட்டதிட்டங்களை மீறாமல் நடந்து கொள்வர். அதனால் வாழ்க்கை இனிது நடைபெறுகின்றது. எமது நாடு முழுவதும் ஒரு பெரிய சமூகம். அந்தச் சமூகத்துக்கு உரிய சட்டதிட்டங்களை மத்திய அரசும் உள்ளூராட்சி அமைப்புக்களும் ஆக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றன. மாண்புமிகு சனாதிபதி தலைவராக இருந்து எல்லாவற்றையும் கவனித்து வருகின்றார்.

மத்திய அரசு. கல்வி, மருத்துவம், தபால் தொலைத்தொடர்பு, புகைவண்டிச் சேவை முதலிய பலவற்றை நடத்தி வருகின்றது. அவ்வாறே உள்ளூராட்சி அமைப்புக்களும் தத்தம் பகுதிகளில் மின்விநியோகம், நீர்விநியோகம், சுற்றாடற்சுத்தம், நலவியற்சேவை முதலியவற்றை நடத்தி வருகின்றன.

சேவைகள் அனைத்தும் சீராக நடப்பதற்கு சட்டதிட்டங்கள் பலவுள. யாவும் ஒழுங்காக நடைபெறுவதற்குச் சட்டதிட்டங்கள் பெரிதும் உதவுகின்றன. அவற்றிற்கு அடங்கி நடத்தல் மக்களின் தலையாய கடனாகும்.

உதாரணமாக மக்கள் சண்டை சச்சரவின்றி அமைதியாக வாழவேண்டும். எந்தவொரு பகுதியினரும். அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது.

அந்த ஒழுங்கை மறந்து அமைதிக்குப் பங்கம் விளைவிக்க எண்ணினாலோ பங்கம் விளைவித்தாலோ அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கப் பெரும் பகுதியினர் உளர். இது மத்திய அரசு மேற்கொள்ளும் சட்டமாகும். இவ்வாறு சட்டங்கள் பலவுள.

ஒரு கிராமத்தில் / நகரத்தில் வீதியோரத்தில் ஒரு காணி இருக்கின்றது. அதன் உரிமைக்காரர் வீடொன்று கட்ட விரும்புகின்றார். தெருவின் மையப்பகுதியில் இருந்து குறிப்பிட்ட அளவு தூரத்தை விட்டுத்தான் காணிச் சொந்தக்காரர் கட்டடத்தை அமைத்தல் வேண்டும். அதற்கு மாறாக நடந்தால் அவரைத் தண்டிப்பதற்குச் சட்டம் உண்டு. இவ்வாறு சட்டதிட்டங்கள் பலவுளவாகும்.

### 7.3. பொதுச் சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தல் நல்ல பழக்கம் என மதித்தல்.

நீங்கள் பாடசாலை தொடங்குமுன் குறைந்தது பத்து நிமிடத்துக்கு முன்பாவது பாடசாலைக்குச் செல்லவேண்டும். ஓய்வு இடைவேளையின் போதுதான் வகுப்பை விட்டு வெளியிலே செல்லலாம். பாடசாலை முடிவடையும் போது மணி ஒலித்ததும் மாணவர் ஒழுங்காக வீட்டுக்குச் செல்லலாம். இவை பாடசாலைப் பொதுச் சட்டதிட்டங்களுட் சில. இவற்றை பாடசாலை மாணவர் அனைவரும் கைக்கொண்டு ஒழுகுகின்றனர். அதனால் நலம் பெறுகின்றனர்.

முழு நாட்டையும் பொறுத்தவரை சட்டதிட்டங்கள் பலவுள என்று அறிவோம். அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுதல் குடியிருப்பாளரின் கடமையாகும். அதனால் மக்களிடையே சமாதான சகோதரத்துவ சகவாழ்வு பெருகும்.

போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவுகள் நீங்கும். ஒரு தாயின் பிள்ளைகள் ஒற்றுமையாக வாழ்தல் போல நாட்டில் உள்ளோர் அனைவரும் இன்பமாக முன்னேறும். பெரியவர் சிறியவர் என்ற பேதம் அகலும்.

"சட்டத்தின் முன் சகலரும் சமம்"

### 7.1 நீங்கள் கற்றவை :

1. நமது இலங்கையில் கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம் முதலிய பல பிரிவுகள் உண்டு.
2. மாகாணங்களின் தொகை 9; மாவட்டங்களின் தொகை 25.
3. கிராம மட்டத்தில் தொடர்பு அதிகாரி கிராம சேவையாளர்.
4. மாவட்ட மட்டத்தில் தொடர்பு அதிகாரி அரச அதிபர், உதவி அரச அதிபர் முதலியோர்.

5. நிருவாகம் கிராம சேவையாளர், உதவி அரசாங்க அதிபர், அரச அதிபர் என்ற வகையில் விரிந்து நடைபெறுகிறது.
6. நாட்டின் அதி உயர்ந்த அரசுத்தலைவர், மாண்புமிகு நிறைவேற்று அதிகாரங் கொண்ட சனாதிபதி அவர்கள். சர்வசன வாக்கெடுப்பு மூலம் தெரிவாவார்.
7. அவரின் கீழ்ப் பாராளுமன்றம் உண்டு. பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுவர்.
8. பிரதமமந்திரி பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைவர் ஆவர்.
9. மத்திய அரசின் பிரதம அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் இயங்குகின்றனர்.
10. அபிவிருத்தி வேலைகள், வெளிநாட்டுத் தொடர்புகள் நிதி மற்றும் தேசியப் பிரச்சனைகள் மத்திய அரசின் கீழ் இருக்கும்.
11. உள்ளூராட்சி அமைப்பின் கீழ் நகர, மாநகர, பிரதேச சபைகள் இயங்கும்.
12. சபைகளின் உறுப்பினர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே.

### 7.2. நீங்கள் கற்றவை :

1. ஒவ்வொரு குடும்பமும் சிறிய சமூகம். அதனை நடத்தும் பொறுப்பு தாய் தந்தையரிடம் உண்டு.
2. நாட்டை நிருவகிக்கும் பொறுப்பு மத்திய உள்ளூராட்சி அமைப்புக் குழுவினருக்கு உண்டு.
3. மத்திய அரசு அபிவிருத்தி, கல்வி, மருத்துவம் முதலிய பல்வேறு சேவைகளைப் புரிகின்றது.
4. உள்ளூராட்சி அமைப்பு தத்தமது பகுதி நீர்விநியோகம், சுற்றாடல் சுகாதார வீதிப்பராமரிப்பு போன்ற பல சேவைகளைச் செய்துவருகின்றது.
5. இப்போது மாகாண அரசும் உண்டு.
6. சேவைகள் அனைத்தும் சீராக நடக்க சட்டதிட்டங்கள் தேவை.
7. சட்டதிட்டங்கள் பிணக்குகளைத் தீர்க்கவும், சீரான நிருவாகத்தை நடாத்தவும் உதவுகின்றன.

### 7.3. நீங்கள் கற்றவை :

1. பாடசாலைகள் சீராக இயங்கச் சட்டதிட்டங்கள் உதவுகின்றன.
2. மாணவர் சட்டதிட்டங்களை அனுசரித்து நடந்து நலம் பெறுகின்றனர்.
3. பொதுமக்களும் சட்டதிட்டங்களுக்கு அமைய ஒழுகினால் சுபீட்சம் நிலவும்.
4. சட்டத்தின் முன் சகலரும் சமம்.
5. போட்டி, பொறாமை இன்றிப் பிறர்நலம் பேணி சட்டதிட்டங்களை அனுசரித்து வாழ்ந்தால் நாடெல்லாம் நலம் பெறலாம்.

## மீட்டற்பயிற்சி

### மிகவும் சுருக்கமான விடை தருக.

i. உமது பாடசாலை அமைந்துள்ள கிராமம் / நகரம் எது?

.................................................................................................................

ii. மாவட்டத்தில் அதிஉயர்ந்த பதவி வகிப்பவர் யார்?

.................................................................................................................

iii. மாண்புமிகு சனாதிபதி எவ்விதம் பதவிக்கு வருகிறார்?

.................................................................................................................................

iv. மத்திய அரசு மேற்கொள்ளும் பணிகள் இரண்டு கூறுக.

.................................................................................................................................

v. அறநெறிப் பாடசாலைகளை எந்த அமைப்பு நடாத்தி வருகின்றது?

.................................................................................................................................

vi. கிராமத்து மக்கள் ஒரு கருமத்தை நிறைவேற்ற யாருக்கூடாக மேலிடத்துடன் தொடர்புகொள்ள வேண்டும்?

.................................................................................................................................

## கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிப்புக.

i. நகரத்திலும் பார்க்க ____________________ பரப்பளவில் பெரிது.

ii. பாராளுமன்ற உறுப்பினர் ____________________ மூலம் தெரிவு செய்யப்படுகிறார்.

iii. மத்திய அரசின் நிருவாகத்தில் ____________________ பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

iv. மாநகரத்தின் பணிகளில் ____________________ பரிபாலனமும் ஒன்று.

v. சட்டதிட்டங்கள் ____________________ நிகழ்வுற உதவுகின்றன.

vi. கிராமத்தில் ____________________ பங்கம் விளைவிப்பவரை விசாரணைக்கு உட்படுத்தச் சட்டம் உதவுகின்றது.

| | | |
|---|---|---|
| அமைதிக்கு | தேர்தல் | மாகாணம் |
| சுகாதாரப் பராமரிப்பு | கல்விப்பணி | அமைதி |

## கிராம சேவையாளர்பற்றி 5 வசனங்கள் எழுதுக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

### செயற்பாடு :

i. ஆசிரியருடன் சென்று நகரசபைச் செயற்பாடுகளை அறிதல்.

ii. இலங்கைப் படத்தில் மாவட்டங்களையும் நகரங்களையும் குறித்தல்.

iii. குட்டிப் பாராளுமன்றத்தைப் பாடசாலையில் நடத்திக் காட்டுதல்.

# 8. பழக்கவழக்கங்களும் பொறுப்புக்களும்

## 8.1. தனியார் ஆள் அடையாளத்துக்கு அனைவருக்கும் உரிமையுண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.

இலங்கை எமது தாய்த் திருநாடு; இது வளர்ச்சி காணவேண்டும். நாட்டின் வளர்ச்சி, மக்களிடத்தே தான் தங்கியுள்ளது. நமது நாட்டில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் முதலிய பல இனமக்கள் வாழ்கின்றனர். தமிழ், சிங்களம் முதலிய மொழிகள் பேசப்படுகின்றன. இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறீத்தவம் முதலிய பல்வேறு சமயங்களும் உள. இலங்கை மக்கள் பலவகைப்பட்ட பழக்க வழக்கங்களையும் உடையவர். வாழ்வுமுறைகளிலும் வேறுபாடுகள் உண்டு.

ஒவ்வொரு பிரசைக்கும் உரிமைகளும் கடமைகளும் உண்டு. அவற்றை அறிந்து கொள்ளுதல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் பொழுது சுதந்திரமாகவே பிறக்கின்றோம்; மனச்சாட்சி பகுத்தறிவு என்பன எம்மிடம் உண்டு. நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவிடல் வேண்டும்.

கல்விகற்கும் உரிமை, தொழில்புரியும் உரிமை, அனுபவிக்கும் உரிமை, கருத்தை வெளியிடும் உரிமை, தான் விரும்பும் மதத்தை அனுட்டிக்கும் உரிமை என்பனவெல்லாம் உண்டு. ஒருவர் உரிமையை மற்றவர் மறுக்கும் நிலை மாற வேண்டும். மதிக்கும் நிலை உருவாதல் வேண்டும். ஒருவர் அடுத்தவரின் சுபாவத்தை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அன்பு, அருள், அடக்கம், வாய்மை, பிறர்நலம் பேணுதல் முதலிய உயர் குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுதல் வேண்டும். பிறர் உரிமைகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும். உறுதி அளித்தல் வேண்டும்.

நாம் எல்லோருமே இலங்கை மாதாவின் இனிய புதல்வர்கள் என்ற ஒருமைப்பாட்டு உணர்வை வளர்த்தல் வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை கண்டு பிறர்க்குதவும் பெருங்குணத்தை வளர்த்தல் வேண்டும். நாமுயர நாடுயரும்.

## 8.2. மற்றையவரின் அடையாளத்திற்கு மதிப்பளிப்பதற்குப் பழகுதல்.

ஒரு சைவ ஆலய உற்சவத்தின்போது, வலம்வரும் சுவாமி மற்றுமொரு கிறீத்தவ தேவாலயத்தை அல்லது பௌத்த விகாரையை அல்லது முஸ்லிம் மசூதியைக் கடக்கவேண்டி இருக்கின்றது என்று வைத்துக்கொள்வோம். பிற மதத்தினருக்கு மதிப்பளிப்பதற்காக மேளதாள முழக்கங்களைக் குறித்த இடத்தில் தவிர்த்துக் கொள்ளுகிறார்கள். அமைதியாக மேலே செல்கிறார்கள். இது மற்றவருக்கோ மற்றொரு மதத்துக்கோ தரும் மதிப்பாகும்.

முதியோர், தாய்தந்தையர் வரும்போது எழுந்து மரியாதை செய்கின்றோம். கல்விமான்கள் குரு முதலியோருடன் விநயமாக நடந்து கொள்ளுகின்றோம். உயரதிகாரிகளைக் காணச் செல்லும்போது சமய சந்தர்ப்பம் அறிந்து அவருக்கு மதிப்பளித்து உள்ளே சென்று காணுகின்றோம்.

வீதிவழியே செல்லும்போது யாராயினும் ஒருவரது " இறுதி " ஊர்வலம் வருகின்றது என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது தலையில் தொப்பியோ வேறு தலைப்பாகையோ இருப்பின் அதனைக் கழற்றி ஒதுங்கி மதிப்பளிக்கின்றோம்; " அஞ்சலி " செய்கின்றோம். இவ்வாறாக தனி ஒருவருக்கோ சமூகத்துக்கோ மதிப்பளிக்கும் வழக்கம் சிறந்த ஒரு பண்பாகும்.

இலங்கை வரலாற்றில் ஒரு செய்தி, சிங்கள அரசன் ஒருவன், தன்னுடன் போரிட்டு மடிந்த மற்றொரு இனத்து வேந்தனுக்கு மதிப்பளித்து ஒரு சமாதி கட்டுவித்தானாம். எவராகிலும் அவ்வீதி வழியே வரும்போது வண்டி வாகனங்களில் இருந்து இறங்கிச் செல்லவேண்டும். குறித்த பகுதியைக் கால் நடையாகக் கடந்து செல்லவேண்டுமாம். முடிவில் வண்டி வாகனங்களில் ஏறிச் செல்லும்படி சாசனம் செய்திருந்தானாம். பகைவனையும் மதிக்கும் பண்பு பாராட்டுதற்குரியது அன்றோ! அது இளம் உள்ளங்களில் மலரவேண்டும்.

### 8.3. சமூகத்தில் தனி ஆட்கள் இடையே உள்ள மதிக்கக்கூடிய நடத்தைக் கோலங்களை இனங்காணுதல்.

ஒருநாள் கண்ணன் வீட்டிற்குச் சைவப்பெரியார் ஒருவர் வருகை தந்தார். கண்ணனின் அப்பாவும் அம்மாவும் அவரை வரவேற்றனர். அப்பா, அம்மா, அக்கா முதலியவர்கள் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி உபசரித்தனர். கண்ணனும் வீழ்ந்து வணங்கினான்.

பெரியார் சென்றபின் கண்ணன், அவரை வணங்கியதற்குரிய காரணத்தை விசாரித்தான். தாயார், சமயப் பெரியார்கள், துறவிகளுக்கு மதிப்பளித்து அவர்களை வணங்கி வழிபடுவது எமது பண்பாடு. அவர்களின் ஆசி எம்மை வாழ்விக்கும் என்று கூறிவைத்தார்.

அயலில் இருந்த பாட்டியார் அங்கே வந்தார்; கண்ணா எங்கள் முன்னோர் அரசன், உபாத்தியார், தாய்தந்தை, அண்ணன், குரு முதலியவர்களை வணங்கி வந்தனர். அவர்களைத் தேவர் நிலையில் வைத்து வணங்கினர் என்று கூறினார்.

தனி மனிதர்கள் நிலையில் இருந்து நாடு போற்றும் தெய்வநிலைக்கு உயர்ந்தவர்கள் பலர் உளர்; புத்தமகான், இயேசுபிரான், திருவள்ளுவர், சமயகுரவர்கள், காந்தியடிகள் முதலானோர் அத்தகையவர். நாவலர் பெருமானும் அத்தகையவரே!

எங்கள் சமூக மத்தியில் சேவையால் உயர்ந்த சிலர் இருப்பதை அறிவீர்கள். நல்லாசிரியர், சமாதான நீதிபதி, புலவர்கள், பொதுப்பணியாளர்கள் எல்லோரும் நாம் தொழும் தகையவர்களே! இவர்களுக்கெல்லாம் நன்மதிப்பளித்து நாட்டில் நல்லவர்களாக வளர்ந்து வாழவேண்டும்.

### 8.1. நீங்கள் கற்றவை :

1. நமது நாட்டின் வளர்ச்சி நம்மிலேதான் தங்கியுள்ளது.
2. இலங்கையில் பல இனமக்கள் வாழ்கின்றார்கள்.
3. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன.
4. சைவம், பௌத்தம், இஸ்லாமியம், கிறீத்தவம் முதலிய சமயங்களும் பல்வேறு கலாசாரங்களும் உண்டு.
5. ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையும் கடமையும் உண்டு.
6. சுதந்திரத்துடன் பிறந்த எமக்கு மனச்சாட்சி, பகுத்தறிவு என்பன உண்டு.
7. நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவிடவேண்டும்.
8. கல்விகற்றல், தொழில்புரிதல், வாழ்க்கை வசதிகளை அனுபவித்தல், தன்கருத்தை வெளியிடல், விரும்பிய மதத்தைப் பின்பற்றல் முதலிய உரிமைகள் உண்டு.
9. ஒருவர் உரிமையை மற்றவர் மறுக்கும் நிலைமாற வேண்டும்.
10. பிறர் இயல்பை அறிந்து நடக்கும் பெருங்குணம் வேண்டும்.
11. அன்பு, இரக்கம், வாய்மை முதலிய விழுமிய குணங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**8.2. நீங்கள் கற்றவை :**

1. ஒரு சமயத்தவர் அடுத்த சமயத்தவர் பழக்கவழக்கங்களுக்கு மதிப்பு அளித்தல் வேண்டும்.
2. முதியோர், தாய்தந்தை, குரு முதலியவர்களுக்கு மதிப்பு அளித்தல் வேண்டும்.
3. கல்விமான்கள், சமயப் பெரியோர்களிடம் விநயமாக நடத்தல் வேண்டும்.
4. அனுமதியின்றி ஒருவர் பொருளைத் தொடுதல் ஆகாது.
5. இறுதி ஊர்வலத்தின் போது மரியாதை செய்தல் வேண்டும்.
6. தனி ஒருவருக்கோ ஒரு சமூகத்துக்கோ தரும் மதிப்பு சிறந்த பண்பாகும்.
7. பகைவனுக்கும் மதிப்பளித்தல் சிறந்த பழக்கமாகும்.

**8.3. நீங்கள் கற்றவை :**

1. துறவியர், குரு முதலியவர்களுக்கு மதிப்பளித்தல் எமது பண்பாகும்.
2. முன்னோர் சிறந்த பழக்கவழக்கங்களைப் போற்றி வளர்த்தனர்.
3. அரசன், உபாத்தியார், தாய்தந்தை, அண்ணன், குரவர் இவர்களைத் தேவர் வரிசையில் வைத்து வணங்கினர்.
4. தனிமனித நிலையில் இருந்து தெய்வநிலைக்கு உயர்ந்தோர் பலர்.
5. நல்லாசிரியர் சேவையால் உயர்ந்தோர் சமாதான நீதிபதி முதலியோர்களுக்கு மதிப்பளித்துப் போற்றவேண்டும்.

## மீட்டற்பயிற்சி

**மிகச்சுருக்கமான விடை தருக.**

i. ஒரு நாட்டின் வளர்ச்சி எவர் கையில் தங்கியுள்ளது?

..........................................................................................................

ii. ஒரு பிரசைக்கு உரிய உரிமை இரண்டு கூறுக?

..........................................................................................................

iii. உயர்குணம் என்று போற்றப்படுவன இரண்டு கூறுக?

..........................................................................................................

iv. நீர் ஆசனத்தில் இருந்து எழுதிக்கொண்டிருக்கின்றீர் அங்கு ஒரு பெரியார் வருகின்றார். யாது செய்வீர்?

v. "மன்னிக்க வேண்டும்" என்ற தொடர்பை பயன்படுத்தக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கூறுக?

..........................................................................................................

**கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.**

i. நாம் ________________ அறிந்து நடத்தல் வேண்டும். (பிறர் / நண்பர்)

ii. இறுதி ஊர்வலத்தின்போது ____________________ கழற்றவேண்டும். (சட்டையை / தொப்பியை)

iii. கண் தெரியாத ஒருவர் ________________ குறுக்கிடும்போது அவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். (சந்தையை / வீதியை)

iv. கண்ணன் __________ சமயத்தவன். (சைவ / பௌத்த)

v. தந்தைதாயர் ____________ தட்டக்கூடாது. (சொல்லை / மதிப்பை)

**நல்லொழுக்கம் பற்றி 5 வசனங்கள் எழுதுக.**

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

**செயற்பாடு :**

i. ஆசிரியருடன் மதகுரு வீட்டிற்குச் சென்று திரும்புதல்.

ii. திருவள்ளுவர் ஒழுக்கம் பற்றிக் கூறும் 2 குறட்பாக்களை ஆசிரியர் உதவியுடன் எழுதி மனனம் செய்யுங்கள்.

# 9. நாமும் போக்குவரத்தும்

## 9.1. இலங்கையில் போக்குவரத்து மாற்றமடைந்த விதம் தொடர்பாகத் தேடி அறிதல்.

பண்டைக்கால மக்கள் கால்நடையாகவே போக்குவரத்துச் செய்தனர். போக்குவரத்துத் துறையில் நாளாக நாளாக முன்னேற்றம் உண்டானது! புதிய தொழில் நுட்பத்தின் செல்வாக்கு அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

முதலில் வண்டிகள் மிருகங்களின் வலுவைப் பயன்படுத்தியே செயற்பட்டன. பின்னர் நிலக்கரியைப் பயன்படுத்தி ஓடும் புகைவண்டிகள் உபயோகத்துக்கு வந்தன. பின்னர் நீராவி பயன்படுத்தப்பட்டது. இப்போது புகைவண்டிகள் மின்சக்தி மூலம் மிகவும் வேகமாகச் செல்கின்றன. மேலும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் முதலிய எரிபொருள்கள் பாவனைக்கு வந்துள்ளன. போக்குவரத்துச் சாதனங்களும் பெருகி உள்ளன. சைக்கிள்வண்டி, மோட்டார்வண்டி, முச்சக்கரவண்டி, வசுவண்டி, மினிவசுவண்டி முதலியன மக்களின் நாளாந்த உபயோகத்துக்கு சாதனங்கள் ஆகிவிட்டன.

அன்றியும் வீதிகளில் பெரிய லொறிகள் (றக்வண்டிகள்) போன்ற கனரக வாகனங்கள், சென்று கொண்டிருக்கின்றன. இந்நாளில் கடல் மார்க்கமாகச் செல்வதற்கு படகுகளை விட நீராவிப் படகுகள், அதிவேகப் படகுகள், பாரிய கப்பல்கள் முதலியன பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.





வான்வழிப் பயணங்களுக்கு உலங்கு வானூர்திகள், எயர்வசுக்களும் மற்றும் போர்விமானங்களும் உபயோகத்தில் இருக்கின்றன.

முன்பெல்லாம் தனிமனிதன் தனது தேவைகளுக்காக மட்டும் பிரயாணம் செய்தான். இன்று, தொழிற்சாலைகளுக்குரிய மூலப்பொருள்களைக் கொண்டு வரவேண்டி இருக்கின்றது. அல்லாமலும், உற்பத்திப் பொருள்களை உள்ளூரிலும் வெளியேயுள்ள நகரங்களுக்கும் விற்பனைக்காகக் கொண்டு செல்லவேண்டி உள்ளது. வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டி இருக்கின்றது. துறைமுகங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்லவேண்டும். அதனால் கப்பற்சேவைகளும் அதிகரித்துள்ளன.

**9.2. போக்குவரத்து வசதிகளின் அதிகரிப்புடன் நிகழும் சூழல் தாக்கங்கள் தொடர்பாக உசாவி அறிதல்.**

பிள்ளைகளே! சிறிது நேரம் வீதி ஓரத்தில் ஒதுங்கிநின்று பாருங்கள்! பலநூறு வாகனங்கள் வீதியைக் கிழித்துக்கொண்டு ஓடுகின்றன. சனநெரிசல் மிக்க நகரங்களில் கால் நடையாகச் செல்ல முடியாதிருக்கும். கொழும்பு போன்ற நகரங்களில் ஒரே நேரத்தில் பலநூறு வாகனங்கள் வந்து கொண்டிருக்கும் போய்க் கொண்டிருக்கும். அவற்றை நெறிப்படுத்த மின்சக்தியால் இயங்கும் "சமிக்கை" பெரிதும் உதவுகின்றது. வாகனங்களில் இருந்து எழும் புகையும் ஒலியும் சூழலை மாசுபடுத்துகின்றன.

வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை நம்மைச் சூழ்ந்திருக்கும் வளியை மாசுபடுத்துகின்றது. புகையிலுள்ள காபனீரொட்சைட்டு போன்றவை மனிதருக்குத் தீங்கு விளைவிக்கும்.

வாகனங்களில் இருந்து எழும் இரைச்சலும் தீமை விளைவிக்கும் என்பது ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது. வரையறையின்றிச் சுற்றாடல் மாசுபடுமானால் மக்கள் உடல் நலம் கெட்டு நோய்களினால் வருந்தவேண்டி வரும். இக்கால மக்களையன்றி எதிர்கால மக்களைப் பாதிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

ஒரு நாட்டின் மதிப்பிட முடியாத மூலவளம் மனித இனமாகும்; அந்நாட்டின் குடியிருப்பாளர்களாகும். அவர்களுக்கு தீங்கேற்படுவதை அகற்றும் முயற்சிகளில் அரசும் மக்களும் செயற்பட வேண்டும்.

**9.3. போக்குவரத்து வசதிகளும் மனிதனின் வாழ்க்கைக் கோலமும் மாற்றமடைந்துள்ள விதம் தொடர்பாகக் கண்டறிதல்.**

காலையில் எழுந்து வீதியில் நின்றால், சீருடை அணிந்த பள்ளி மாணவர் வசுவண்டிக்காக எதிர்பார்த்து நிற்பதைக் காணலாம். மேலும் அலுவலகம், தொழிற்சாலை முதலியவற்றுக்குச் செல்வோர் முண்டியடித்துக் கொண்டு வசுவண்டியை எதிர்பார்த்தபடி கலவரம் அடைந்த நிலையில் நிற்பதையும் காணலாம். சிலர் நிலத்தில் வீழ்ந்து காயமடைவது கூடச் சகசமாய் விட்டது.

சனப்பெருக்கம் கூடக்கூடத் தேவைகளும் அதிகரித்தன. மண்வீதிகள் கல்வீதிகள் ஆயின; கல்வீதிகள் தார்வீதிகள் ஆயின; தார்வீதிகள் கொங்கிறீட் வீதிகளாகிக் கொண்டிருக்கின்றன.




கழுதை, எருது, எருமை, குதிரை முதலியவற்றைப் பாரஞ் சுமக்க வைத்த மனிதன் இன்று எரிபொருட் சத்தியால் இயங்கும் பல்வேறு ஊர்திகளை உபயோகிக்கின்றான். யானை முதலிய மிருகங்கள் மரங்களை இழுக்கவும் முறிக்கவும் பயன்படுத்தியவன் "புல்டோசர்" களையும் திறாக்டர்களையும் பயன்படுத்துகின்றான்.

முன்பெல்லாம் தரை வழியைப் பயன்படுத்தியவன் இன்று கடல்வழிகளையும் வான்வழிகளையும் பயன்படுத்துகின்றான்.

கடல்வழிப் பயணத்துக்கு இயற்கைத் துறைமுகத்தை நம்பியிருந்தவன் இன்று செயற்கைத் துறைமுகங்களையும் உண்டாக்குமளவுக்கு முன்னேறிவிட்டான். நமது நாட்டில் திருகோணமலை ஒரு இயற்கைத் துறைமுகமாகும். இந்து சமுத்திரத்தைச் சூழ உள்ள நாடுகளுக்கும் இன்றியமையாத துறைமுகமாக விளங்குகின்றது.

நமது நாட்டில் கொழும்பு, காலி, காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை முதலிய பல துறைமுகங்கள் உண்டு. காலித் துறைமுகம் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

வான்வழிப் பயணத்துக்கு கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் முக்கியமாக விளங்குகின்றமையை முன்பு படித்தீர்கள். எதிர்காலத்தில் எமது நாட்டில் போக்குவரத்தில் பாரிய மார்க்கங்கள் ஏற்படலாம்.

### 9.1. நீங்கள் கற்றவை :

1. கால்நடையாகச் சென்ற ஆதிமனிதன், போக்குவரத்துக்கு மிருகங்களைப் பயன்படுத்தத் தொடங்கினான்.
2. சில்லின் உபயோகத்துடன் மிருகங்களின் வலுவினால் வண்டிகள் பயன்படுத்தப்பட்டன.
3. புகைவண்டி நிலக்கரியின் உபயோகத்தால் ஓடத்தொடங்கியது.
4. சைக்கிள்வண்டி, மோட்டார்வண்டி, மோட்டார்சைக்கிள், வசு, மினிவசு முதலிய பல பிரயாண சாதனங்கள் நிலத்தில் ஓடத்தொடங்கின.
5. வானிலே விமானங்களும் கடலிலே கப்பல்கள், அதிவேகப் படகுகளும் பயன்பட்டு வருகின்றன.
6. பெரிய லொறிகள், கனரக சாதனங்கள் நிலத்திலே ஓடத்தொடங்கின.
7. பிரயாண சாதனங்கள் தனிமனித தேவையுடன் நின்றுவிடவில்லை.
8. தொழிற்சாலை மூலப்பொருள்கள், விநியோகப்பொருள்கள் முதலியவற்றைக் கொண்டுவரவும் விநியோகிக்கவும் உதவுகின்றன. யுத்த தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

### 9.2. நீங்கள் கற்றவை :

1. வீதியில் சில நிமிடங்களுக்குப் பலநூறு வாகனங்கள் சென்றுவருகின்றன.
2. பெரிய நகரங்களில் வாகன நெரிசலும், சனநெரிசலும் மிகுதியாகக் காணப்படுகின்றன.
3. சனநெரிசலைச் சரிசெய்யவும், பிரயாண நெரிசலைக் கட்டுப்படுத்தவும் பொலிசாரும் மின் சமிக்கைகளும் உபயோகமாக இருக்கின்றனர்.
4. இவற்றால் சூழல் மாசடைகின்றது.
5. புகை மட்டுமன்றி ஒலியும் கூடச் சூழலைப் பாதிக்கின்றது.
6. சூழல் மாசடைதல் மக்களை வெகுவாகப் பாதிக்கும்.
7. அரசும் மக்களும் மாசடையா வண்ணம் பேணவேண்டும்.

### 9.3. நீங்கள் கற்றவை :

1. வீதிகளில் பலபல திறத்தினர் காணப்படுகின்றனர், பிரயாண சாதனங்களை எதிர்பார்த்து நிற்கின்றனர்.
2. சனப்பெருக்கம் கிராமத்தில் / நகரத்தில் மாபெருந் தாக்கங்களை உண்டாக்கி வருகின்றது.
3. வீதி விஸ்தரிப்பு, வீட்டு விஸ்தரிப்பு என்பன நாளிலும் பொழுதிலும் வளர்ந்த வண்ணம் இருக்கின்றன.

4. பிரயாண சாதனம், மற்றும் புல்டோசர் போல்வன எரிபொருள் வலுவால் தொழிற்படுகின்றன.
5. தரைவழி, கடல்வழிகளைப் பயன்படுத்தியவன், இன்று வான்வழியையும் பயன்படுத்துகின்றான்.
6. கடல்வழிப் பயணத்துக்கு இயற்கைத் துறைமுகங்களும் செயற்கைத் துறைமுகங்களும் உதவுகின்றன.
7. வான்வழிப் பயணத்துக்கு கட்டுநாயக்கா விமான நிலையம் முதன்மை வகிக்கின்றது.

## மீட்டற்பயிற்சி

### மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

i. ஆதிமனிதன் தொடக்க காலத்தில் பிரயாணத்துக்குப் பயன்படுத்திய சாதனம் :
(1) பல்லக்கு (2) விலங்கு (3) கட்டுமரம்

ii. இலங்கையில் புகைவண்டிப் போக்குவரத்தைத் தொடக்கி வைத்தவர் :
(1) ஒல்லாந்தர் (2) பிரித்தானியர் (3) போர்த்துக்கேயர்

iii. இலங்கையில் பிரயாண சாதனங்களின் அதிகரிப்புக்குக் காரணம் :
(1) தொழிற்சாலைப் பெருக்கம் (2) இயற்கைத் துறைமுகம் (3) எரிபொருள் அதிகரிப்பு

iv. வளி மாசடைவதற்கான காரணிகளில் ஒன்று :
(1) மரநடுகை இயக்கம் (2) வாகனங்களின் புகை (3) பணப்பெருக்கம்

v. நாடுகளுக்கிடையே தூரமும் நேரமும் குறைவடையக் காரணம் :
(1) மக்கள் இடம்பெயர்வு (2) பிரயாண சாதன வளர்ச்சி (3) கல்வி மேம்பாடு

### இணைத்துக்காட்டுக.

| | |
|---|---|
| i. புதிய தொழில்நுட்பத்தின் செல்வாக்கு | (அ) அது மனிதனுக்குத் தீங்கு விளைக்கின்றது |
| ii. டீசல் எண்ணெய் உபயோகத்தின் பயனாக | (ஆ) கிறெயின் பயன்படுகிறது |
| iii. வான்வழிப் பயணங்கள் | (இ) போக்குவரத்து முன்னேற்றம் அடைந்துள்ளது |
| iv. புகையில் காபனீரொட்சைட்டு உண்டு | (ஈ) திறாக்டர் வண்டிகள் இயங்குகின்றன |
| v. சனப்பெருக்கம் கூடக்கூட | (உ) உலங்கு வானூர்திகள் உதவுகின்றன |
| vi. பாரமான பொருள்களைத் தூக்க | (ஊ) தேவைகளும் அதிகரித்துவிட்டன |

### வசுவண்டி பற்றி 5 வசனம் எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

### செயற்பாடு :

i. பிரதான வீதி ஓரத்தில் அரை மணிநேரம் தரித்து நின்று அங்கு போகும் திரும்பும் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறித்துக் கொள்ளல்.


ii. அண்மையில் உள்ள புகைவண்டி நிலையத்தைச் சென்று பார்த்தல்.


# 10. நாம் எவ்வாறு வளர்கிறோம்

## 10.1. விருத்திக்கு ஓய்வு, களிப்பு, விளையாட்டுகள் என்பன தேவையென விளங்கிக் கொள்ளுதல்.

தாய்வயிற்றில் இருந்து பிறந்து, தாய்ப்பால் உண்டு படிப்படியாக வளர்ந்து தொடங்கி நாமே நமது உணவை உண்ண முற்பட்டோம். எழுந்து நின்று, சுவையுணர்ந்து, பார்வை பெற்று, மனமறிந்து, கேட்டு, தொட்டுணர்ந்து, விளையாடத் தொடங்குவோம். நடை பயின்று மகிழுவோம். ஆண்டு இரண்டளவில் கற்பனை வளர்ந்து குழந்தையாகி நிற்போம். பாலன் குமரன் நிலை அடைவோம்.

எமது உடல் வளரவள்ர ஆற்றல்களும் வளர்கின்றன. ஒவ்வொருவரும் எமது தனித்துவத்தைத் தெரிந்து கொள்ளுகின்றோம். பிறரின் நிலையை மதிக்கும் தன்மையும அடைகின்றோம்.


நிறை


உயரம்

எமது உடல்வளர்ச்சிக்குத் தூய வளி, தூய நீர், நிறை உணவு, சூரிய ஒளி, வசதியான வீடு என்பன வேண்டும். வளி இன்றி எந்த உயிரும் வாழ முடியாது. நாம் சுவாசிக்கும் போது ஒட்சிசனை உட்கொள்ளுகின்றோம். காபனீரொட்சைட்டை வெளியிடுகின்றோம். தூயவளி புகை, தூசு, துர்நாற்றம் முதலியவற்றால் மாசடைகின்றது. மாலை வேளைகளில் கடற்கரை, பூந்தோட்டம், விளையாட்டு மைதானம் முதலிய இடங்களில் தூயவளி உண்டு. காற்று உள்ளே புகவும் வெளியே செல்லவும் யன்னல்களைத் திறந்து விடவேண்டும்.

எமக்கு நீர் பலவழிகளில் கிடைக்கின்றது. கொதித்தாறிய நீரையோ, வடிகட்டிய நீரையோ பருகுதல் வேண்டும். கிணற்று நீரை குளோரின் இட்டும் தூய்மையாக்கலாம்.


திறந்த அசுத்தநீர்    வடிகட்டிய துப்பரவான நீர்

குழந்தைப் பருவத்திற்குத் தாய்ப்பால், பசுப்பால், பாற்பொருள்கள் சிறந்த உணவுகளாகும். பின்னர் காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, உயிர்ச்சத்துக்கள் அடங்கிய உணவுகளை உண்ணவேண்டும். உடல்வளர்ச்சிக்கு காபோவைதரேற்று வீதம் 10 க்கும் புரதம் 6 க்கும் கொழுப்பு 4 க்கும் இருக்கவேண்டும் என்று அறியப்பட்டுள்ளது. மேலும் சூரியவெளிச்சம் வசதியான வீடு என்பனவும் இன்றியமையாதனவாம்.

**ஓய்வு :**

மனிதனும் ஏனைய விலங்குகளும் ஏன் தாவரங்கள் கூட ஓய்வை விரும்புகின்றன. உங்கள் பாடசாலையில் இடைவேளையில் சிறிது நேரம் ஓய்வு விடப்படுகின்றது அல்லவா?



தொழிலாளர் மாத வேலை செய்த பின்னர் ஓய்வெடுப்பதைக் கண்டிருப்பீர்கள். ஏன் பசுமாடு அங்குமிங்கும் திரிந்து புல்லை மேய்ந்த பின் ஓரிடத்தில் படுத்திருந்து ஓய்வெடுத்து இரை மீட்டலை அறிந்திருப்பீர்கள்.

மனித உடல் வளர்ச்சிக்கும் ஓய்வு இன்றியமையாததாகும். பலவழிகளில் நைந்துபோன உடற்கலங்கள் ஓய்வின்போது ஈடுசெய்யப்படுகின்றன.

நாம் இரவு வேளைகளில் நித்திரை செய்கின்றோம். அப்பொழுது எமது உடற்கருவிகள் ஓய்வெடுக்கின்றன. குழந்தைகளுக்கு கூடிய நேர நித்திரை தேவைப்படுகிறது. வளர்ந்தவர்களுக்கு அவ்வளவு தேவைப்படுவதில்லை. சுமாரான நித்திரை போதும்.

**களிப்பு :**

இதனை மகிழ்ச்சி என்றும் கூறுகின்றோம். மகிழ்ச்சி மனத்துக்கு இதம் அளிக்கின்றது. கவலைகளை மறக்கச் செய்கின்றது. "சிரித்து வாழ வேண்டும்" என்று கூறப்படுவதை நீங்கள் கேட்டிருக்கக்கூடும். மனக்கவலை தனிமனிதரது வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து விடும். நோய் நொடி இன்றிவாழ மகிழ்ச்சி மிகவும் உதவும்.

**விளையாட்டு :**

இது மனிதவளர்ச்சிக்கு வேண்டியவற்றுள் ஒன்றாகும். விளையாட்டுக்களின் மூலம் அன்றாடம் உபயோகமானது போக எஞ்சியிருக்கும் மிதமிஞ்சிய சத்தி இதன் வாயிலாகச் செலவாகிறது. விளையாட்டுக்களில் சுதேச விளையாட்டு, மேற்கு நாட்டாரிடம் இருந்து கற்றுக் கொள்ளப்பட்டவை என இருபகுதியாக உண்டு.



சுதேச விளையாட்டுகளில், கெந்தி அடித்தல், வாரோட்டம், கிட்டிபுள் அடித்தல், கிளித்தட்டு மறித்தல் முதலாகப் பலவுள. மேற்கு நாட்டவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவற்றில் கிறிக்கற், கைப்பந்தாட்டம், கூடைப்பந்து, மேசைரென்னிஸ் இன்னும் பல விளையாட்டுக்கள் இடம்பெறும்.

**10.2. "ஒருவரின் நற்குணங்களும் நற்பழக்கங்களும் சமூகத்தின் அபிவிருத்திக்கு உதவுகின்றன" என்பதனை விளங்கிக் கொள்ளுதல்.**

தாயார், எம்மை ஈன்று வளர்க்கிறார்; தந்தை நல்லொழுக்கம் காட்டி கல்வி கற்பிக்கிறார். அன்பு, நாண், ஒப்புரவு, இரக்கம், வாய்மை முதலியவற்றுடன் கூடிய "சான்றோன்" ஆக்க உழைக்கின்றார். இவ்வாறாக நாளெல்லாம் நற்குண நற்பழக்கம் மிக்கோராக எமை ஆக்குவதிலேயே தங்காலத்தைக் கடத்துகின்றனர். நாமும் அவர்கள் பயிற்றும் பழக்க வழக்கங்களையும் நற்குணங்களையும் அறிந்து பின்பற்றுகின்றோம் அறியாமலும் பின்பற்றுகின்றோம்.

மேலும்; ஆசிரியர், பெரியோர், குரு முதலியவர்களின் உபதேசங்களும் எம்மை வழிநடத்துகின்றன. இவர்களின் உடை, நடை, பழக்கம், முதலியன எம்மிடம் பதிந்து கொள்கின்றன.

ஒரு குடும்பத்தின் வளர்ச்சி, அக்குடும்ப உறுப்பினர்களின் வளர்ச்சியிலே தான் தங்கியுள்ளது. ஒரு சமூகத்தின் வளர்ச்சியும் அதைச் சேர்ந்த குடிமக்களின் வளர்ச்சியிலேதான் தங்கியுள்ளது. ஏன்? ஒரு நாடும்கூட அப்படித்தான்.

ஒவ்வொரு நாடுகளிலும் கல்வி அறிவொழுக்கங்களில் சிறந்த பல பெரியோர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்களாலே அந்நாடுகள் நலம் பெற்றன.

" தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம் " காந்தி மகானால் சுதந்திரம் அடைந்தது சுபீட்சம் பெற்றது.

நமது நாட்டுத் தமிழர் சமூகத்திலும் ஆறுமுகநாவலர், இராமநாதன், அறிஞர் எம். சி. சித்திலெப்பை, விபுலானந்த அடிகள் போன்றவர்கள் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்து நின்று மக்கள் அபிவிருத்திக்கு அரும்பெரும் பணி புரிந்துள்ளனர்.

பிள்ளைகளே! நீங்களும் நற்குண நற்பழக்கவழக்கம் மிக்கோராய் வளர்ந்து உங்கள் சமூகத்துக்கும் நாட்டுக்கும் நல்ல பணி புரிதல் வேண்டும்.

### 10.3. உடல் உள விருத்திக்கு உதவும் பழக்கவழக்கங்களை நடைமுறையில் கைக்கொள்ளப் பழகிக் கொள்ளல்.

" தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் " என்பது பழமொழி. நாம் சிறு வயது முதற்கொண்டே உடல் உள விருத்திகளுக்கு உதவும் பழக்கங்களை அறிந்து கடைப்பிடித்து வருதல் வேண்டும். உடல் வளர்ச்சிக்குகந்தன பலவுள; இங்கு நாம் ஒருசில பழக்கவழக்கங்களைத் தெரிந்து கொள்ளுவோம்.

சுத்தம் சுகம் தரும்

கைகளைக் கழுவிச் சுத்தமாக வைத்திருங்கள்



கண்ணைச் சுத்தம் செய்யுங்கள்

முகச் சுத்தம் செய்யுங்கள்

மூக்கைச் சுத்தமாக வைத்திருங்கள்



குளித்து சுத்தமாக இருத்தல்

பற்களைத் துலக்குதல்

வாயை சுத்தமாக வைத்திருத்தல்



தலைவாரி சுத்தம் செய்தல்

நகங்களை சுத்தமாக வைத்திருத்தல்

பிள்ளைகளே! நீங்கள் வீட்டிற் காலையில் நித்திரை விட்டு எழுதல் வேண்டும். காலைக் கடமைகளை இனிது நிறைவேற்ற வேண்டும். நீராடிய பின் தோய்த்துலர்ந்த உடுப்புக்களை உடுத்தல் அவசியம். நல்ல உடலைத் தந்த கடவுளுக்கு நன்றி கூறும் முகமாக வழிபாடு செய்தல் வேண்டும். உணவருந்திய பின் பாடசாலைக்குரிய சீருடையை அணிந்து சென்று படித்தல் வேண்டும். பாடசாலை முடிவடைந்ததும் அமைதியாக வீட்டை அடைந்து உடைகளை மாற்றிக் கைகால்களைக் கழுவி உணவுண்டு ஓய்வெடுத்தல் வேண்டும். மாலையில் மனமொத்த தோழருடன் விளையாட வேண்டும். பின் உடலைச் சுத்தி செய்து விளக்கேற்றி இறைவழிபாடியற்றிப் பள்ளிப் பாடங்களைப் படித்து முடித்து உணவருந்தி நித்திரைக்குப் போதல் வேண்டும்.

" வைகறைத் துயிலெழு " என்பார்கள்; அது நினைவாற்றலை மிகுவிக்கும். புத்துணர்வையும் தரும். " ஆலும் வேலும் பல்லுக்குறுதி " ஆலம்விழுது, வேப்பங்குச்சி முதலியவற்றால் முன்னோர் பல்துலக்கினர். இப்போது பல்வேறு வகையான பற்பசைகளைப் பயன்படுத்துகின்றோம். அழுக்குடையை அணிவதால் நோய்கள் உண்டாகும். " கூழானாலும் குளித்துக் குடி ; கந்தையானாலும் தோய்த்துடு " என்று முன்னோர் கூறினர். காலை உணவு மென்மையானதாய் இருத்தல் நன்று. நற்சுகத்துக்காக ஒருவர் 8 குவளை தண்ணீர் அருந்த வேண்டும் என்பர். மதிய உணவு காபோவைதரேற்று, இலிப்பிட்டு, புரதம் முதலியன கொண்ட நிறை உணவாக இருத்தல் அவசியம். ஓய்வு மிக முக்கியமானதென முன்னர் அறிந்தோம். மாலையில் விளையாடுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். உடல் நலத்தைப் பேணினால் வாழ்வு மகிழ்ச்சியாக இருக்கும். தந்தைதாயார், பெரியோர் முதலியவர்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.


சுத்தமான உடை அணிதல்


வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருங்கள்


கண்ட இடத்தில் குப்பைகளைப் போடாமல் அதற்கான இடத்தில் போடவும்


கழிப்பறையில் மலசலம் கழிக்கவும்


துப்பரவான வீடு


இருமும்போது வாய்மறைப்புப் பாவிக்கவும்


கண்ட இடத்தில் துப்பாதீர்கள்


துப்புவதற்கான பாத்திரத்தில் துப்பவும்


உங்களுக்காக உணவுண்ணும் பாத்திரங்களை வைத்திருங்கள்


நிகம் கடிக்காதீர்கள்

நல்வாழ்வுக்கு அடிப்படை உளத்தின் விருத்தியிலேதான் தங்கி உள்ளது. மனவளர்ச்சிக்குரிய பழக்கவழக்கங்கள் பலவுள. இங்கு ஒருசிலவற்றைக் காண்போம்.

1. எப்போதும் எல்லோரிடத்தும் அன்புகாட்டுதல் வேண்டும். பிற உயிர்களிடத்தும் கருணை காட்டுதல் அவசியம்.
2. அமைதி, அடக்கம், பொறுமை முதலியவற்றைப் பேணுதல் வேண்டும். யாரையும் மதிக்கும் வகையில் நடத்தல் வேண்டும்.
3. எந்த நிலையிலும் உண்மை பேசி உத்தமனாய் வாழவேண்டும்.
4. கோபம் பாபம் தரும்; கோபத்தைச் சினம் என்றும் கூறுவர். அது தான் சேர்ந்தாரை எல்லாம் எரித்துப் பொசுக்கும்.
5. இன்சொற் பேசி எவரையும் மகிழ்விக்க வேண்டும்.
6. வெற்றி தோல்விகளைக் கண்டு அஞ்சக்கூடாது.
7. பிறருடன் மரியாதையுடனும் பண்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.
8. யாருக்கும் தவறு செய்துவிட்டால் "தயவுசெய்து மன்னியுங்கள்" என்று கூறவேண்டும்.
9. பிறரிடம் உதவி கோரும்போது "தயவுசெய்து" என்று சொல்லிக் கேட்கவேண்டும்.
10. கிரமம், நேரம் தவறாமை முதலியவற்றைப் பாதுகாத்தல் வேண்டும்.

### 10.1. நீங்கள் கற்றவை :

1. நீங்கள் படிப்படியாக வளர்ந்து இளைஞன் ஆகின்றீர்கள்.
2. ஒவ்வொருவரும் தனித்துவமானவர் என்பதை உணர்கின்றீர்; பிறரின் நிலையையும் மதிக்கும் தன்மையையும் உணர்தல் வேண்டும்.
3. உடல்வளர்ச்சிக்குத் தூயவளி, தூயநீர், நிறையுணவு, ஆரோக்கியமான வீடு என்பன வேண்டும்.
4. நாம் ஒட்சிசனை உட்கொண்டு காபனீரொட்சையிற்றை வெளிவிடுகின்றோம்.
5. வெளியேறும் தூசு, புகை, துர்மணம் மற்றும் பல ஏதுக்களால் வளி மாசடைகின்றது.
6. பூந்தோட்டம், கடற்கரை, விளையாட்டு மைதானம் முதலிய இடங்களில் தூயவளி உண்டு.
7. நீர் பல வழிகளால் மாசு அடைகின்றது; கொதித்து ஆறிய நீரை உண்ணவேண்டும்.
8. தாய்ப்பால், பசும்பால், பாற்பொருள்கள் குழந்தைப் பருவத்துக்கு ஏற்ற உணவுகளாம்.
9. உடல்வளர்ச்சிக்கு காபோவைதரேட்டு, புரதம், இலிப்பிட்டு முதலியன 10 - 6 - 4 என்ற வீதத்தில் அமைவது நலம்.
10. குழந்தைகளுக்கு ஓய்வு, களிப்பு, விளையாட்டு என்பனவும் வேண்டும்.

### 10.2. நீங்கள் கற்றவை :

1. நாம் நற்குண நற்செய்கை உடையவராய் இருத்தல் வேண்டும் என்பது தாய்தந்தையரின் பெரு விருப்பாகும்.
2. பெரியோர், குரு, ஆசிரியர் முதலியோர்களின் உபதேசங்கள் நாம் நல்வழியில் நடக்க உதவுகின்றன.
3. குடும்ப உறுப்பினர்களின் வளர்ச்சியே குடும்ப வளர்ச்சியாகும்.
4. பெரியோர்களாலேயே உலகம் வாழ்கின்றது.
5. காந்தி அடிகள் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார்.
6. எம்மிடையேயும் பல பெரியோர்கள் தோன்றிப் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்கள்.

### 10.3. நீங்கள் கற்றவை :

1. உடல்வளர்ச்சிக்கு வேண்டும் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
2. அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து, அவசிய கருமங்களை நிறைவேற்ற வேண்டும்.
3. சமய ஆசாரங்களைக் கைக்கொண்டு ஒழுகவேண்டும்.
4. நிறை உணவை உட்கொள்ள வேண்டும்.
5. ஓய்வு, விளையாட்டு இவற்றை வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும்.
6. எல்லோரிடமும் அன்புகாட்டிப் பொறுமைபேணி நடத்தல் வேண்டும்.

### மீட்டற்பயிற்சி

**ஆம் அல்லது இல்லை என்பதன் கீழ் கீறிடுக.**

i. படிப்படியாக உடல்வளர ஆற்றலும் வளர்கின்றது. (ஆம் / இல்லை)

ii. தாவரங்கள் காபனீரொட்சையிட்டை உட்கொண்டு ஒட்சிசனை வெளியிடுகின்றன. (ஆம் / இல்லை)

iii. கடற்கரையில் தூயவளி கிடைக்கும். (ஆம் / இல்லை)

iv. உடலின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு புரதம் 10 வீதம் இலிப்பிட்டு 5 வீதம் காபோவைதரேட் 2 வீதம் வேண்டும். (ஆம் / இல்லை)

v. விலங்குகளுக்கு ஓய்வு வேண்டியதில்லை. (ஆம் / இல்லை)

vi. காந்தியடிகள் இலங்கைக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார். (ஆம் / இல்லை)

**மிகவும் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்க.**

i. குழந்தைக்குக் கற்பனை வளரத் தொடங்கும் காலம் :
(1) ஆண்டு 2 (2) ஆண்டு 4 (3) ஆண்டு 16

ii. மனிதனுக்கும் வளிக்கும் உள்ள தொடர்பு :
(1) வாழ்வுக்கு மிக அவசியமானது (2) அவசியமற்றது (3) தொடர்பில்லை

iii. பருகுவதற்கு உவந்த நீர் :
(1) கடல்நீர் (2) குளத்துநீர் (3) கிணற்றுநீர்

iv. நித்திரையில் எமது உடற்கருவிகளின் நிலை :
(1) தொழிற்படுகின்றன (2) ஓய்வெடுக்கின்றன (3) புத்துணர்வு பெறுகின்றன

v. "சிறுவயதுப் பழக்கங்கள் இறுதிவரை தொடர்கின்றன" இதைக் கூறும் பழமொழியைத் தெரிக.
(1) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? (2) தொட்டிற் பழக்கம் சுடுகாடுவரை

**சிறுகுழந்தை பற்றி 5 வசனங்கள் எழுதுக.**

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

**செயற்பாடு :**

i. பாலுணவுகளில் ஒட்டப்பட்டிருக்கும் விபரத்துண்டுகளைச் சேகரித்தல்.

ii. குழந்தைப்பருவம் முதற்கொண்டு கிடைக்கக்கூடிய புகைப்படங்களைச் சேகரித்தல்.

## 11. எமது வளர்ச்சிக்குத் தடையாக அமைவன

### 11.1. உணவும் நீரும் அசுத்தமடையும் முறைகளை இனங்காணல்.

நாம் உணவுக்கு, அரிசி, மரக்கறி, மீன், முட்டை, இறைச்சி, பால், பழம் முதலியவற்றைப் பயன்படுத்துவதை அறிந்திருக்கின்றீர்கள். அவை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே பழுதடையாமல் இருக்கும். பழுதடைந்துவிட்டால் விரைவில் அசுத்தமாகி விடும். பழுதடைந்தவை ஊதிப்போகும். விரும்பத்தகாத மணம் எழும், சுவை அற்றவையாகியும் விடும்.

சில உணவுகள் இலகுவாகப் பழுதடைந்து விடும். பால், பழம், இறைச்சி, மீன், முட்டை முதலியன அத்தகையவை. மற்றுஞ் சில உணவுகள் நாளாக நாளாகப் பழுதடையும். காய்ந்த பழவகை, காய்ந்த விதைவகை, சீனி, மா முதலியன அத்தகையன.

இயற்கையில் மழை, நிலத்தடி ஊற்று, ஆறு, குளம் முதலியவற்றில் இருந்து நீரைப் பெறுகின்றோம். இக்காலத்தில் நகரங்களில் குழாய் நீர் வசதிகளும் உண்டு. நீரில் மென்னீர், வன்னீர் என இருபிரிவுகள் உண்டு. மழை நீர் மென்னீராகும். கிணற்று நீர், ஆற்று நீர், குளத்து நீர் முதலியன வன்னீராகும்.

நீர், பலவிதமான பதார்த்தங்கள் கரைவதனாலும் கழிவுப் பதார்த்தங்கள் கலப்பதனாலும் விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் சேர்வதினாலும் தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதனாலும் அசுத்தம் அடைகின்றது. நோய்களை ஏற்படுத்தும் சின்னஞ்சிறு கிருமிகளை நுண் அங்கிகள் என்று கூறுவர். நுண்ணங்கிகளே அசுத்தத்திற்குக் காரணிகள் ஆகின்றன.


ஆறு, குளம் முதலியவற்றில் அழுக்குகள் சேர்வதாலும் விலங்குகளைக் குளிக்க வைப்பதாலும் இறந்த பிராணிகளின் உடல்கள் கிடந்து சிதைவதாலும் அழுக்குச் சேர்கின்றது. கிணற்று நீர் சுத்தமானது. எனினும் நிலத்தின் மேலே உள்ள வெள்ளம் உள்ளே புகுவதாலும் மாசடைகின்றது. காக்கை முதலியன நீரில் எச்சம் இடுதலினாலும் தீங்கு உண்டாகின்றது. மலசலம் நீரில் கலத்தலாலும் மிக்க கெடுதி உண்டாகின்றது.

### 11.2. அசுத்தமான நீரினாலும் திறந்து வைக்கப்பட்ட உணவினாலும் ஏற்படக்கூடிய நோய்கள் தொடர்பான விளக்கத்தைப் பெறல்.

**உணவும் நீரும் அசுத்தமடையும் முறைகளை இனங்காணல்.**

நாம் உண்ணும் உணவு, அருந்தும் நீர், பால் ஆகியவை மூலமாக மஞ்சட்காமாலை, காலரா, டைபாய்டு, எலும்புருக்கி போன்ற சில நோய்களை உண்டாக்கும் நோய்க்கிருமிகள் பரவுகின்றன. உணவைத் திறந்து வைப்பதால் அதில் நோய்க்கிருமிகள் வந்து சேர ஏதுவாகிறது. ஈக்கள், பூச்சிகள் உணவின் மேல் உட்காருவதாலும் அவற்றின் மூலமாகக் கிருமிகள் உணவில் சேருகின்றன. ஆகவே, தெருவில் விற்கும் தின்பண்டங்களை வாங்கி உண்ணாதீர்கள். காய்கள், பழங்கள் இவற்றைக் கழுவியே பயன்படுத்த வேண்டும். நீரைக் காய்ச்சியே குடிநீராகப் பயன்படுத்த வேண்டும். உயர்ந்த வெப்பநிலையில் நீரிலுள்ள கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் அழிக்கப்படுகின்றன. நீர் தூய்மையாகிறது. கிணறுகள் ஆழமாய் இருத்தல் அவசியம்.


நாம் சுவாசிக்கும் காற்றானது கிருமிகளையும், வைரஸ்களையும் பரப்ப ஏதுவாகிறது. நோயாளி இருமும்போதும், எச்சில் துப்பும்போதும், பேசும்போதும் அவன் தொண்டை, நுரையீரல் இவற்றிலிருந்து நோய்க் கிருமிகள் வெளிப்பட்டு காற்றுடன் அடித்துச் செல்லப்படுகின்றன.



அக்காற்றை நாம் சுவாசிக்கும்போது, அக்கிருமிகள் நம் உடம்பினுள் செல்வதால் நமக்கும் அந்நோய் வரலாம்.



நீ தூங்கும்போது கொசு வலையைப் பயன்படுத்துகிறாயா? கொசுக்கள் வராதபடி அடிக்கடி ஏதாவது மருந்தடிக்கிறாயா? உன் வீட்டைச் சுற்றி நீர் தேங்கி நின்று கொசு வளர்ச்சிக்கு உதவுகிறதா? அவ்வாறு நீர் தேங்காதபடி நீ கவனித்து வரவேண்டும். தொற்றுநோய்கள் மலேரியா, யானைக்கால், போன்றவை கொசுக்கள் மூலமாகவே பரவுகின்றன. நோயாளியைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும்போது, அந்த இரத்தத்துடன் அந்நோய் உண்டாக்கும் உயிர்களும் கொசுவின் உடலுக்குள் சென்று அங்கேயே நன்கு வளர்ச்சியடைகின்றன. பின்பு மற்றொரு மனிதனை அதே கொசு கடிக்கும்போது அதன் உமிழ்நீர் வழியாக இவ்வுயிர்கள் அவன் உடலுக்குள் புகுத்தப்படுகின்றன.



ஆகவே, கொசுக்கள் பெருகுவதைத் தடுக்க வேண்டும். கொசுவலைகளை நாளும் தூங்கும்போது பயன்படுத்த வேண்டும். பிளேக் நோய் கண்ட எலிகளின் மீதுள்ள பூச்சிகள், பிளேக் சுரத்தைப் பரவச் செய்கின்றன. ஆகவே, எலிகளை வீட்டினுள் சேர்க்காமல் எலிப்பொறி அல்லது எலிகளைக் கொல்லும் நச்சு மருந்துகளைக் கொண்டு அவற்றைத் தவிர்க்க வேண்டும்.

அசுத்தமான நீரைப் பருகுவதால் பெருந்தீங்குகள் உண்டாகின்றன. அருவி அல்லது ஆழங்குறைந்த கிணறுகளில் கிடைக்கும் நீரைப் பருகுவோர், வயிற்றுளைவு, தைபோயிட்டு முதலிய நோய்களுக்காளாகிறார்கள். பெரும்பாலான குடல் நோய்களுக்கு நீரில் உள்ள நுண்ணங்கிகளே காரணம் என்று கூறப்படுகின்றது.





பழுதடைந்த உணவுகளின்றித் திறந்து வைக்கப்பட்ட உணவுகள் பலவிதமான நோய்கள் உண்டாவதற்கு ஏதுவாகின்றன. ஈக்கள் முதலியன மலம் முதலியவற்றிலும் அழுக்குப் பதார்த்தங்களிலும் படிந்திருப்பதைக் கண்டிருப்பீர்கள். அவை எப்படியோ உணவுப் பண்டங்கள் திறந்திருப்பதை அறிந்து விடுகின்றன. பறந்துவந்து அவற்றின் மீது படிகின்றன. தாம் காவிக்கொண்டு வந்த நுண்ணங்கிகளை உணவின் மீது விட்டுச் செல்கின்றன. அவ்வுணவுகளை உண்ணும்போது எமக்கு பலவிதமான குடல் நோய்கள் உண்டாகலாம்.

இவ்வாறே நாய், பூனை, கோழி முதலிய வளர்ப்புப் பிராணிகளும் எலி முதலியனவும் நமது உணவைத் தீண்டும்போது தம்மிடம் உள்ள நுண்ணுயிர்களை விட்டுச் செல்கின்றன. மற்றும் பல்லி, பூச்சி முதலியனவும் திறந்து வைத்த உணவுகளில் வீழ்வதுண்டு.

காற்று வீசும்போது வெளியில் உள்ள தூசிகள் வந்து உணவில் வாழலாம். தூசியில் நோயாளிகள் உமிழ்ந்த எச்சில் சளி முதலியவற்றில் உள்ள நுண்ணுயிர்கள் படிந்திருக்கலாம். அவையும் எமது உணவுடன் சேர்ந்து உடம்பினுட் செல்கின்றன. பல்வேறு நோய்களை உண்டுபண்ணுகின்றன.

**11.3. உணவையும் நீரையும் சுத்தமாக வைத்துக் கொள்ளும் முறைகளைக் கண்டறிதல்.**

உணவின் நிறம், சுவை; மணம் இயல்புகள் சில சமயங்களில் மாறுபட்டுக் காண்கின்றோம். அது உணவு பழுதடைகின்றதென்பதைக் காட்டும் அறிகுறியாகும். அது பணவிரயத்தை உண்டாக்குவதோடு உணவுத் தட்டுப்பாட்டையும் கொண்டுவரும்.

பழங்கால மக்கள் இறைச்சியைத் தேனில் இட்டுக் காப்பாற்றினர். விதை, பழம் முதலியவற்றுட் சிலவற்றை அவித்துச் சூரிய வெப்பத்தில் உலரவைத்துக் காத்தனர்.

இக்காலத்தில், உணவைப் பாதுகாத்து சுத்தமாக வைத்துக்கொள்ள பலபல வழிகள் பின்பற்றப்படுகின்றன. உலர்த்துதல், உப்பிடல், வெல்லமிடல், குளிரவைத்தல், வெப்பமேற்றுதல், தகரக் கொள்கலன்களில் அடைத்தல், இரசாயனப் பொருள்களைச் சேர்த்தல் முதலியன அவற்றுட் சிலவாம்.

பால் குளிரூட்டிக் காக்கப்படுகின்றது. இறைச்சி, மீன் முதலியன உப்பிட்டு உலரவைத்துப் பாதுகாக்கப்படுகின்றன. சில பண்டங்களை வெல்லமிட்டு பாதுகாக்கின்றார்கள். உணவு கறிவகை பழம் முதலியவற்றை இந்நாளில் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்துப் பேணுகின்றார்கள். தேசிக்காயில் செய்யப்பட்ட ஊறுகாய், மற்றும் அவித்த மிளகாய் முதலியன அதிக நாள்களுக்கு வீடுகளில் வைத்துப் பயன்படுத்துவது நீங்கள் அறிந்ததுதானே!

நீரைச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் பல வழிகள் உண்டு. கிராமப்புற மக்கள் பெரும்பாலும் கிணற்று நீரையே குடிக்கவும் மற்றும் தேவைகளுக்கும் உபயோகிக்கின்றார்கள். நகர மக்கள் குழாய் நீரை நம்பி வாழுகிறார்கள்.

கிணற்று நீரை அடிக்கடி இறைத்தல் வேண்டும். வெந்நீர் உள்ளே புகாதவாறு மேற்புறத்தில் சுற்றுச்சுவர் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அயலில் உள்ள மரஞ்செடி கொடிகளைக் காலத்துக்குக்காலம் வெட்டிச் சுத்திகரித்தால் அவைகளின் இலை முதலியன கிணற்றினுள்ளே விழமாட்டா.

காகம் முதலிய பறவைகள் கிணற்றுக்கட்டில் இராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உணவுப் பாத்திரங்களைக் கிணற்றடியில் வைத்துக் கழுவுதலைத் தவிர்த்தல் வேண்டும். கிணற்று நீரைக் குளோரீன் இட்டுச் சுத்தஞ் செய்தல் வேண்டும்.

**11.1. நீங்கள் கற்றவை :**

1. உணவுப்பண்டங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே பழுதடையாமல் இருக்கும்.
2. பழுதடைந்த உணவுப் பண்டங்கள் கெட்ட மணம் வீசும், சுவை அற்றுவிடும், ஊதிப்போகும்.
3. பழம், மீன், இறைச்சி முதலியன இலகுவில் பழுதடையும்.
4. காய்ந்த விதை, சீனி, மா முதலியன நாளாக நாளாக பழுதடையும்.

5. மழை நீர், நிலத்தடி ஊற்று, ஆறு, குளம், குழாய் நீர் முதலிய பல்வேறு வழிகளில் நீரைப் பெறுகின்றோம்.
6. நீர் பல காரணிகளால் அசுத்தமடைகின்றது.
7. நுண்ணங்கிகளும் நீரை அசுத்தமடைய வைக்கின்றன.
8. நீரை மென்னீர், வன்னீர் என்றும் பிரிப்பர்; மழை நீர் மென்னீர். குளம், ஆறு, கிணறு முதலியவற்றின் நீர் வன்னீராகும்.
9. வென்னீரில் சவர்க்காரம் இலகுவில் கரையமாட்டாது.

## 11.2. நீங்கள் கற்றவை :

1. அசுத்தமான நீரினால் வயிற்றுளைவு, டைபாய்டு முதலிய நோய்கள் உண்டாகின்றன.
2. குடல்நோய் சிலவற்றுக்கும் அசுத்தநீர் காரணம் என்று கூறப்படுகின்றது.
3. நோய்காவிகள் அழுக்குப் பொருள்களில் இருந்துவிட்டு, நாம் உண்ணும் பொருள்களில் வந்து அமர்ந்து நோய்க்கிருமிகளை விட்டுச் செல்கின்றன.
4. பூனை, நாய், எலி முதலிய பிராணிகள் உணவில் தீண்டுவதனாலும் உணவுப்பண்டங்கள் பழுதடைகின்றன.
5. காற்று வீசும்போது வெளியில் உள்ள பொருள்கள் வந்து உணவில் விழுவதும் உண்டு. அப்பொருள்களில் இருக்கும் கிருமிகளும் உணவை ஊறுபடுத்துகின்றன.

## 11.3. நீங்கள் கற்றவை :

1. உணவு பழுதடைந்திருப்பதை நிறமாற்றம், சுவைமாற்றம், துர்மணம் முதலியவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.
2. பழங்கால மக்கள் தேனில் இட்டு இறைச்சியைப் பாதுகாத்தனர்.
3. விதை, பழம் போல்வனவற்றுட் சிலவற்றை அவித்தும் சிலவற்றைக் காயவைத்தும் பாதுகாக்கலாம்.
4. இக்காலத்தில் உணவைப் பாதுகாத்துக் கொள்ளச் சிறந்த பல வழிகள் உண்டு. குளிர்சாதனப் பெட்டி இலகுவானது. மலிவானது.
5. உலர்த்துதல், உப்பிடல், வெல்லம் இடல், வெப்பமேற்றுதல், கொள்கலங்களில் அடைத்தல் முதலிய வழிகளும் உண்டு.
6. இறைச்சி, மீன் முதலியன உப்பிட்டு உலர வைக்கப்படுவதைக் கண்டிருப்பீர்கள்.
7. ஊறுகாய், அவித்த மிளகாய் முதலியவற்றை இரசித்து இருப்பீர்கள்.
8. கிணற்று நீரை அடிக்கடி இறைத்தும் குளோரீன் இட்டும் பாதுகாக்கலாம்.
9. கிணற்றுக் கட்டிலிருந்து காகங்கள் எச்சமிடுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

### மீட்டற்பயிற்சி

**மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிட்ட இடத்தை நிரப்பவும்.**

| நுண்ணங்கிகள் | மணம் | அசுத்தநீர் | மூடிவைத்தல் | கழிவுகள் | சவர்க்காரம் |
|---|---|---|---|---|---|

i. உணவு கெட்டுப்போனால் விரும்பத்தகாத ________________ வீசும்.

ii. வன்னீரில் ________________ இலகுவில் கரையமாட்டாது.

iii. தொழிற்சாலைக் ________________ கலப்பதாலும் சூழல் அசுத்தமடைகிறது.

iv. நோய்கள் உண்டாக்கும் சின்னஞ்சிறு கிருமிகளை ________________ என்றும் கூறுவர்.

v. குடல்நோய் உண்டாவதற்கு ________________ ஒரு காரணியாகும்.

vi. உணவுப் பண்டங்கள் எப்பொழுதும் ________________ வைக்கப்படல் வேண்டும்.

**சுருக்கமான விடை தருக.**

i. உணவுப்பொருள் பழுதடைந்திருத்தலை எப்படி அறியலாம்?

..........................................................................................................

ii. பண்டையோர் இறைச்சியை எப்படிப் பாதுகாத்தனர்?

..........................................................................................................

iii. கிணற்று நீரைச் சுத்தமாக வைத்திருக்கும் வழி ஒன்று கூறுக.

..........................................................................................................

iv. பச்சைமிளகாய் அதிகமாகக் கிடைக்கும்போது தாய்மார் என்ன செய்கின்றார்கள்?

..........................................................................................................

v. உப்பிட்டுப் பாதுகாக்கப்படும் உணவுப்பொருள் ஒன்று கூறுக.

..........................................................................................................

**குளிர்சாதனப்பெட்டி குறித்து 5 வசனங்கள் எழுதுக.**

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**செயற்பாடு :**

i. பின்வரும் அட்டவணையைக் கொண்டு சென்று சந்தையில் காணப்படும் உணவுப்பண்டங்களின் பெயர்களை எழுதுக.

| | தானியவகை | காய்வகை | கீரைவகை | பழவகை | மீன்வகை |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

ii. கொள்கலத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பண்டங்களின் " லேபல்களை " சேகரிக்கவும்.

# 12. மனித நடத்தைகள்

## 12.1. தனது நடத்தை தொடர்பாகக் கவனம் எடுத்தல்.

மனிதன் இன்பம் உண்டான போது மகிழ்ச்சி அடைகின்றான்; துன்பம் உண்டானபோது வருந்துகின்றான். தனக்கு வேண்டியவற்றில் விருப்பம் காட்டுகிறான். வேண்டாதவற்றில் வெறுப்புக் காட்டுகின்றான். ஒருவனது இயல்பினை அவனது நடத்தைகள் - செயல்கள் எடுத்துக் காட்டுகின்றன.



ஒவ்வொருவருக்கும் சிரிப்பு, அழுகை, வெறுப்பு, கோபம், பயம், ஆச்சரியம், பெருமிதம், மகிழ்ச்சி முதலிய சுவை உணர்வுகள் உண்டு.

சண்டை இடும்போது கோபம் உண்டாகின்றது. புகழும் போதும் அணைக்கும் போதும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஒருவர் தூற்றும் போது வெறுப்படைகின்றோம்.

நடத்தையை ஒழுக்கம் என்றும் கூறலாம் ஒருவருக்கு ஒழுக்கம் உயிரினும் மேலானது. சிறந்தது. அது நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்று கூடப் பிரிக்கப்படும். நல்லொழுக்கம் நன்மை தரும்; தீயொழுக்கம் தீமை உண்டாக்கும். இளமை முதற்கொண்டே தக்கது இது; தகாதது இது என்று அறிந்து ஒழுகுவது நம் கடமையாகும். நன்மை தருவனவற்றை வளர்த்துத் தீமை தருவனவற்றை கட்டுப்படுத்த வேண்டும். அகற்றவேண்டும்.

அறப்பண்புகளில் மனம்கொள்ள வேண்டும். அடக்கமாகக் கருத்துக்களை வெளிப்படுத்துதல் நலம். பிறர் கூறுவனவற்றுக்கு மதிப்பளித்தல் வேண்டும். எதனையும் அவதானமாகச் செயற்படுத்த வேண்டும். எந்நிலையினும் பிறர்க்குத் தீமை செய்தலாகாது.

நன்றே நினைந்து நன்றே சொல்லி, இன்முகத்தோடு எதனையும் செய்து வாழ்வது எம்மை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்.

## 12.2. தமது நண்பர்கள் நடந்து கொள்ளும் விதம் தொடர்பாகக் கவனம் எடுத்தல்.



மாணவர்களே! நமது நாட்டின் எதிர்காலப் பிரசைகள் நீங்கள். உங்கள் வளர்ச்சியிலே தான் எங்கள் நாடு தங்கியிருக்கின்றது. எல்லோரும் நல்லவர்களாகவே பிறக்கின்றோம். வளர்கின்றோம்.

பாடசாலை வாழ்விலும் சரி, கிராம / நகர வாழ்விலாயினும் சரி நண்பர்கள் பலர் இருக்கலாம். சந்தர்ப்பம் சூழ்நிலைகள் உங்களை உயர்த்தும். ஏன்? உங்கள் நண்பர்களையும் உயர்த்தும். உங்கள் நண்பர் நல்லொழுக்க சீலராய், பிறர்நலத்தை விரும்புபவராய் இருக்கக்கூடும்.

எவரும் அளவுக்கு மிஞ்சித் தேவைகளைக் கூட்டிக் கொள்ளுதல் கூடாது. பெரியோர்கள் அடிக்கடி " காலை அகல வைக்காதே " என்று கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். அதுவும்

தேவைகளை மட்டுப்படுத்த வேண்டும் என்பதையே காட்டுகின்றது. தேவை எப்பொழுதும் குடும்பத்தினதோ தனதோ வருவாய்க்குத் தக்கதாக அமைதல் வேண்டும். தேவைகள் அதிகரித்தால் குறுக்குவழிகளை நாடி துன்பப்பட வேண்டும். சுயநலம் வளர்ந்து பெருகும். நல்ல நண்பர்கள் இடையே கூடப் போட்டி, பொறாமை, பூசல் வரும்.


ஒருகதை அறிந்திருப்பீர்கள். கண்ணன், பொன்னன் என்று இருவர். சிறுவயது முதற்கொண்டே நல்ல நண்பர்கள். ஒருமுறை காட்டுவழியாக ஒரு பயணத்தை மேற்கொள்ள வேண்டி இருந்தது. வழிஇடையே காட்டில் புலி ஒன்று வந்தது. அவ்வளவுதான் கண்ணன் பெரிய மரம் ஒன்றில் ஏறிக்கொண்டான். செய்வதறியாது திகைத்த பொன்னன், வழியில் இறந்தவர் போல் மூச்சை அடக்கிப் படுத்துக் கொண்டான். புலி அவனை மோந்து பார்த்தது. செத்த பிணம் என்று எண்ணி அப்பாற் சென்றது. மரத்தின் மேலே இருந்து இவற்றை அவதானித்த கண்ணன், கீழே இறங்கி வந்தான். புலி என்ன சொன்னது என்றான். திடீரென்று பொன்னன் "ஆபத்தில் கைவிடும் நண்பர்களுடன் சேராதே" என்று கூறியது எனப் பதிலளித்தான்.

இப்படியாகச் சுயநலம் மிக்க நண்பர்கள் பலர் இருக்கலாம். எப்பொழுதும் நண்பர்களை அளவாக வைத்துக்கொள்ள வேண்டும். நண்பனுக்காகத் தன்னை அர்ப்பணித்த குணவான்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

### 12.3. பாடசாலை, விரும்பத்தக்க இடமொன்றாக்குவதற்கு செயற்பாட்டுடன் பங்கேற்றல்.

பாடசாலையைக் கலைக்கோயில் என்கிறோம். ஆம் அது வழிபாட்டிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய இடமாகும். அந்த நிலைக்குக் கொண்டு வருவது அங்கு கல்வி பயிலும் மாணவர்களதும் பணி புரியும் ஆசிரியர்களதும் கடமையாகும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வோர் இலச்சினை இருக்கும். அது பாடசாலை மண்டபத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும். அல்லாமலும் பாடசாலைக் கொடியிலும் எழுதப்பட்டிருக்கும். பாடசாலைக் கீதத்திலும் இடம்பெற்றிருக்கும்.




இலச்சினையில் பாடசாலையின் குறிக்கோள் - மேற்கோள் வாசகம் காணப்படும். அயலில் உள்ள படத்தைப் பாருங்கள். அது ஒரு பாடசாலையின் இலச்சினை; அதிலே "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் தொடர் குறிக்கப்பட்டுள்ளது. "மக்களுக்குத் தொண்டு செய்தலை" அப்பள்ளி மாணவர் மகத்தான பணியாக வாழ்நாள் முழுவதும் கொண்டொழுக வேண்டும் என்பது அதன் தொனிப் பொருளாகும்.

மேலும் ஒரு பாடசாலை குறிக்கோளுடன் நின்றுவிடக் கூடாது. மாணவர்களின் கல்வித்தரம் உயரவேண்டும், விளையாட்டுத் துறையில் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முதன்மை பெறவேண்டும்.

முதியோர், பெண்கள், அங்கவீனர் முதலியோர்களுக்கு ஆன்மநேயத்துடன் வேண்டும் வழியெல்லாம் உதவி, ஆன்மநேயத்தை வளர்க்கவேண்டும்.

மாணவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றில் சிறத்தல் வேண்டும். ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, மற்றவரை மதிக்கும் பெருங்குணம் என்பனவுடன் திகழ வேண்டும்.

இந்நிலையில் அப்பாடசாலை எல்லோராலும் விரும்பப்படும் இடமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

## 12.4. தனதும் சமூகத்தினது நன்மைக்குக் காரணமாய் அமையும் நடத்தைக் கோலத்துக்குப் பழக்கப்படுதல்.

கல்வியின் முடிந்தபயன் மக்களை நல்வாழ்வு வாழப் பயிற்சி அளித்தல் என்று பெரியோர் கூறுவர். நல்வாழ்வு கல்விகற்ற ஒருவனுக்கு மட்டும் உரியதல்ல. தனது சமூகம் கிராமம் / நகரம் முதலியவற்றுக்கெல்லாம் பொருந்துவதாகும்.

தனது கல்வி அறிவைக்கொண்டு கிராம மக்களுக்குக் கல்விப் பணி புரியலாம். வறிய மாணவர்களுக்குப் பள்ளிப்பாடங்களைப் பயிற்றலாம். சமயப்பாட வகுப்புக்களை நடத்தலாம். தக்காரை வரவழைத்துச் சமய இலக்கியச் சொற்பொழிவுகளை நடத்துவிக்கலாம். அன்றி கருத்தரங்குகளையும் நடத்துவிக்கலாம்.

தன்னுடன் வேறு சிலரையும் சேர்த்து சமய விழாக்களின்போது தொண்டு புரியலாம்.

கமக்காரர், கடற்றொழிலாளர், கைத்தொழிலாளர்களுக்கு வளர்ந்துவரும் விஞ்ஞானக் கல்வியால் ஏற்பட்டுள்ள நவீன வசதிகளை பயிற்சி உடையவர் மூலம் எடுத்துக்கூறி வழிநடத்தலாம். ஆங்காங்கு இளைஞர் இயக்கங்களை நிறுவி சிரமதான முறையில் பணி புரியலாம். பொதுப்படக் கூறின் "நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை" என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

### 12.1 நீங்கள் கற்றவை :

1. ஒருவரது இயல்பை அவரது நடத்தையைக் கொண்டு அறியலாம்.
2. சிரிப்பு, அழுகை, கோபம் முதலிய சுவை உணர்வுகள் அனைவருக்கும் உண்டு.
3. பிறரின் செயல்களில் மகிழ்ச்சியைத் தருவனவும் உண்டு. வெறுப்பைத் தருவனவும் உண்டு.
4. ஒழுக்கம் உயிரினும் மேலானது. இதைப் பேணிக் காக்க வேண்டும்.
5. நல்லொழுக்கம் நன்மை தரும். நல்லொழுக்கமின்மை தீமை தரும்.
6. ஒருவர் தக்கது இது தகாதது இது என்று ஆராய்ந்து அறிந்து ஒழுகவேண்டும்.

### 12.2 நீங்கள் கற்றவை :

1. இன்றைய இளைஞர்கள் நமது நாட்டின் எதிர்காலச் செல்வங்கள்.
2. பிறக்கும்போது எல்லோரும் நல்லவராகவே பிறக்கின்றோம்.
3. பாடசாலை, கிராம வாழ்விலே சந்தர்ப்பம் சூழ்நிலைகள் எம்மை வழிநடத்துகின்றன.
4. உங்கள் நண்பர்களையும் நல்லவர்கள் ஆக்கவேண்டும். ஒழுக்க சீலர்களாக்கவேண்டும்.
5. தேவைகளை அளவுக்கு அதிகம் கூட்டிக் கொள்ளக்கூடாது.
6. தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க, சுயநலம் பெருகிவரும்.
7. சுயநலத்தை விடுத்துப் பிறர்நலத்தைப் பேணிக்காக்க வேண்டும்.

### 12.3 நீங்கள் கற்றவை :

1. பாடசாலை கலைக்கோயில், அதாவது வழிபாட்டு இடம்.
2. ஒரு பாடசாலையின் இலட்சியம் அதன் பூட்கை (மேற்கோள்) வாசகத்தில் குறிக்கப்பட்டிருக்கும்.

3. மேற்கோள் வாசகத்தை மனத்திற் கொண்டு மாணவர்களும் ஆசிரியர்களும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.
4. மாணவர்களின் கல்வித்தரம் உயரவேண்டும்; என்றும் நிலைநாட்டப்பட வேண்டும்.
5. பள்ளிப்பாடங்களில் மட்டுமன்றி மாணவர் ஏனைய துறைகளிலும் முன்னேற வேண்டும்.
6. முதியோர், அங்கவீனர், பெண்கள் முதலியோர்களுக்கு தேவைப்படும் இடமெங்கும் உதவிபுரிதல் வேண்டும்.
7. இலட்சிய வாழ்வில் நிற்கும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலை பேரும் புகழும் பெற்று நெடிது வாழும்.

**12.4. நீங்கள் கற்றவை :**

1. கல்வியின் முடிந்தபயன் நல்வாழ்வாகும்.
2. ஒருவர் கற்றகல்வி அவருக்கு மட்டுமன்றி அவர் குடும்பம், ஊர், நகர், நாடு முதலியவற்றுக்கும் உதவவேண்டும்.
3. இளைஞர்களுக்குப் பலதரப்பட்ட பணிகள் உண்டு.
4. அவர்கள் சகமாணவர், இளைஞர், உழவர், கடற்றொழிலாளர் என்று இன்னபலருக்கும் உதவவேண்டும்.

**மீட்டற்பயிற்சி**

**மிகவும் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து கோடிட்ட இடத்தில் எழுதுக.**

i. புகழும்போதும் அணைக்கும்போதும் ..........
ii. நன்மை தரும் பழக்கங்களை ..........
iii. சந்தர்ப்பம் சூழ்நிலை ஒருவரின் ..........
iv. அளவுக்கு மிஞ்சிய தேவைகள் ..........
v. மாணவர் ஒவ்வொருவரும் ..........
vi. கல்வியாளர் மக்களுக்கு ..........

| | |
|---|---|
| (அ) வளர்த்தல் வேண்டும் | (ஈ) உயர்வுக்கு வழிதிறக்கும் |
| (ஆ) கூட்டிக் கொள்ளக்கூடாது | (உ) பலவழிகளிலும் உதவிபுரிதல் வேண்டும் |
| (இ) மகிழ்ச்சி உண்டாகிறது | (ஊ) கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைப் பேணவேண்டும் |

**செவ்விய விடையைத் தெரிவுசெய்க.**

i. இக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்துக்கு முதன்மையான காரணம் :
(1) விஞ்ஞான வளர்ச்சி (2) தொழில்வளர்ச்சி (3) சமய அறிவுவளர்ச்சி

ii. ஒரு பாடசாலையில் மாணவர்களும் ஆசிரியர்களும் பேணப்பட வேண்டியது :
(1) பாடசாலைக்கீதம் (2) பூட்கை வாசகம் (3) ஆசிரியர்களின் ஒற்றுமை

iii. பாடசாலை கலைக்கோயில் ஏனெனில் :
(1) வழிபாட்டிற்கு உரியதன்மையால் (2) நற்பிரசைகளை உருவாக்குவதால்
(3) மாணவர் ஒழுக்கசீலர்களாக இருப்பதால்

உமது பாடசாலையைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

செயற்பாடு :


i. பாடசாலை இலச்சினையை வரைந்து காட்டுதல்.


# 13. மனிதனும் காலமும்

## 13.1. காலத்தைப் பகிர்ந்து கொள்ளும் விதத்தை இனங்காணல்.

சூரியன் காலையில் உதிக்கின்றான்; ஒளி எங்கும் பரவுகின்றது. வெப்பம் சிறிது சிறிதாக உயர்ந்து செல்கின்றது. மத்தியானம் ஆனதும் சூரியன் உச்சியில் நிற்கின்றான். வெப்பம் படிப்படியாகக் குறைகின்றது. மாலையில் மறைகின்றான். எங்கும் இருள் பரவுகின்றது. இரவு என்கின்றோம்.


காலை


பகல்


மாலை

ஒருநாளை இரவு, பகல் என இரு பகுதியாகக் காண்கின்றோம். பகற்காலத்தை அதிகாலை, முற்பகல், நண்பகல், பிற்பகல், மாலை என்றும் இரவை முன்னிரவு, சாமம், பின்னிரவு, விடியல் என்றும் பிரிப்பார்கள்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என ஏழு நாள்களைக் கொண்டது ஒரு கிழமை. மாதத்தைத் திங்கள் என்றும் கூறுவர். பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஓராண்டு. ஆண்டை வருடம் என்றும் சொல்லலாம்.

பூமி உருண்டை வடிவினது. அது தன்னைத்தானே சுற்றுவதுடன் சூரியனையும் சுற்றிவருகின்றது. அது தன்னைத்தானே சுற்றும்பொழுது ஒரு பகுதியில் மட்டும் ஒளி படுகின்றது. அதனைப் பகல் என்கின்றோம். மறுபகுதி இருளாக இருக்கின்றது. அதனை இரவு என்கின்றோம். பகலும் இரவும் கொண்டது ஒருநாள். ஒருநாள் 24 மணி கொண்டது. பூமி சூரியனைச் சுற்றிவருவதால் மாதம் பருவம் ஆண்டு முதலியன உண்டாகின்றன.

மனிதன் பகலில் பல்வேறு அலுவல்களையும் செய்கின்றான். விலங்குகளும் தத்தம் கருமங்களை இயற்றுகின்றன. பாடசாலைகள் பகலில் ஒரு வேளையிலும் இரு வேளையிலும் நடைபெறுவதை அறிவீர்கள். தொழிலாளி 8 மணிநேர வேலை செய்கின்றான். பெரும்பாலோர் பிற்பகலில் 4 மணி அளவில் விளையாடச் செல்வார்கள். சில தொழிற்சாலைகள் இரவில் இயங்குவதும் உண்டு. இராக்காலத்தில் மனிதன் அன்றி விலங்குகளும்கூட உறங்குவதை அறிவோம்.

## 13.2. காலத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்திக் கொள்ளும் முறைகளுக்குப் பழகுதல்.

"நேரம் பொன்னுக்குச் சரி" "கண்ணைத்துயின்று வீணே காலத்தைப் போக்காதே" என்பனவெல்லாம் பெரியோர் வாக்குகள். காலம், கிடைப்பதற்கு அரியதொன்று. அதனை பயனுள்ள வழிகளில் செலவிடவேண்டும். எந்த வேளைகளிலும் நேரம் தவறாமை சிறந்த பழக்கமாகும். அலுவலகங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றுக்கு செல்பவர்கள் நேரந்தவறாமல் செல்லவேண்டும். உங்கள் பாடசாலைகளில் ஆசிரியர்கள் நேரம் பதிவு செய்வதைக் கண்டிருப்பீர்கள். வேலை தொடங்குமுன் நேரம் பதிவு செய்வது பொதுவான ஒழுங்கு முறையாகும்.

நாம் ஒருநாளில் மூன்று வேளைகளில் உணவுண்கின்றோம். காலந்தவறி உண்டால் நோய்கள் உண்டாகின்றன.

எதையும் உரிய காலத்தில் செய்தல் வேண்டும். பின்பு செய்வோம் என்று காலந்தாழ்த்துதல் தோல்விக்கே இட்டுச் செல்லும். சில வேளைகளில் எடுத்த கருமத்தை நிறைவேற்ற முடியாதும் போய்விடலாம்.


உங்களுக்கு முயலும் ஆமையும் கதை தெரியும்தானே! முயலார் உரியநேரத்தில் குறித்த தூரத்தை ஒடி முடித்திருந்தால் போட்டியில் சுலபமாக வெற்றியீட்டி இருக்கலாம். தமது திறமையில் நம்பிக்கை வைத்துக் கருமத்தைப் பின்போட்டார். பாவம் அதனாலே தோல்வியைத் தழுவவேண்டி வந்தது.


நோய் வந்த காலத்தில் கூட மருத்துவர்கள் மூன்று வேளைப்படி மருந்துண்ண வேண்டும் என்று மருந்துகளைத் தருகின்றார்களே! நாங்கள் அதை நேரக்கிரமப்படி உண்டுவந்தால் தானே நோய் தீருகின்றது.


வானிலே சூரியன் கூடக் கிரமந்தவறாமல் உரிய நேரத்தில் உதிக்கின்றானே! அவன் வருகையில் கிரமந்தவறினால் உலகு என்னாகும்? யோசித்துப் பாருங்கள்.

### 13.3. காலத்தை உச்சநிலையில் பயன்படுத்திக் கொள்வதன் நன்மையை விளங்கிக் கொள்ளுதல்.

முகுந்தன் காலை 6 மணிக்குப் படுக்கையில் இருந்து எழுவான். பின் காலை உடற்பயிற்சிக்காக நடந்து சூரிய உதயத்திற்குத் திரும்புவான். பின் ஒரு மணித்தியாலம் படிப்பான். பின் எட்டரை மணிக்கு பாடசாலை பஸ்ஸில் பாடசாலை செல்வான். பாடசாலை மணி 9 மணிக்கு அடிக்கப்படும். முகுந்தன் எப்பொழுதும் சரியான நேரத்திற்குப் பாடசாலை செல்வான். ஆசிரியர் காலநேரத்தைப் பற்றி கற்பித்தார். ஒரு செக்கன் நேரத்தின் மிக சிறிய பகுதியாகும். 60 செக்கன் 1 நிமிடமாகும். 60 நிமிடம் 1 மணித்தியாலம் ஆகும். 24 மணித்தியாலம் (இரவும் பகலும் சேர்ந்து) 1 நாளாகும். 7 நாட்கள் சேர்ந்து 1 கிழமையாகும். 4 கிழமைகள் சேர்ந்து 1 மாதமாகும். 30 அல்லது 31 நாட்கள் சேர்ந்து நாட்காட்டி மாதமாகும். 12 மாதங்கள் (365 நாட்கள்) 1 வருடமாகும் என கற்பித்தார்.


படுக்கையில் இருந்து எழுதல்


உடற்பயிற்சி செய்தல்


காலையில் படித்தல்


காலைச்சாப்பாடு



பாடசாலை போதல்


சரியான நேரத்தில் பாடசாலை சேர்தல்

பிள்ளைகளே! உங்கள் பாடசாலையில் நேர அட்டவணை ஒன்று இருப்பதைக் கண்டிருப்பீர்கள். நாள்தோறும் 8 பாட வேளைகளுக்கு நேரம் ஒதுக்கி இருப்பார்கள். ஒவ்வொரு பாடமுடிவிலும் மணி ஒலிக்கும். பாடங்கள் சீராக நடைபெறும். உரிய நேரம் சரியான அளவுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

சாதாரண மக்கள் பெரும்பாலும் காலை 6 மணிக்கு நித்திரை விட்டு எழுகின்றார்கள். பள்ளி மாணவர்களைப் பெற்றார் வைகறை 4 மணிக்குப் படிக்கும்படியாக நித்திரையில் இருந்து எழச்செய்வது உண்டல்லவா? இவ்வாறாக வைகறையில் துயில் எழுவோர் மேலும் இரண்டு மணிநேரம் கூட வேலை செய்ய வாய்ப்பு உண்டாகின்றது.

படிக்கும் நேரத்தை விட, மேலதிக நேரத்தை மாணவர் பயன்படுத்துவது போன்று கமக்காரர் நாள்முழுதும் வேலை செய்கிறார்கள். அன்றியும் வைகறையில் எழுந்து வழக்கமாகத் தோட்டத்துக்கு நீர்பாய்ச்சுதல், காய்பிஞ்சுகளைப் பறித்தல் முதலிய பல கருமங்களிலே ஈடுபடுகிறார்கள்.

அரச உயரதிகாரிகள் சிலர் தமது நித்திரை நேரத்தை வெகுவாகக் குறைத்துப் பகலிலும் இரவிலும் வேலை செய்வதும் உண்டு.

**13.1. நீங்கள் கற்றவை :**

1. கதிரவன் காலையில் உதித்து மாலையில் மறைகின்றான்.
2. ஒருநாளை, காலை, முற்பகல், நண்பகல், பிற்பகல், மாலை, முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு முதலியவாகப் பிரிக்கலாம்.
3. ஞாயிறு முதல் 7 நாள் கொண்டது ஒரு கிழமை; 4 கிழமைகள் கொண்டது ஒரு மாதம்; 12 மாதங்கள் கொண்டது ஒரு ஆண்டு ஆகும்.
4. பூமி தன்னைத்தானே சுற்றுவதால் இரவும் பகலும் உண்டாகின்றன.
5. தன்னைத்தானே சுற்றுவதுடன் சூரியனையும் பூமி சுற்றி வருகின்றது; அதனால் பருவம், ஆண்டு முதலியன உண்டாகின்றன.
6. மனிதன் மற்றும் விலங்குகள் பகலில் விழித்திருந்து பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றன.
7. இரவில் அமைதியாக உறங்குகின்றன.

**13.2. நீங்கள் கற்றவை :**

1. நேரம் பொன்னுக்குச் சரி, காலத்தை பயனுள்ள வழிகளில் செலவுசெய்தல் வேண்டும்.
2. நேரந்தவறாமை சிறந்த பழக்கமாகும்.
3. பாடசாலை மற்றும் அலுவலகங்களில் எல்லாம் சென்ற நேரம்; திரும்பும் நேரம் பதிபப்படுவது உண்டு.
4. நேரம் தவறி உண்டால் நோய்கள் உண்டாகும்.
5. எந்தக் கருமத்தையும் உரியஉரிய நேரத்தில் செய்தல் வேண்டும்.
6. ஒரு விடயத்தைக் காலந்தாழ்த்துதலும், பின்போடுவதும் தோல்விக்கு அடிப்படையாகும்.
7. மருந்தினைக்கூட மூன்று வேளைகளுக்கு நேரந்தவறாமல் உண்ணவேண்டும் என்பது விதியாகும்.

13.3. **நீங்கள் கற்றவை :**

1. பள்ளிப்பாடங்கள் நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன.
2. பெரும்பாலானவர் சூரியன் உதிக்குமுன் வைகறைப் பொழுதில் நித்திரை விட்டு எழுகின்றார்கள்.
3. சிலர் பகல் முழுதும் வேலை செய்து இரவிலும் குறிப்பிட்ட மணித்தியாலம் வேலை செய்கின்றார்கள்.
4. பகற்பொழுதில் நேரம் போதாமையாலேதான் அவ்விதம் செய்கிறார்கள்:

## மீட்டற்பயிற்சி

**பொருத்தமான முதற்பகுதியைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

i. .................................... ஒரு மாதம் ஆகும்.

ii. .................................... ஒரு பகுதி மட்டும் வெளிச்சம் பெறுகிறது.

iii. .................................... 8 மணிநேரம் வேலை செய்கின்றான்.

iv. .................................... மகத்தான சேவையைக் கிராமத்துக்குச் செலுத்தவேண்டும்.

v. .................................... பாடசாலைக்கு சமூகமளித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| (அ) மாணவர்கள் நேரம் தவறாமல் | .................................... |
| (ஆ) ஒரு தொழிலாளி | .................................... |
| (இ) நான்கு வாரகாலம் கொண்டது | .................................... |
| (ஈ) பூமி தன்னைத்தானே சுற்றும்பொழுது | .................................... |
| (உ) கற்றுணர்ந்த பெரியோர் தமது | .................................... |

**பொருத்தமான வினாவைத் தெரிவுசெய்து எழுதுக.**

i. பூமி தன்னைத்தானே சுற்றுவதனால்

....................................................................................................

ii. வானின் உச்சியில் நிற்பான்

....................................................................................................

iii. அதிகமான வேலைப்பழு இருப்பதனால்

....................................................................................................

iv. தனது வேலையைத் தொடர்ந்து செய்யாமை.

....................................................................................................

v. பூமி தன்னைத்தானே சுற்றி வருவதுடன் சூரியனையும் சுற்றிவருகிறது.

....................................................................................................

(அ) உயரதிகாரிகள் இரவில் விழித்திருந்து வேலை செய்வது ஏன்?
(ஆ) முயல் தோல்வி கண்டதன் காரணம் என்ன?
(இ) இராப்பகல் உண்டாவதன் காரணம் என்ன?
(ஈ) சூரியன் நண்பகலில் எங்கே நிற்பான்?
(உ) பருவகாலங்கள் உண்டாவதன் காரணம் யாது?

DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

235



பகற்காலம் பற்றி 5 வசனங்கள் எழுதுக.

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

**செயற்பாடு :**

i. மட்டையில் மணிக்கூடு ஒன்று செய்க.

ii. காலத்தின் அருமை பற்றிய பழமொழிகளை விசாரித்து அறிக.

DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT

# 14. எமது நகரங்கள்

## 14.1. இலங்கையின் கலாசாரத்தையும் வேறு முக்கியத்துவங்களையும் கொண்ட சில நகரங்களைப் பற்றிய விடயங்களைத் தேடி அறிதல்.

நமது நாடு இலங்கை. நாம் இலங்கையர். இது இயற்கை அழகும். வரலாற்றுச் சிறப்பும் கலாசாரப் பெருமையும் கொண்ட நகரங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது:

இங்கு பல்வகைச் சிறப்பும் பொருந்திய நகரங்கள் பலவுள. அவற்றுள் அனுராதபுரம், சிகிரியா. பொலநறுவை, கண்டி, யாழ்ப்பாணம், மாந்தை, திருகோணமலை முதலிய நகரங்களைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

நமது நாடு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, வடக்கு, கிழக்கு, மத்திய, வடமத்திய, ஊவா, சப்பிரகமுவ, தெற்கு, மேற்கு, வடமேற்கு என ஒன்பது மாகாணங்களைக் கொண்டது. அயலில் உள்ள படத்தைப் பாருங்கள்!




**அநுராதபுரம்:** இது வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. மிகப்பழைய காலத்தில் விசயன் வடஇந்தியாவில் இருந்து தோழர் எழுநூறு பேருடன் இங்கு வந்தான். அவனுடைய தோழர்கள் இங்கு பல கிராமங்களை நிறுவினர். அநுரதன் என்பவன் தன்னுடைய பெயரால் அநுரதகமவை நிறுவினான். சிறு நகராக இருந்து காலப்போக்கில் பெரிய நகராக வளர்ந்து அநுராதபுரம் என்ற பெயரைப் பெற்றது. பண்டுகாபயன், தீசன், எல்லாளன் முதலிய பல மன்னர்கள் இங்கிருந்து ஆட்சி நடத்தினர்.

இங்கு சங்கமித்தை என்னும் பிக்குணி இந்தியாவில் இருந்து கொண்டு வந்த புனிதம் வாய்ந்த வெள்ளரச மரம் நாட்டப்பட்டுள்ளது. மேலும் தூபராம சமாதி, றூவன் வலிசய, அபயகிரி முதலிய பல புத்த விகாரைகள் உண்டு. இங்கு பௌத்த கலாசாரம் சிறப்பாக வளர்ந்துள்ளது.

**சிகிரியா :**

இது அநுராதபுரத்தில் இருந்து அண்ணளவாக 30 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்றது. இதனைக் காசியப்ப மன்னன் நிறுவினான். கோநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். சிகிரியா உச்சியில் அரசமாளிகை அமைக்கப்பட்டது. அடிவாரத்தில் பல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றுடன் தடாகம், பூங்கா முதலியனவும் அமைக்கப்பட்டன.

மலையில் மேற்குப் பகுதியில் உள்ள குகையினுள்ளே பிரபல சிகிரிய ஓவியங்கள் உண்டு. இலங்கையின் ஓவியக்கலை வளர்ச்சி மேம்பாட்டை உணர்ந்து கொள்ளச் சிகிரியா பெரிதும் உதவுகின்றது.

**பொலநறுவை :**

இது வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. சோழவேந்தர் காலத்தில் இது தலைநகராக விளங்கியது. சனநாத மங்களம் என்று அழைக்கப்பட்டது. விஜயபாகு,

பராக்கிரமபாகு முதலிய பல மன்னர்களும் ஆட்சி புரிந்தனர். நகரம் பல்வேறு விதங்களில் அழகுபடுத்தப்பட்டது. சில தேவாலயங்களும் பௌத்தவிகாரைகளும் இங்குண்டு. இந்து பௌத்த கலாசாரங்களும் கட்டடக்கலைகளும் நீர்பாசன முறைகளும் இங்கு பேணப்பட்டன.

**கண்டி :**

மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. மலையகத்தின் கோநகராக விளங்குகின்றது. இது எழில்வாய்ந்த நகரமாகும். இந்நகரின் கண்ணே தலதாமாளிகை அமைந்திருக்கின்றது. அங்கே புத்தபெருமானின் புனித தந்தம் பேணப்படுகின்றது. நகரின் மத்தியிலே கண்டி வாவி அமைந்துள்ளது. ஐரோப்பிய சாதியார் இங்கு வரும்வரை மலையகத்து மன்னர்கள் கண்டியில் இருந்து ஆட்சிபுரிந்தனர். பௌத்த பண்பாடும் பழக்கவழக்கங்களும் கண்டி மன்னர்களால் பேணி வளர்க்கப்பட்டன.

**யாழ்ப்பாணம் :**

இது வடக்கு மாகாணத்தில் உள்ளது. தமிழ் மன்னர்கள் இறுதியாக யாழ்ப்பாணத்தில் அயலில் உள்ள நல்லூரரையே தமது தலைநகராகக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலே சைவ ஆலயங்கள் பலவுள. இங்கு செந்தமிழ் வழக்கும் சைவ மாண்பும் சிறந்து விளங்கிற்று. யாழ்ப்பாண ராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலி குமரன் இங்கிருந்து ஆட்சி புரிந்தான்.

**மாந்தை :**

இதுவும் வடக்கு மாகாணத்திலுள்ள மன்னாரை அடுத்துள்ளது. இலங்கையின் பூர்வ குடிகளாகிய நாகர் காலம் முதலாகப் பெருமை பெற்றிருந்தது. சிறந்த வணிகக் களமாகவும் விளங்கியது.

**திருகோணமலை :**

இது கிழக்கு மாகாணத்தில் உள்ளது. இலங்கையில் உள்ள இயற்கைத் துறைமுகத்தோடு கூடிய நகராகும். இங்கு புகழ்பெற்ற திருக்கோணேஸ்வரக் கோயில் உண்டு. இது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரப்பாடல் பெற்ற பெருமைக்கு உரியது. இங்கு தமிழர் பண்பாடு தலைதூக்கி நிற்கின்றது.


**கொழும்பு :**

இது இலங்கையின் தலைநகராகும். இங்கு அனைத்துலக கப்பல்களும் வந்து எரிபொருள் மற்றும் தேவைகளை நிறைவேற்றிச் செல்லும். பாரிய துறைமுகம் உண்டு. தலைசிறந்த வணிகக் களமாகவும் திகழ்கின்றது. வானை முட்டும் அடுக்கு மாளிகைகள் பலவற்றையும் கொண்டது. சனாதிபதியின் முதலாக அனைத்து அமைச்சுக்களின் அலுவலகங்கள் பலவும் உண்டு. மிகவும் விசாலமான கடைத்தெருக்களும் விடுதிகளும் நிறைந்து கலைப்பட்டினமாகவும் திகழ்கின்றது. இங்கு இந்து, இஸ்லாம், பௌத்த, கிறீத்தவ தேவாலயங்கள் பலவும் உண்டு.

### 14.2. குறித்த நகரம் ஒன்றுக்குச் செல்வதற்கு உள்ள பாதைகள் தொடர்பாகக் கண்டறிதல்.

புராதன காலத்தில் பிரதான நகரங்களை இணைக்கும் வீதிகள் ஒரு சிலவே இருந்தன. கடற்கரைப் பாதைகளும் ஒற்றையடிப் பாதைகளும் கூட உபயோகத்தில் இருந்தன. இன்று நிலைமாறியுள்ளன.

பிள்ளைகளே! அயலில் உள்ள படத்தைப் பாருங்கள்! அதில் இலங்கையில் உள்ள பெருந்தெருக்களும் புகைவண்டி வீதிகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. பெருந்தெருக்கள் தாரிட்டு செம்மைப்படுத்தப்பட்டவை; விசாலம் உடையவை. அவை கண்டியை மையமாகக் கொண்டே நாலாபக்கமும் செல்கின்றன. கண்டியில் இருந்து கொழும்பு, புத்தளம், யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுளை, மட்டக்களப்பு, காலி, அம்பாந்தோட்டை முதலிய நகரங்களுக்குச் செல்லலாம். நமது நாட்டில் அண்ணளவாகப் பதினெண்ணாயிரம் மைல் நீளமான பெருந்தெருக்கள் உண்டு.



நாம் கொழும்பில் இருந்து கண்டிக்குச் செல்வதாக வைத்துக் கொள்வோம். கொழும்பு, கோட்டை வசுவண்டி நிலையத்திற்கு நாம் செல்லுதல் வேண்டும். வசு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்டு இராகம, கம்புகா, வியாங்கொடை, பொல்காவெலை, கடுகண்ணாவை, பேராதனை முதலிய பல இடங்களைக் கடந்து கண்டி நகரை அடைகின்றது. அங்கு இறங்கி கண்டி, தெப்பக்குளம், தலதமாளிகை, அரும்பொருட் காட்சி வைப்பகம் முதலிய பல புராதன சின்னங்களைக் கண்டு களிக்கலாம்.

புகைவண்டிப்பாதை நமது நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. முதன்முதல் 1820 ஆம் ஆண்டில் ஆளுநராக இருந்த சேர் எட்வட் பாண்ஸ் கடுகண்ணாவை வழியாக முதலாவது முறையாக கொழும்பு - கண்டி வீதியை நிருமாணித்தார். 1821 இல் அவ்வீதி கலகெதரகணவாய் வழியாக குருணாகல் வரையில் நீடிக்கப்பட்டது. இக்காலத்தில் கொழும்பு கோட்டையில் இருந்து அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், கண்டி, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி, மாதுறு ஓயா முதலிய பல இடங்களுக்கும் புகைவண்டி மூலம் செல்லலாம்.

இனி, கண்டிக்குப் புகைவண்டி மூலம் செல்வதாக வைத்துக் கொள்வோம். கொழும்பு கோட்டை புகைவண்டி நிலையத்துக்குச் சென்று நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். படத்தில் பாருங்கள் புகைவண்டி இராகமைச்சந்தி, பொல்காவலைச்சந்தி முதலியவற்றைக் கடந்து கடுகண்ணாவைக் குகைவழிக்கூடாகப் பேராதனைச் சந்தியை அடைந்து அங்கிருந்து கண்டி நகரைச் சென்று அடையும். கண்டியில் இறங்கி மலையகத்தின் பேரழகைக் கண்டு மகிழலாம்.

**14.3. கால மாற்றத்துடன் நகரங்கள் மாற்றம் அடைந்துள்ள விதம் தொடர்பாகக் கண்டறிதல்.**

காலம் வெகுவேகமாக மாறி வருகின்றது; தேவைகளும் வளர்ச்சி அடைந்து செல்கின்றன. வாழ்க்கை முறைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சனத்தொகை பெரும்வளர்ச்சி அடைந்துள்ளது. மரணவீதம் குறைந்துள்ளது.

இருப்பிடவசதி - வீட்டுத்தேவை மிதமிஞ்சி விட்டது. கட்டடங்களை அமைப்பதற்காக நகரங்கள் விசாலிக்கப்பட வேண்டியுள்ளது. விசாலிக்கப்படுகின்றன. மாடிவீடுகளும் தட்டு வீடுகளும் நகரங்களில் பெருகுகின்றன.



வேலையில்லாப் பிரச்சனையைச் சமாளிக்க வேண்டி உள்ளது. கிராமங்களில் உள்ளவர்கள் வேலை தேடி நகரங்களுக்குப் படை எடுக்கிறார்கள். அதனால் தொழிற்சாலைகள் பெருகுகின்றன.

வளர்ந்துவரும் மாணவர் தொகையைச் சமாளிக்கப் பாடசாலைக் கட்டடங்கள் விரிவாக்கம் பெறவேண்டியுள்ளன.

வைத்திய வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதனால் மருத்துவமனைக் கட்டடங்கள் விசாலிக்கப்படுகின்றன. புதிதாக அமைக்கப்படுகின்றன.

போக்குவரத்து வசதிகளைக் கூட்டுவதற்காகத் தெருக்கள் அமைக்கப்படவேண்டி இருக்கின்றது. நெருக்கமாக வீடுகள் கட்டப்படுவதனால் ஒழுங்கைகளும் வீதிகளும் அமைக்கப்படுகின்றன. பிரயாண சாதனங்களின் தேவை மிகுந்து விட்டது. அவற்றைப் பாதுகாக்கவும் கட்டடங்கள் வேண்டியிருக்கின்றன. இவ்வாறாக சிறிய கிராமங்கள் நகரங்களாகின்றன. நகரங்கள் மாநகரங்கள் ஆகின்றன.

சுகாதாரப் பராமரிப்புக்காக கழிவறைகள், வடிகால்கள் முதலியன நிறுவப்பட வேண்டியுள்ளன.

கடைகள். சந்தைகள் பெருகவேண்டி இருக்கின்றது. மேலும் விளையாட்டிடம் பொழுது போக்கிடம முதலியனவும் வேண்டப்படுகின்றன.

**14.4. நகரத்தின் சுற்றுப்புறம் மாசடையும் விதங்களைக் கண்டறிதல்.**

நகரத்தில் சனத்தொகை கூடுவதால் தூயவளி மாசடைகின்றது.

குப்பைகூளம். கழிவுகள் அதிகரித்தல் அவற்றை அகற்றுவதில் உள்ள சிரமம் முதலியன சூழலை மாசுபடுத்துகின்றன.

வீடு கட்டுதல், விறகுத் தேவை முதலியவற்றுக்குக்காக மரங்கள் தறிக்கப்படுதலால் மனிதர் வெளிவிடும் காபனீரொட்சையிற் உறிஞ்சப்படுதல் இல்லாது போகின்றது.

வீடு, தொழிற்சாலை, அலுவலகம் முதலியவற்றின் நெருக்கடி தூய காற்று, வெளிச்சம் முதலியன கிடைப்பதைத் தடுத்து விடுகின்றது.

வண்டி வாகனங்களில் இருந்து எழும் புகை, ஒலி முதலியன குடியிருப்பாளர்களுக்கும் பாதசாரிகளுக்கும் தீமை விளைவிக்கின்றன.

அழுக்குகள் குவிவதால் சுகாதாரச் சீர்கேடு மிகுகின்றது.

மதகு, கால்வாய் முதலியவற்றில் தேங்கி நிற்கும் நீரில் நுண்ணங்கிகள் பெருகித் தீமையை உண்டாக்குகின்றன.

தொற்றுநோய் காலங்களில் பெருகும் நுண்ணங்கிகள் முழு நகரையும் பாதிப்பதும் உண்டு.

**14.5. நகரத்தின் சுற்றாடலுக்கு ஏற்படும் தீங்குகளைக் குறைத்துக் கொள்வதற்காகச் செய்ய வேண்டியவற்றை இனங்காணல்.**

நகரத்தையும் சுற்றாடலையும் எப்பொழுதும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சுத்தமாக வைத்திருக்கும் பொறுப்பு நகர அமைப்புக்கு மட்டும் உரியது அல்ல. நகர மக்களுக்கும் உரியது என்பதனைக் குடியிருப்பாளர் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

மக்கள் குப்பை கூளங்களைக் கண்டகண்ட இடங்களிலேயே போடாமல் அவற்றுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் போடுதல் வேண்டும்.

குடியிருக்கும் இடங்களில் மலர் மரங்கள் பழந்தரும் வாழை, மா, பலா போன்றவற்றை வளர்த்தல், வீட்டுத் தோட்டங்களை அமைத்தல் முதலியவற்றால் மனிதர் வெளிவிடும் காபனீரொட்சையிட் உறிஞ்சப்படும்.

தரைத்தோற்றம் மாறாது பேணவேண்டும். அதாவது சேரி, பண்டசாலை, தொழிற்சாலை அவலட்சணமான மாடிகள் இவற்றில் இருந்து எழும் புகை, சத்தம் முதலியன திசை திருப்பி விடப்படவேண்டும்.

புகையில் உள்ள கெடுதலைக் குறைக்க வேறு வழிகள் கையாளப்பட வேண்டும்.

கால்வாய்கள், வீதிகள் தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

கழிவறைகள் உரிய முறையில் சுத்திகரிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விளையாட்டிடம், கடற்கரை, பூந்தோட்டம் முதலிய இடங்களில் கழிவுப் பொருள்களை கொட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

கவனிப்பாரற்றுக் கிடக்கும் இறந்த பிராணிகளின் உடல்களை அப்புறப்படுத்தி உரிய முறையில் புதைத்தோ எரித்தோ விடுதல் வேண்டும்.

மலகூடங்களின் குழி கிணற்றுக்கு வெகு தொலைவில் 40 அடி தூரம் வரையில் அமைக்கப்படுதல் அவசியம்.

பழுதடைந்த உணவுகளை உடனுக்குடன் வெளியேற்ற வேண்டும்.

நிலம் மாசடையாமல் இருப்பதற்கு களைகொல்லிகள் பூச்சிகொல்லிகள் பயன்படுத்தப்பட்டு வருவதால் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**14.1. நீங்கள் கற்றவை :**

1. இலங்கை வரலாற்றுச் சிறப்பையும், கலாசாரச் சிறப்பையும் கொண்ட நகரங்கள் பலவற்றையும் உடையது.
2. அநுராதபுரம், சிகிரியா, பொலநறுவை, கண்டி, யாழ்ப்பாணம், மாந்தை, திருகோணமலை, கொழும்பு முதலியன சிறப்புடையன.
3. அநுராதபுரம் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. சிங்கள மன்னர்களின் பூர்வீக தலைநகர். புனித போதி மரமும் புத்தவிகாரைகளும் இங்குண்டு.
4. **சிகிரியா :** இது அநுராதபுரத்தில் இருந்து 30 கிலோ தூரத்தில் அமைந்துள்ளது. புகழ்பெற்ற ஓவியங்கள் இங்கு உண்டு.
5. **பொலநறுவை :** வடமத்திய மாகாணத்தில் உள்ளது. சோழமன்னர்கள் இந்நகரில் ஆட்சி நடத்தினர். தமிழர்களின் சிற்பகலையின் அமிசங்களை விளக்கும் சான்றுகள் இங்குண்டு.
6. **கண்டி :** மத்திய மாகாணத்தில் உண்டு. இங்கு புத்த தந்தக் கோயில் உண்டு. இது இயற்கை எழில் கூடிய நகரம்.
7. **யாழ்ப்பாணம் :** வடக்குமாகாணம், தமிழ்மன்னர்களின் தலைநகராய நல்லூர் இதனயலில் உண்டு. தமிழர் காலாசாரத்தின் உறைவிடமாக அமைந்துள்ளது.
8. **மாந்தை :** வடமாகாணத்தில் மன்னாரை அடுத்து உள்ளது. பண்டைக்காலம் முதல் சிறந்த வியாபார நிலையமாக இருந்து வந்தது. பழங்குடி மக்களாகிய நாகர், வரலாற்றுடன் தொடர்புபட்டது.
9. **திருகோணமலை :** கிழக்கு மாகாணத்தில் உள்ளது. புகழ்மிக்க இயற்கைத் துறைமுகத்துடன் கூடியது. சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கோணேசுவரத்தைத் தன்னிடம் கொண்டது.
10. **கொழும்பு :** மேற்குமாகாணத்தில் உள்ளது. இலங்கையின் தலைநகரமாகத் திகழ்கின்றது. ஆட்சியாளர்களின் பல்வேறு அமைப்புகளின் தலைமையகங்கள் இங்குண்டு. பிரசித்திபெற்ற துறைமுகம் இங்குண்டு.

**14.2. நீங்கள் கற்றவை :**

1. புராதன காலத்தில் நகரங்களை இணைக்கச் சிறு பாதைகளே அமைந்திருந்தன.
2. இலங்கையின் பெருந்தெருக்களையும் புகைவண்டிப் பாதைகளையும் படத்திலே காண்கின்றீர்கள்.
3. இன்று பிரதான நகரங்கள் பெருந்தெருக்களாலும் புகைவண்டிப் பாதைகளாலும் இணைக்கப்பட்டு உள்ளன.
4. கொழும்பில் இருந்து இராகம, கம்பகா, வியாங்கொடை, கடுகண்ணாவை, பேராதனை முதலிய இடங்களைத் தாண்டி பெருந்தெரு வழியாகக் கண்டியை அடையலாம்.
5. கொழும்பில் இருந்து இராகம, பொல்காவெலை, கடுகண்ணாவை, பேராதனை ஊடாக புகைவண்டிப் பாதை வழியாகவும் கண்டியை அடையலாம்.

**14.3. நீங்கள் கற்றவை :**

1. இக்காலத்தில் சனத்தொகை அதிகரிப்பால் நகரங்கள் விசாலிக்கப்பட்டு அபிவிருத்தி அடைந்துள்ளன.
2. எங்கே பார்த்தாலும் பல்வேறு வகையான கட்டடங்கள் எழுந்து நிற்கின்றன.
3. தொழிற்சாலைகள் பெருகி உள்ளன.

4. பாடசாலைகள், மருத்துவமனைகள் முதலிய பல அமைப்புகள் விசாலிக்கப்பட்டுள்ளதோடு புதிதாகவும் நிறுவப்பட்டுள்ளன.
5. போக்குவரத்து வசதிகள் அதிகரித்துள்ளன.
6. வியாபார நிலையங்கள், சந்தைகள் என்பன பெருகி உள்ளன.

**14.4. நீங்கள் கற்றவை :**

1. குப்பைகூளம், கழிவு முதலியவற்றால் சூழல் மாசடைகின்றது.
2. மரங்கள் தறிக்கப்படுவதால் வளி மாசடைந்து சூழல் கெடுகிறது.
3. தொழிற்சாலை அலுவலகங்களின் புகை, தூசு, கழிவு நீர் என்பன சூழலைக் கெடுக்கின்றது.
4. சுகாதாரச் சீர் கேட்டால் நகரம் பாதிப்பு அடைகின்றது.
5. மதகு, கால்வாய், நீர்த்தேக்கம் முதலியவற்றால் நுளம்பு முதலியன பெருகித் தீமை விளைவிக்கின்றன.

**14.5. நீங்கள் கற்றவை :**

1. சுற்றாடல் பாதுகாப்பில் அரசும் மக்களும் கவனம் எடுத்தல் வேண்டும்.
2. குப்பைகூளம், கழிவுகள் உடனுக்குடன் அகற்றித் தூய்மைப் படுத்தவேண்டும்.
3. குடியிருப்பு இடங்களில் மரங்களை வளர்க்கவேண்டும்.
4. வாகனங்களில் இருந்து புகை, தூசு, பெருஞ்சத்தம் உண்டாதல் முதலியன தடுக்கப்படல் வேண்டும்.
5. வீதிகள் கால்வாய்கள் நன்கு சுத்திகரிக்கப்படல் வேண்டும்.
6. நிலம், நீர் முதலியன அழுக்கடைதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

## மீட்டற்பயிற்சி

**சரியாரின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் கூறுக.**

i. அனுராதபுரம் நகரை விசயனின் தோழன் நிறுவினான். (சரி / பிழை)
ii. சிகிரியா மலைக்கோட்டையை விசயபாகு மன்னன் அமைப்பித்தான். (சரி / பிழை)
iii. பொலநறுவை பாண்டிய அரசர் தலைநகராக இருந்தது. (சரி / பிழை)
iv. கண்டி மலைநாட்டின் தலைநகர் ஆகும். (சரி / பிழை)
v. இலங்கையில் போர்த்துக்கேயர் புகைவண்டிப் பாதையை அமைத்தனர். (சரி / பிழை)
vi. இக்காலத்தின் மரணவீதம் விஞ்ஞான விருத்தியால் அதிகரித்துள்ளது. (சரி / பிழை)

**செவ்விய விடையைத் தெரிவுசெய்க.**

i. புராதன வீதிகள் அமைக்கப்படுவதன் நோக்கம் :
(1) நகரினை அலங்கரித்தல் , (2) பிறநாட்டு உதவிகள் (3) போக்குவரத்துத் தேவை அதிகரித்தல்
ii. குடிமக்கள் நகரை நோக்கிப் படையெடுத்தலின் காரணம் :
(1) வேலை வசதிக்காக (2) உணவு வசதிக்காக (3) உல்லாசப் பயணத்துக்காக
iii. இலங்கையில் முதன்முதற் புகைவண்டிப் பாதை திறக்கப்பட்ட ஆண்டு :
(1) 1919 (2) 1820 (3) 1815

iv. இலங்கையில் உள்ள இயற்கைத் துறைமுகம் :

(1) காலி (2) கொழும்பு (3) திருகோணமலை

v. புகழ்பெற்ற ஓவியங்களைக் கொண்ட இலங்கைப் புராதன நகரம் :

(1) தம்பதேனியா (2) குருநாகல் (3) சிகிரியா

**யாழ்ப்பாணத்தைப் பற்றி அல்லது கண்டியைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.**

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

## செயற்பாடு :

i. இலங்கைப்படத்தில் பெருந்தெருக்களையும், புகைவண்டிப் பாதைகளையும் குறிப்பிடல்.

ii. சொந்த நகரில், கிராமத்தில் வரலாற்றுப் பெருமைமிக்க இடங்களைப் பார்வையிடல்.

# 15. வியாபாரக் கோலங்கள்

## 15.1. வியாபார நிலையங்களில் உள்ள பண்டங்கள் காலத்துடன் மாற்றம் அடைந்துள்ள விதத்தைக் கண்டறிதல்.

ஆதிகாலம் முதற்கொண்டே மனிதன் தனக்குரிய உணவு முதலியவற்றைத் தானே உற்பத்தி செய்யக் கற்றிருந்தான். பின்னர் தன்னிடம் உள்ள பொருள்களை - பண்டங்களை பிறருக்குக் கொடுத்து தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்கின்றான்.

இவ்வாறாக ஒரு பொருளுக்குப் பதிலாக வேறு பொருள்களை வாங்கிக்கொள்ளும் முறை பண்டமாற்று என்று வழங்கலாயிற்று. கிராமத்திலே / நகரத்திலே / நாட்டிலே பணப்புளக்கம் ஏற்பட்டது. தம்மிடம் இல்லாத பொருள்களைப் பணத்தைக் கொடுத்து வாங்கும் நிலை உண்டாயிற்று! பின்னர் சிறு கடைகள் தோன்றி வளர்ந்தன. பெரிய கடைகள் ஆயின. பொருள்களைச் சேகரித்து வைக்கும் இடங்களும் அமைக்கப்பட்டன. அவை கிட்டங்கி - கிடங்கு என்றெல்லாம் அழைக்கப்படலாயின. இன்று கிராமம் முதலாக மிகப்பெரிய நகரங்கள் வரை எங்குமே கடைகள் - வியாபார நிலையங்கள் பரந்து கிடக்கின்றன.

முன்பெல்லாம் கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்ட காய்பிஞ்சு, மரக்கறி முதலியனவும் அரிசி தானியங்களுமே விற்பனைப் பொருள்களாக விற்பனைப் பண்டங்களாக இருந்தன. அந்நிலை இன்று மாறிவிட்டது. இப்போது உள்ளூரில் விளையும் பொருள்கள், வெளியூர்களில் விளையும் பொருள்கள், வெளி உலகில் கிடைக்கும் பொருள்கள் எனப் பல்வேறு வகைப்பட்ட பொருள்கள் விற்பனை நிலையங்களில் இடம்பிடித்துள்ளன.

உணவுப்பண்டங்கள் அன்றி, துணிவகைகள், தோற்பொருள்கள், அலங்காரப் பொருள்கள், மருந்துவகைகள், புத்தகம், பத்திரிகை, பாதஅணிகள் முதலியனவும் விற்பனைப் பொருள்களாகி விட்டன. மணிக்கூட்டு வகைகள், சைக்கிள் வண்டிகள் போன்ற எந்திர சாதனங்களின் உதிரிப்பாகங்கள் என்பனவும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக மின்சத்தி மற்றும் எரிபொருள்களால் இயங்கும் புதியபுதிய மின்சார சாதனங்களும் அதிகஅளவில் விற்பனைக்கு உண்டு.

இந்நாளில் பொதுத் தேவையாகிவிட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், டெக்கு போன்ற சாதனங்களும் கடைகளில் உண்டு.

பல்வகைத் தின்பண்டங்கள், சுவையூட்டப்பட்ட பானவகைகள், விசுக்கோத்து வகைகள் பதனிடப்பட்ட உணவுகள் எல்லாம் கிடைக்கின்றன.

எவர்சில்வர், அலுமினியம் முதலியவற்றாலும் பிளாத்திக்கு முதலியவற்றாலும் ஆன பாத்திர வகைகளும் வியாபார நிலையங்களில் கிடைக்கின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையும் இன்றுள்ள நிலையும் மடுவும் மலையும் போல இருக்கின்றது.

முன்பெல்லாம் வியாபார நிலையங்களை நடத்த மூலதனம் தேவைப்படலாயிற்று. இந்நாளில், வங்கிகளில் இருந்து கடன்பெற்று வியாபாரம் செய்யப் பயன்படுத்தலாம்.

## 15.2. வியாபாரக் கோலங்களில், அவற்றுடன் தொடர்புபட்டோர் எதிர்நோக்கும் பிரச்சனைகளை இனங்காணல்.

முன்பெல்லாம் வியாபார நிலையத்தில் உரிமையானவரே முதல்வராகவும் பொருள் முகவராகவும் விற்பனையாளராகவும் இருந்தார். இன்று நிலமை வேறு! சனப்பெருக்கத்தால்

வாடிக்கைகாரர் தொகை அதிகரித்துள்ளது. விற்பனையாளர், பொருள்முகவர், சிற்றாள், லொறிச்சாரதி, லொறி கிளீனர் என்றின்ன பலவகைப்பட்ட தேவைகள் பெருகிவிட்டன. அவற்றுக்கு நெறிப்படுத்தலும் அதிக பணமும் தேவையாகின்றது.

பண்டங்கள் பழுதடைதல், ஊதிப்போதல், நஞ்சூட்டப்படுதல், சத்துப் பெறுமானம் காலாவதியாதல் இவற்றால் ஏற்படும் இழப்புகளைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

விவசாயி திடீரென வீழ்ந்துவிட்டால் அதனைத் தாங்கிக்கொள்ள வேண்டிய பொருளாதார ஸ்திரமின்மையைத் தாங்கக்கூடிய தகுதி வேண்டும்.

ஊழியர்கள் பற்றாக்குறைவைச் சமாளிக்கும் அனுபவம் வேண்டியிருத்தல் தேவைக்கேற்ற ஊழியர்களை வேலைக்கமர்த்துதலில் ஏற்படும் செலவுகளை சமாளிக்க வேண்டி இருத்தல்.

நம்பகத்தன்மை வாய்ந்த பொருள் முகவரை பணிக்கிருத்துவதில் உள்ள சிரமங்களை வியாபார நிலைய உரிமையாளர்களைப் பாதித்தல்.

தொழிலாளர் கூட்டங்களில் சிக்கல் உண்டாகாமல் இருக்குமாறு கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்.

உற்பத்திப் பொருள்கள் கிடைக்கும் காலங்களில் அவற்றைக் கொள்முதல் செய்து கிடையாத காலங்களுக்கு விநியோகிப்பதற்குப் பொறுப்புடன் கடமை புரிதல்.

நேர்மையான வாடிக்கையாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். அப்படியில்லாவிடின் சண்டை, சச்சரவு, பெருந்நட்டம் முதலியவற்றின் பாதிப்புக்கு உள்ளாகவேண்டும்.

பொருள்களை நிறுத்து விற்பதில் எப்பொழுதும் நேர்மையைக் கடைப்பிடித்து நடத்தல் அவசியமாகும்.

### 15.3. வியாபாரம் எமக்கு அவசியமான செயல்வழி என இனங்காணல்.

குறிப்பிட்ட ஒரு கிராமத்தில், நகரத்தில் ஏதாவது பொருளுக்கு தேவை இருந்தால் அப்பொருளைப் பணம் பெற்றுக்கொண்டு கொடுக்கும் தொழிலைச் செய்பவர் வியாபாரி. அவன் பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் நற்பணி செய்கின்றான்.

உணவு முதலிய நுகர்பொருள்கள் இல்லாமல் வீடு இயங்கமாட்டாது. ஒரு வீட்டிற்குரிய உணவு, உடை மற்றும் சாதனங்கள் அனைத்துமே வியாபாரிகள் இடமிருந்தே பெறுகின்றோம். உற்பத்தியாளர்களுக்கும் வியாபாரி சேவை செய்கின்றான். அவன் அவற்றைப் பெற்றுச் சந்தைப்படுத்தாவிடில் உற்பத்தியாளர் தொழிலின்றி வருந்துவர். மேற்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்யமாட்டார்கள்.

வியாபாரிகள், பொருள்களின் தகுதி தகுதியீனங்களை நன்கு அறிந்திருக்கின்றார்கள். எப்பொழுதும் பாவனையாளர்களுக்குத் தரமானவற்றை, சிறந்தவற்றை விநியோகிப்பர்.

சிறந்த வியாபாரி நிறுவை செய்வதில் கவனமாக இருப்பான். பொருள்களைக் கொள்ளும்போது நிறை குறைவாக வாங்கமாட்டான். விற்கும்போது கூடிய நிறையைக் கொடுப்பான். நுகர்வோருக்குத் தன்னிடத்தில் சிறந்த நம்பிக்கையை உண்டாக்கிக் கொள்வான். உலக இயக்கத்துக்கு வியாபாரம் உயிர்நாடியாக இருக்கின்றது.

**15.1. நீங்கள் கற்றவை :**

1. மனிதன் உணவினைத் தானாகவே தேடி உண்டான்.
2. பண்டமாற்றுமூலம் பெற்று வாழ்ந்தான்.
3. இப்போது பணத்தைக் கொடுத்துப் பொருள்களை வாங்கிப் பயன்படுத்துகின்றான்.
4. தனது கிராம உற்பத்திகளுடன் நிறைவு காணாமல், பிற இடங்களில் கிடைக்கும் பொருள்களையும் வாங்கினான்.
5. நாளாக நாளாக உற்பத்திப் பொருள்களையும் உபயோகிக்கத் தொடங்கிவிட்டான்.
6. உணவுப் பண்டங்கள் அன்றி அனைத்துத் தேவைகளும் உரிய எல்லாப் பொருள்களும் கடைகளில் கிடைக்கின்றன.
7. முன்பெல்லாம் வியாபார நிலையங்களை உரிமையாளர் தமது சொந்த முதலைக் கொண்டு நடத்தினார்.
8. இப்போது வங்கிகளும் கடனுதவி செய்கின்றன.
9. தனி ஒருவர் அன்றி மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர் பலர் சேர்ந்தும் வியாபார நிலையங்களை நடாத்தி வருகின்றனர்.

**15.2. நீங்கள் கற்றவை :**

1. முன்பு தனி ஒருவர் மட்டும் முதலாளியாகவும், பொருள்களைக் கொள்முதல் செய்பவராகவும், விற்பனையாளராகவும் கடமையாற்றினார்.
2. சனப்பெருக்கம் அதிகரிக்க அதிகரிக்கக் கடைகளும் அதிகரித்தன. தனி ஒருவரால் எல்லாவற்றையும் நிருவகிக்க இயலாது.
3. முதல்வர், விற்பனைசெய்வோர், காசாளர், பொருள்களைக் கொள்முதல் செய்வோர் எனப்பலர் வேலை கொள்ளப்பட வேண்டி வந்துள்ளது.
4. வியாபார நிலையத்தில் தேவைக்கேற்றபடி ஊழியர் நியமனம் செய்யப்பட வேண்டி வந்துள்ளது.
5. நுகர்பொருள்கள் விளையும் காலங்களில் அவற்றைக் கொள்முதல் செய்து சேமித்து வைக்கக் கிட்டங்கிகள் தேவைப்படுகின்றன.
6. பண்டங்கள் பழுதடைவதால் ஏற்படும் இழப்பீடுகளையும் தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.
7. நம்பகத் தன்மையுள்ள கொள்முதல் செய்யத் தகுதிவாய்ந்த ஊழியர்களை சேர்த்துக் கொள்வதிலும் சிரமம் உண்டாகிவிட்டது.
8. தொழிலாளர் சட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

**15.3. நீங்கள் கற்றவை :**

1. பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கும் காலங்களில் அவற்றை வாங்கிவந்து சேமித்துவைத்து விற்பனை செய்கின்றான்.
2. வியாபாரி பொதுமக்களுக்குச் சேவை புரிகின்றான்.
3. பொருள் உற்பத்தியாளருக்கும் கூடச் சேவை செய்கின்றான்.
4. அவனுக்கு பொருள்களின் தரம், தகுதி, தகுதியின்மை எல்லாமுமே நன்கு விளங்கும்.
5. பொருள்களை நிறுவை செய்வதில் நிதானம் பின்பற்றப்பட வேண்டும்.
6. மக்கள் நல்வாழ்வுக்கு வியாபாரம் கைத்தொழில் முக்கியமானதொன்றாகச் செல்கிறது.

## மீட்டற்பயிற்சி

**சரியாயின் சரியென்றும் பிழையாயின் பிழையென்றும் கூறுக.**

i. ஒரு பொருளைக் கொடுத்து அதற்குப் பதிலாக மற்றுமொரு பொருளை வாங்குவது பண்டமாற்று முறை எனப்படும். (சரி / பிழை)

ii. இக்காலத்தில் நகரத்துக் கடைகளில் இறக்குமதிப் பொருள்கள் கிடைப்பதில்லை. (சரி / பிழை)

iii. கடைகளைப் பொறுத்தவரை 50 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள நிலையும் இன்றுள்ள நிலையும் ஒரேமாதிரியானவை. (சரி / பிழை)

iv. சனப்பெருக்கம் காரணமாக வாடிக்கையாளர் தொகை பெருகியுள்ளது. (சரி / பிழை)

v. விலைவாசி வீழ்ச்சியடைந்தால் அதனை முதலாளியே தாங்கவேண்டி உள்ளது. (சரி / பிழை)

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i. வாடிக்கையாளர் ________ உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

ii. வியாபாரி பொருள்களை ________ செய்வோருக்கும் உதவுகின்றான்.

iii. சிறந்த வியாபாரி ________ குறைத்து அளக்கமாட்டான்.

iv. கடைமுதலாளி ________ சட்டங்களை மதித்து நடத்தல் வேண்டும்.

v. வியாபார நிலையங்களில் தேவைக்கு ஏற்றபடி ________ நியமிக்கப்படும்.

vi. ________ ஊட்டப்பட்ட விற்பனைப் பொருள்களை அழித்து விடவேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொழிலாளர் | நிறுவை | நஞ்சு | உற்பத்தி | நேர்மை | ஊழியர் |

**வியாபார நிலையம் குறித்து 5 வசனங்கள் எழுதுக.**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**செயற்பாடு :**


i. நகரத்துக் கடையொன்றைப் பார்வையிட்டு அங்குள்ள உடை முதலிய அலங்காரப் பொருள்களை அட்டவணைப்படுத்தல்.

ii. பலநோக்குக் கூட்டுறவுச் சந்தையைப் பார்வையிடல்.

# 16. எமது விழாக்கள்

## 16.1. பிரதேசத்தில் நடைபெறும் பல்வேறு சமய கலாசார விழாக்களை இனங்காணல்.

நமது நாட்டில், தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் முதலிய பல இனமக்கள் வாழ்கின்றனர். தமிழ், சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகள் நடைமுறையில் உள்ளன. சைவம், பௌத்தம், கிறீத்துவம், இஸ்லாம் முதலிய சமயங்கள் வழக்கில் உள்ளன. ஒவ்வொரு சமயத்தினருக்கும் பல்வேறு விழாக்கள் இருக்கின்றன. ஒருசிலவற்றை இங்கு நோக்குவோம்.



எமது சமயங்களை நினைவுறுத்தும் சின்னங்கள்

**சைவசமயிகளின் விழாக்களுள் சில :** தைப்பொங்கல், மகாசிவராத்திரி, தீபாவளி முதலியன.

**தைப்பொங்கல் :** இதனைச் சூரிய பொங்கல் என்றும் கூறலாம். இது தமிழுக்குத் தை மாதத்தில் முதலாம் நாளில் வருகின்றது. தை மாதத்தில் வருவதால் தைப்பொங்கல் என்கின்றோம். அன்று சூரியன் உதிக்கும் நேரத்தில் புத்தரிசியால், பாற்சோறு பொங்கிப் படையல் செய்து சூரியனை வழிபடுவோம்.

**தீபாவளி : தீப + ஆவளி = தீபாவளி :** அதாவது விளக்குகளை, வரிசையாக ஏற்றி வழிபடுதல் என்பது இதன் பொருள். தீபாவளித் திருநாளை ஐப்பசி மாதத்தில் கொண்டாடுகின்றோம். தீபாவளியன்று உடல் முழுதும் நல்லெண்ணெய் தேய்த்து புத்தாடை அணிந்து இறைவழிபாடு இயற்றுவோம்.

**மகாசிவராத்திரி :** ஆண்டுதோறும் மாசி மாதத்தில் அமாவாசிக்கு முதற் திகதியன்று வரும். அன்று இரவு சைவர்கள் நான்கு சாமங்களிலும் அபிடேக ஆராதனைகளில் கலந்து கொள்வர். இறைவன் சிவராத்திரி இரவிலே இலிங்கோற்பவராக வெளிப்பட்டுத் திருவருள் புரிவார் என்பது சைவமரபு.


**இனி பௌத்தர்களின் விழாக்களுள் சிலவற்றைக் காண்போம்.**


**வெசாக்கு :** பௌத்தமத விழாக்களுள் மிகவும் முக்கியமான விழா இதுவாகும். புத்தர் பெருமான் அவதரித்தது வைகாசி மாதப் பூரணை நாள். ஞானம் பெற்றதும் பரிநிர்வாணம் அடைந்ததும் வைகாசிப் பூரணை நாள்களே. சிங்கள மொழியில் வைகாசி மாதம் " வெசக் " என அழைக்கப்படுகின்றது. பௌத்தர்கள் வெசாக்கு அன்று எண்வகைச் சீலங்களைக் காப்பதில் பொழுதைக் கழிப்பர்.

**பொசன் விழா :** இவ்விழா ஆனி மாதத்தில் வரும். சிங்களத்தில் ஆனி மாதம் "பொசன்" என அழைக்கப்படுகின்றது. புத்தசமயத்தை இலங்கையில் பரப்புவதற்குத் தேரமகிந்தர் இந்நாளிலேதான் இங்கு வந்தனர் என்பர். பல நூற்றாண்டுகளாக இவ்விழா அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

**எசால விழா :** எசால என்றால் சிங்களத்தில் ஆடி மாதத்தைக் குறிக்கும். இது கஜபாகு மன்னன் காலத்தில் தொடக்கப்பட்டதென்பர். முதலில் கண்ணகியின் சிலம்பை ஊர்வலமாகக்

பல்வேறுபட்ட
சமயச் சடங்குகள்

















கொண்டுவந்து பெரகரா நடத்தினர். பின்னர் கண்டியில் இருக்கும் புனிதத் தந்த தாதுவைக் கொண்டு செல்கிறார்கள். கொடியேற்றுதல் தீர்த்த விழா முதலிய இந்துப் பழக்கவழக்கங்கள் இவ்விழாவில் அனுட்டிக்கப்படுகின்றன.

**இனி கிறீத்தவ சமய விழாக்கள் சிலவற்றைக் கவனிப்போம்.**

**நத்தார் திருநாள் :** நத்தார் திருநாள் மார்கழி மாதத்தில் (டிசெம்பர் 25) ஆம் நாளன்று வரும். கிறீத்தவர்கள் 24 ஆம் தேதி இரவு தேவாலயத்துக்குச் சென்று சமய வைபவங்களில் ஈடுபடுவர். இவ்விழாவை கிறீத்தவ உலகம் ஏழைகளுக்கு உணவு, உடை முதலியன வழங்கிப் போற்றுவதும் உண்டு.

**ஈஸ்டர் விழா :** இவ்விழாவினையும் கிறித்தவர்கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். ஒவ்வோராண்டும் சித்திரை - ஏப்பிரல் மாதத்தில் வருகின்றது.

**இனி இஸ்லாமியர் தொடர்பான சில விழாக்களை நோக்குவோம்.**

**முகம்மதுநபி (ஸல்) அவர்கள் பிறந்த தினவிழா :** இவ்விழா அவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கே நடைபெறுகின்றது. இத்தினத்தில் ஏழை எளியவர்களுக்கு உணவு, உடை முதலியன அளித்து மகிழ்வர்.

**ஈத் - உல் - பித்ர் :** இதனை நோன்புப் பெருநாள் என்று வழங்குவர். முஸ்லிம்கள் இது இரம்ளான் மாதத்தில் வரும். அம்மாதம் முழுவதும் தினந்தோறும் சூரியன் உதித்த நேரம் முதல் மறையும் நேரம்வரை உணவு, பானம் முதலிய எவற்றையும் விடுத்து பின்னர் பிறைகண்டு தொழுது அனுட்டிப்பார்கள். ஏழை எளியவர்களுக்கு உணவு முதலியன வழங்குவர்.

**ஹச்ஜிப்பெருநாள் :** இத்திருநாளில் புத்தாடை அணிந்து இறைவழிபாட்டில் ஈடுபடுவர். இவற்றைவிட இலங்கையில் வாழும் சிங்களரும் தமிழரும் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் புத்தாண்டு விழாவை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுகின்றனர். மேலும் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், பறங்கியர் முதலிய அனைத்து இனத்தவரும் சுதந்திர தினவிழாவையும் கொண்டாடுகின்றனர்.

## 16.2. அவ்விழாக்களை நடத்தக் காரணமாய் அமைந்த விடயங்களைக் கண்டறிதல்.

**தைப்பொங்கல் :** இது உழவனுடைய திருநாள். நெல் மற்றும் தானியங்கள் பயிர் வகைகள் செழித்து வளர மழை வேண்டும். மழை பெய்வதற்குக் காரணமாகி நிற்பவர் சூரியன். அவனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாகத் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றனர்.

மேலும் மகரக்கோட்டில் சூரியன் அங்கிருந்து வடக்கு - உத்தரம் நோக்கிப் பிரயாணம் மேற்கொள்ளுகின்றான். அவனை ஆராதிக்கும் முகமாகவும் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றனர்.

**தீபாவளி :** நமது இல்லம் அறியாமை இருளில் இருந்து நீங்கி அறிவொளி பெறல் வேண்டும் என்னும் காரணத்தால் உண்டாகியது. இனி, நெசவாளர் மகத்துவத்தை விளக்க எழுந்த விழா இது என்போரும் உளர். சமய அடிப்படையில் அசுரகுணங்களை அழித்து உயிர்களுக்கு நலம்புரியும் இறைவன் கருணையை வழிபடப்படுவது என்று பெரியோர் கூறுவர்.

**சிவராத்திரி :** நற்குணங்களும் துர்குணங்களும் பெரும் போராட்டத்தை நிகழ்த்துகின்றன. அவற்றிடையே மெய்ப்பொருள் வெளிப்பட்டு அருள் புரிதலைக் காட்டும் விழா இது என்பர். சமய அடிப்படையில் திருமால் பிரமன் அடி முடிகாணராய் அவலம் அடைந்தபோது அவர்கள் முன் இலிங்கோற்பவராக எழுந்தருளிய இறைவன் திருவருள் செய்த தினம் என்பர்.

DONATED BY: ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

**வெசாக்கு :** போதிமாதவன் புத்தபெருமான் திருவவதாரம் செய்ததும், ஞானம் பெற்றதும் பரிநிருவாணம் அடைந்ததும் வைகாசி மாதப் பூரணையில் நிகழ்ந்தன. அதனால் இப்பெருவிழா எடுக்கப்படுகின்றது. என்றும் கூறுவர்.

**பொசன்விழா :** பாரத நாட்டில் இருந்து தேரமகிந்தர் இலங்கைக்கு வருகை தந்து புத்தசமயத்தை முதன்முதல் போதித்தார். அதனை நினைவுகூரும் பொருட்டு இவ்விழா எடுக்கப்படுகின்றதென்பர்.

**எசால விழா :** தெய்வங்களை முதன்மையாகக் கொண்டு நடத்தப்படும் விழா இது. கஜபாகு மன்னனே இவ்விழாவினைத் தொடக்கிவைத்து தெய்வ ஆசிபெற்று அரசோச்சினான் என்பர்.

**நத்தார் திருநாள் :** இரட்சகராகிய யேசுநாதர் திருவவதாரம் செய்த திருநாள். யேசுநாதருக்கு நன்றி வழிபாடு இயற்ற இது அனுட்டிக்கப்படுகின்றது.

**ஈஸ்டர் விழா :** குருசுவாமியாகிய யேசுநாதர் உலக சுபீட்சத்தின் பொருட்டு மரித்தெழுந்த மகிமை குறித்துக் கொண்டாடப்படுகின்றது.

**பெருமானார் பிறந்த தினம் :** இஸ்லாம் மதத்தைக் கட்டி எழுப்பிய இறை திருத்தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்ததினம் குறித்து அனுட்டிக்கப்படுகின்றது.

**ஈத் - உல் - பிதர் (நோன்புப்பெருநாள்) :** இறையருள் பெறவும் ஏழை எளியார்க்கு இயைந்தன ஈயவும் சிந்தையையும் உடலையும் தூய்தாக்கவும் இயற்றப்படுகின்றது.

**ஹச்சுப்பெருநாள் :** இறை திருத்தூதராகிய பெருமானார் முகம்மது நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்குச் சென்ற நிகழ்வைக் குறிக்குமாறு கொண்டாடப்படுகின்றது.

**சுதந்திர தினவிழா :** இலங்கை ஐரோப்பிய நாட்டாரிடம் இருந்து விடுதலை பெற்றமை குறித்து இலங்கை மாதாவின் புதல்வர் எல்லோராலும் கொண்டாடப்படுகின்றது. புத்தாண்டு விழா சித்திரை மாதத்தில் பிறக்கும் புதுவருடம் காரணமாகக் கொண்டாடப்படுகிறது.

## 16.3. அவ்விழாக்களுள் ஒன்றின் ஒழுங்கமைப்பைப்பற்றி விசாரித்தறிதல்.

**சிவராத்திரி விழாவின் ஒழுங்கமைப்பைப்பற்றி சிறிது தெரிந்து கொள்ளுவோம்.**

இதில் முத்தரப்பினர் கலந்து கொள்கின்றனர். அவர்கள் :

i. ஆலயத்தில் உள்ள அருச்சகர் முதலியோர்
ii. விழா அமைப்புக் குழுவினர்
iii. பொதுமக்கள்

**அருச்சகர் முதலியோர் :** திருக்கோயில் அபிடேக ஆராதனைகட்குரிய திரவியங்களை அறங்காவலரின் உதவியுடன் சேகரித்து வைத்துக் கொள்வர்.

**விழா அமைப்புக் குழுவினர் :** சிவராத்திரி இரவின் பேச்சு அரங்கிற்குரிய தலைவர் பேச்சாளர், திருமுறைப் பாராயணம், உரைமாலை - புராணபடனம் கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றுக்கான நிகழ்ச்சிநிரலை ஒழுங்குசெய்து கொள்வர்.

பொதுமக்கள் வெறும் பார்வையாளராக அல்லாமல் பங்காளர்களாயும் இருந்து கொள்வர். அனுட்டான ஆகாரங்களுடன் சிவராத்திரி விரதத்தை நோற்பர்.

**பேச்சரங்கிற்கு உரிய நிகழ்ச்சி நிரலின் மாதிரிகை :**

1. மங்கலஇசை
2. திருமுறைப்பாராயணம்
3. வரவேற்புரை
4. தலைவர் பேருரை
5. உரைமாலை : (i) - விரிவுரை
   (ii) - விரிவுரை
   (iii) - விரிவுரை
6. புராணபடலம்
7. கலைநிகழ்ச்சி : (i) - நடனாஞ்சலி
   (ii) - சிறுநாடகம்
   (iii) - வில்லிசை
8. நன்றியுரை - விழா அமைப்பாளர்

கு - பு (i) அடியார்கள் முற்பகலில் ஆலய உட்புற வெளிப்புறச் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடுவர்.
(ii) இளநீர், பால் முதலிய அபிடேக திரவியங்களைச் சேகரிப்பர்.
(iii) நான்கு சாமப் பூசைகளிலும் கலந்து கொள்வர்.
(iv) வைகறைப் பொழுதில் தேவார பாராயணத்துடன் புண்ணிய நீர்த்துறைக்குச் செல்வர்.
(v) ஆலய தரிசனம் செய்து மீள்வர்.

**16.1. நீங்கள் கற்றவை :**

1. ஒவ்வொரு சமயத்தினருக்கும் பலபல விழாக்கள் உண்டு.
2. தமிழர் பொங்கல் விழாவைத் தமிழ்த் தைமாதத்தில் முதலாம் நாளில் கொண்டாடுகின்றார்கள். பாற்பொங்கல் செய்து சூரியனை வழிபடுவர்.
3. தீபாவளி நாள் தமிழ் ஐப்பசி மாதத்தே கொண்டாடப்படுகின்றது. தீபங்களை வரிசையாக வைத்து வழிபட்டு மகிழ்வர்.
4. மாசி மாதத்தில் மகாசிவராத்திரி விழா வருகின்றது. இரவு முழுதும் விழித்திருந்து வழிபாடியற்றுவர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
5. வெசக்கு விழா வைகாசி மாதப் பூரணையில் வரும். எங்கும் வெளிச்சக் கூடுகள் தொங்கவிடப்படும். விகாரைகளில் வழிபாடு நடத்துவர்.
6. போசன் விழா ஆனி மாதத்தில் நடைபெறும். மிகுந்தலைக்கு வழிபாட்டிற்குச் செல்வர்.
7. எசால விழா ஆடிமாதத்தில் நடைபெறும். இதில் கண்டி பெரகரா நிகழ்ச்சி சிறப்பு அமிசமாக இருக்கும்.
8. நத்தார் விழாவைக் கிறீத்தவர் மார்கழி மாதத்தே கொண்டாடுவர்.
9. ஈஸ்டர் விழா சித்திரை மாதத்தில்க் கொண்டாடப்படும்.

10. மிலா - துன் - நபி விழா நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதே இவ்விழாவாகும்.
11. நோன்புப் பெருநாள் இரம்ளான் மாதத்தில் வரும். இதனை ஈத் - உல் - பிதர் என்றும் கூறுவர். முப்பது நாள் நோன்பிருப்பர்.
12. ஹச்சுப் பெருநாள் இஸ்லாமியர்களின் ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டாடப்படுகின்றது.
13. இவற்றைவிடப் புத்தாண்டு விழாவை எல்லா இனமக்களும் கொண்டாடி மகிழ்கின்றனர்.

## 16.2. நீங்கள் கற்றவை :

1. பொங்கல் விழா சூரியனுக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படுகின்றது.
2. தீபாவளித் திருநாள் இறைவன் அரக்கனை அழித்து தேவாதியர்களுக்கு விமோசனம் பெற்றுத் தந்தமைக்கும்; நெசவாளர்களுக்கு நன்றி செலுத்துவதற்குமாக நிகழ்த்தப்படுகின்றது.
3. சிவராத்திரி விழா இறைவன் இலிங்கோற்பவ காலத்தில் வெளிப்பட்டு அருள் புரிந்தமைக்காகக் கொண்டாடப்படுகின்றது.
4. வெசக்கு விழா புத்தபெருமான் வைகாசிப் பூரணையில் பிறந்து அதே பூரணையில் ஞானம் பெற்று அதே பூரணையில் பரிநிருவாணம் அடைந்தமையைக் குறிக்கும் காரணமாகக் கொண்டாடப்படுகின்றது.
5. பொசன் விழா தேரமகிந்தர் இலங்கைக்கு புத்த தர்மத்தைக் கொண்டு வந்தமையைக் குறிக்கும் வகையில் கொண்டாடப்படுகின்றது.
6. எசால விழா தெய்வ ஆசிவேண்டி நடத்தப்படுகின்றது.
7. கிறிஸ்மஸ் விழாவும் ஈஸ்டர் விழாவும் முறையே யேசுநாதரின் பிறப்பையும் உயிர்த்தெழுதலையும் உணர்த்தும் வகையில் கொண்டாடப்படுகின்றது.
8. பெருமானார் நாயகம் அவர்கள் பிறப்பை உணர்த்தவும் ஈகையின் சிறப்பையும் நோன்பின் மகிமையையும் உணர்த்தவும் பிறந்தநாள் விழாவும் ஈத்துல் நபிர் விழாவும் கொண்டாடப்படுகின்றன.
9. ஹச்சுப் பெருநாள் இஸ்லாமிய புத்தாண்டையும் பெருமானார் மக்காவில் இருந்து மதீனாவுக்குச் சென்றமையையும் தெரிவிக்கப் போந்தனவாகும்.

## 16.3. நீங்கள் கற்றவை :

1. சிவராத்திரி விழாவன்று காலையில் நீராடி விரதம் இருப்பர்.
2. ஆலயத்துக்குச் சென்று நான்கு சாமமும் விழித்திருந்து வழிபாடு இயற்றுவர்.
3. அபிடேக ஆராதனைகளைக் கண்டு மகிழ்வர்.
4. கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும்.
5. விழா முடிவில் தீர்த்தமாடி பின்னர் பாரணம் செய்வர்.
6. சிவராத்திரி இரவின்பின் மறுநாள் பகல் முழுதும் விழித்திருப்பர்.
7. கலைநிகழ்ச்சிகள் - ஊஞ்சல் - தயிர்முட்டி அடித்தல் முதலியனவும் நிகழ்வுறும்.

## மீட்டற்பயிற்சி

**ஆம் அல்லது இல்லையென்று கூறுக. (ஆம் / இல்லை)**

i. தைமாதம் முதலாம் நாளில் பொங்கல் விழா நடைபெறும். ........................

ii. இந்துசமயத்தவர் நத்தார் -விழாவைக் கொண்டாடுவர். ........................

iii. பெருமானார் மதீனாவில் இருந்து மக்காவுக்குச் சென்றதுடன் இஸ்லாமிய ஆண்டு நிகழ்கின்றது. ........................

iv. சிவராத்திரியன்று நள்ளிரவு 12 மணிக்கு லிங்கோற்பவ காலம் இருக்கின்றது. ........................

**சுருக்கமான விடை தருக.**

i. பொசன் விழா ஏன் கொண்டாடப்படுகின்றது?

..........................................................................................................................................

ii. நோன்புப் பெருநாள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

..........................................................................................................................................

iii. ஈஸ்டர் நாள் எதனை நினைவு கூருகிறது?

..........................................................................................................................................

iv. "எசால" என்பது எதனைக் குறிக்கும்?

..........................................................................................................................................

v. தீபாவளி என்பதன் பொருள் என்ன?

..........................................................................................................................................

**நீர் விரும்பிய விழாவைப் பற்றி 5 வசனங் எழுதுக.**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

**செயற்பாடு :**

i. உமது கிராமத்தில் / நகரத்தில் நடைபெற்ற சமய விழாக்களைப் பார்வையிட்டு நிகழ்ச்சிகளைக் குறித்துக் கொள்க.

# 17. முயற்சியுடையோர்

## 17.1. இலங்கையின் பல்வேறு துறைகளில் உள்ள முயற்சியாளர் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு ஆர்வம் ஏற்படுத்துதல்.

ஒருமுறை பாடசாலை விடுமுறைக்குக் கண்ணன் கொழும்புக்குச் சென்றிருந்தான். அவனுடைய மாமனார் வீட்டில் தங்கினான். அவர் அவனைப் பழைய பாராளுமன்றக் கட்டடத்தைப் பார்க்கக் கூட்டிச்சென்றார். அதன் அயலில், சர். பொன். இராமநாதன், சர். பொன். அருணாசலம், தேசபிதா டி. எஸ். சேனாநாயக்க மற்றும் எஸ். டபிள்யூ. ஆர். டி. எஸ். பண்டாரநாயக்கா முதலியோர்களின் சிலைகளைக் கண்டான். மாமனார் அவர்களின் விடாமுயற்சியின் தன்மைகளை அவனுக்குக் கூறிவைத்தார்.

மற்றொரு நாள், பாடசாலை மாணவர்களுடன் யாழ் நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்றான். அப்போது நல்லூரில் நாவலர் பெருமான், சங்கிலி குமாரன், சுன்னைக் குமாரசாமிப் புலவர், நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர், காந்தியடிகள் என்றின்னோர்களின் சிலைகளை எல்லாம் பார்த்தான். ஆசிரியர் அவர்களது வாழ்க்கை வரலாறுகளையும் சேவைகளையும் மாணவர்களுக்குக் கூறிவைத்தார்.

பிள்ளைகளே! உங்கள் கிராமத்தில் / நகரத்தில் ஒவ்வோர் துறைகளிலும், உழைப்பால் மேம்பாடு எய்தியோர் பலர் இருக்கலாம். அவர்களுள் அரசியல் அறிஞர்கள், கல்விமான்கள், விளையாட்டுவீரர், கமக்காரர் என்றின்ன பலர் இருந்திருக்கலாம். ஏன்? மருத்துவம், பொறியியல், சிற்பம், சித்திரம், சங்கீதம் போன்ற துறைகளில் வல்லவர்களும் இருந்திருக்கலாம், இருக்கலாம். அவர்கள் எல்லாம் உழைப்பால் உயர்ந்த உத்தமர்களே. அவர்களை விசாரித்தறிந்து அட்டவணை செய்து எழுதிக்கொள்ளுங்கள்.

"அடுத்து முயன்றால் ஆகாததொன்றில்லை" என்பது பழமொழி. நாவலர் பெருமான், இராமநாதன், அருணாசலம் இவர்களை அன்றிப் பிற்காலத்தில் விபுலானந்த சுவாமிகள், G. G. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், சுன்னைக் குமாரசாமிப் புலவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், வித்துவான் பண்டிதமணி அப்பையாபிள்ளை, வித்துவசிரோமணி, கணேசையர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை முதலிய பல்வேறு பெரியார்கள் வாழ்ந்திருந்தனர். இவர்கள் எல்லாம் அரிய உழைப்பினால் உயர்ந்தவர்களே! தமக்கென வாழாது பிறர்க்காக வாழ்ந்த பெருமக்களே. அவர்கள் வழிநின்று நீங்களும் உழைப்பால் உயர்ந்து நலம்பெறுங்கள்.

## 17.2. முயற்சியின் காரணமாக தமது காரியத்தை இறுதிவரை தொடர்ச்சியாக நடத்துதலின் முக்கியத்துவத்தை இனங்காணல்.

**நாவலர் பெருமான் :** (1822 - 1879) இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார். ஐரோப்பிய சாதியாரின் வரவால் நிலைகெட்டு நின்ற சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் மேல்நிலைக்குக் கொண்டுவர முயன்றார். தமிழ், சமஸ்கிருதம், வடமொழி மூன்றையும் முறையாகக் கற்ற இவர், பழைய தமிழ் நூல்களைத் தேடி அச்சியற்றினார். பேச்சினாலும் எழுத்தினாலும் மக்களுக்கு நல்லறிவூட்டினார். அயராது உழைத்து தமிழ் வசன நடையை தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகப்படுத்தினார். தான் பிறந்த யாழ்நாட்டில் மட்டுமன்றி தென்னிந்தியத் திருநாட்டிலும் சைவத்தமிழ்ப் பணியை வசதிகள் அற்ற அக்காலத்தில் செய்தார். கருதிய கருமம் கைகூடும் வரை இடைவிடாது உழைத்து தமிழும் சைவமும் உலக அரங்கில் தலைதூக்கி நிற்க அருந்தொண்டாற்றினார். நாவலரைப்போல நமக்காளில்லை. என்னும் அளவிற்கு உழைப்பால் உயர்ந்தார்.

இவரையொப்ப சி. வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், சுன்னைக் குமாரசாமிப் புலவர், நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர், பண்டிதமணி நவநீத கிருஷ்ணபாரதியார் (மாவைக்கவுனியன் வெண்ணெய்க் கண்ணனார்), பண்டிதமணி வித்துவான் சுப்பையாபிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை முதலியவர்களுடன் மற்றும் பலரும் இடையீடின்றி முயன்று தமிழ்ப்பணி புரிந்தனர்.

அரசியல் அறிஞர்கள் சார்பிலே, சர். பொன். இராமநாதன், சர். பொன். அருணாசலம் முதலியோர் தொண்டு மகத்தானது. இலங்கையில் சிங்களருக்கும் முஸ்லிம்களுக்கும் கலவரம் உண்டாயபோது தம் உயிரைத் துச்சமாக மதித்து வசதிகள் அற்ற காலத்தில் இலண்டன் மாநகரம் சென்று பிரித்தானிய அரசாருடன் பேசி அமைதிகாத்த பெருமகனார் இலங்கையின் சுதந்திரத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

மேலும் அறிஞர் சித்திலெப்பை அவர்களும் அயராது உழைத்து இஸ்லாமிய பண்பாட்டை வளர்த்தனர்.

இவர்களை ஒப்ப மூதறிஞர் செல்வநாயகம், நுண்மார் நுழைபுலம்மிக்க ஜீ. ஜீ. பொன்னம்பலம் உள்ளிட்ட பலரும் தமிழர் நலங்காக்க முயன்று முயற்சி செய்தவர்களே! மக்கட்பணியே மகேசன் பணியென்று பொதுமக்கள் நல்வாழ்வுக்காக உழைத்தோர் பலராகும். அவரெல்லாம் நித்திரையின்றி உணவின்றி ஓய்வின்றி உழைத்தவர்கள். முயற்சி செய்தவர்கள். பலபல அமைப்புக்களை நிறுவி அவற்றின் வாயிலாக அவர்கள் சமூகத் தொண்டர்கள். எங்களது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். அவர்கள் பெயர்களைக் கேட்டறிந்து அட்டவணை பண்ணி எழுதுங்கள்.

"உழைப்பால் வாரா ஊதியம் உண்டோ"



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



நவாலியூர் சோமசுந்தரப் புலவர்



சி. வை. தாமோதரம்பிள்ளை



அறிஞர் எம். சி. சித்திலெப்பை



சுவாமி விபுலானந்த அடிகள்

## 17.3. திட்டமிடப்பட்ட நாளாந்த நடத்தை, நோக்கத்தை அடைவதற்கு முதற்படியென விளங்கிக் கொள்ளல்.

ஒருவர் தமக்கு நன்மை பயக்கும் சுயமுயற்சியிலாயினும் சரி; பிறர்க்கு நன்மை பெற்றுத்தரும் முயற்சியிலாயினும் சரி; தமது நடத்தைக்கு ஒரு திட்டம் வகுத்துக் கொள்ளவேண்டும். பொதுநல முயற்சிக்கு அது மிகமிக முக்கியமானதாகும்.

முதலில் அவர் ஒழுக்க சீலம் மிக்கவராய் இருத்தல் வேண்டும். பிறருக்கு முன்மாதிரியானவராயும் நடந்து காட்டவேண்டும். எப்பொழுதும் நல்லதையே நினைந்து நல்லதையே சொல்லி நல்லதையே செய்பவராக இருத்தல் வேண்டும். எடுத்த கருமம் நிறைவெய்துங்காறும் இடைவிடாது முயற்சிக்கவேண்டும். தனக்கென்று யாதும் ஒன்றையும் ஒதுக்கிவைத்தல் - சேர்த்துவைத்தல் ஆகாது. வெற்றியைக்கண்டு வீறாப்போ தோல்வியைக் கண்டு வட்சியோ அடைதல் கூடாது. இரண்டையும் சமமாக மதிக்கும் சால்பு வேண்டும். பிறர்க்கு உறுதுணை ஆனவராய் இருத்தல் வேண்டும்.

முயற்சி திருவினையாக்கும் என்பார்கள். முயற்சியினால் விதியையும் வெல்லலாம் என்பது மேலோர் முடிபு. முன்னை நாளில் காலையில் எழுந்து தான் செய்யும் நல்லறத்தைச் சிந்திக்க வேண்டும்; தனது நிதி நிலையைச் சிந்திக்க வேண்டும்; தான் செய்யப்போகும் அலுவலைச் சிந்திக்கவேண்டும்; தாய்தந்தையரைத் தொழவேண்டும்; பின் கடமைகளில் ஈடுபடவேண்டும் என்று அறிஞர் கூறுவர். இவ்வாறாக நல்ல திட்டத்தை அவரவர் வகுத்துக் கொள்ளலாம்.

பொதுமக்கள் குறைகளை விசாரித்தறிதல், உயரதிகாரிகளைக் காணல், தன்னோடு ஒத்தவர்களோடு உசாவி அறிதல், அமைப்பு உறுப்பினரோடு அளவளாவுதல் என்றின்னோரன்ன விடயங்கள் அட்டவணையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

பிறர்க்கு உதவிபுரிதல் அன்றிப் பரிதானம் பெறுதல், பிறர் வாயிலாகப் பரிதானம் ஏற்றல் போன்ற நச்சுப்பழக்கம் கனவிலும் ஆகாது. எல்லோருடனும் இன்சொற் பேணி தான் பிறந்த பயன் பணிசெய்து கிடப்பதே என்று அருள்வாக்கைப் பேணி நடத்தல் வேண்டும்.

### 17.1. நீங்கள் கற்றவை :

1. விடாமுயற்சியுடன் தொடர்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணி செய்தவர்களுக்குச் -சிலை எழுப்புகிறார்கள்.
2. சர். பொன். அருணாசலம், சர். பொன். இராமநாதன், தேசபிதா டி. எஸ். சேனநாயக்கா முதலியவர்களின் சிலைகள் பழைய பாராளுமன்றக் கட்டடத்தின் முன் நிற்கின்றன.
3. நமது நாட்டில் பல்வேறு துறைகளிலும் முயன்று உழைத்த முன்னோடிகள் பலராவர்.
4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமிழர் கலாசாரத்தையும் தமிழ்மொழியையும் அழிவில் இருந்து பாதுகாத்தார்.
5. நீங்களும் விடாமுயற்சி உடன் செயற்பட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதைச் செய்யுங்கள்.

### 17.2. நீங்கள் கற்றவை :

1. இலங்கைத் தமிழ்ப் பெரியார்களில் சர். பொன். இராமநாதன், அருணாசலம் அவர்களும் மூதறிஞர் செல்வநாயகம் பேரறிஞர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் முதலிய பலர் அரசியலில் அறிஞர்களாகும்.
2. அறிஞர் சித்திலெப்பை முதலியவர்களின் சேவை பாராட்டற்குரியதாகும்.
3. மக்கட் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்த பெரியோர்களின் வழியில் நின்று நாமும் உழைப்போம்.

**17.3. நீங்கள் கற்றவை :**

1. முயற்சியாளர் தமது நடவடிக்கைகளுக்கு ஒரு திட்டம் வகுத்துக் கொள்வர்.
2. ஒழுக்கசீலத்தை உறுதியுடன் பேணுவர்.
3. அவர் தமக்கென ஒன்றும் சேர்த்துவைக்க மாட்டார்.
4. வெற்றி தோல்விகளில் இறுமாப்பும் சோர்வும் கொள்ளார்.
5. சிந்தித்துத் திட்டமிட்டு செயலாற்றுவர்.
6. என்கடன் பணி செய்வதே என்ற அடிப்படையில் விடாது தொண்டு புரிவர்.

### மீட்டற்பயிற்சி

**கோடிட்ட இடத்தைப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.**

i. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சிலை ................................ ................................ நிற்கின்றது.

ii. விபுலானந்த சுவாமிகள் ................................ ................................ பிறந்தார்.

iii. சோமசுந்தரப் புலவர் ................................ ................................ என்றும் அழைக்கப்படுவார்.

iv. கொழும்பு பழைய பாராளுமன்றக் கட்டடத்தின் முன் நாட்டுக்குழைத்த முன்னோடிகளின் ................................ ................................ நிற்கின்றனர்.

v. தன்னலம் அற்ற உழைப்பாளிகள் ................................ ................................ நற்பணி புரிந்துள்ளார்கள்.

**முதற்பகுதியை முடிப்பதற்குப் பொருத்தமான பிற்பகுதியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

i. அரசியல், சமயம் என்பவற்றில் பெரும்பணி செய்தவர் ................................................................

ii. பேரறிஞர்கள் மக்கள் பணியே ................................................................

iii. விடாமுயற்சியால் விதியை ................................................................

iv. அறிஞர் சித்திலெப்பை முஸ்லிம் ................................................................

v. நீங்களும் எதிர்காலத்தில் ................................................................

| |
|---|
| (அ) மகேசன் பணி எனக் கொள்வர். |
| (ஆ) முஸ்லிம் கலாசாரத்தைப் பேணிய பெரியார். |
| (இ) பெரியவர்களாக வரவேண்டும். |
| (ஈ) விதியையும் மாற்றி அமைப்பர். |
| (உ) சேர். பொன். இராமநாதனும் ஒருவர். |

**செயற்பாடு :**

i. நமது நாட்டு முன்னோடிகள் படங்களை வெட்டி ஒட்டுங்கள்.

ii. உங்களூரில் ஏதாவது ஒரு துறையில் முன்னேறிய பெரியாரின் இல்லத்துக்குச் சென்று விபரம் சேகரியுங்கள்.

# 18. எமக்குச் சேவை கிடைக்கும் வழிகள்

## 18.1. எமக்குச் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள், தனிநபர்கள் தொடர்பாக அறிந்து கொள்ளுதல்.

பிள்ளைகளே! நீங்கள் முந்திய வகுப்புக்களில் தபாலகம், வைத்தியசாலை, கூட்டுறவுச்சங்கம், கோழிப்பண்ணை முதலிய அமைப்புகள் பற்றி அறிந்திருப்பீர்கள். மேலும் கிராம சேவையாளர், குடும்ப சுகாதார உத்தியோகத்தர், விவசாயி, கடற்றொழிலாளி, நெசவாளன், தச்சுத்தொழிலாளி முதலியோர் பற்றியும் சுருக்கமாகத் தெரிந்துள்ளீர்கள்.

இப்போது தபாலகம், மருத்துவமனை, பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், தொலைத் தொடர்பு நிறுவனம் முதலிய அமைப்புகள் பற்றியும் உதவி அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் பற்றியும் நோக்குவோம்.

**தபாலகம் :** உங்கள் கிராமத்தில் / நகரத்தில் உபதபாலகம் அல்லது தபாலகம் இருக்கலாம். தபாலகத்தைத் தமிழில் அஞ்சல் அலுவலகம் என்போம். உங்கள் உறவினர்கள் வெளியூர்களில் இருந்து, கடிதம், காசுக்கட்டளை, அஞ்சற் கட்டளை, தந்திகள், பொதிகள் முதலியவற்றுள் ஏதும் ஒன்றை உங்களுக்கு அனுப்பி இருக்கலாம்.

ஒரு தபாலகத்தில் இருந்து அனுப்பப்படும் கடிதம் முதலியன தரம்பிரிக்கப்பட்டு உரிய தபாலகத்துக்கு அனுப்பப்படும். அங்கிருந்து முகவரி இடப்பட்ட தபாலகத்துக்கு அனுப்பப்படும். அங்கு அவை தெரிவு செய்யப்பட்டு உரியவர்களுக்குத் தபாற்காரர்கள் மூலம் கொண்டுசென்று கொடுக்கப்படும்.

தபாலகங்களில், முத்திரை விற்றல், காசுக்கட்டளை அஞ்சற்கட்டளை விற்றல், தொலைபேசி அழைப்புகளை ஒழுங்கு செய்து கொடுத்தல், பொதிகளை ஏற்றல், தந்தி அனுப்புதல், சேமிப்புப் பணம் பெற்று தபாற்கந்தோர் வங்கியில் வைப்புச் செய்தல், தபால்கள் தரம்பிரித்தல் கட்டுதல் முதலிய பல்வேறு பணிகள் இடம்பெறும்.

**மருத்துவமனை :** கிராமங்களில் / நகரங்களில் நோய்களுக்கு மருந்து மட்டும் தந்து சிகிச்சை அளிக்கும் அமைப்பு வைத்தியசாலை எனப்படும். மேலும் தங்கி இருந்து மருந்து பெற்று செல்வதற்கான அமைப்பு மருத்துவமனை எனப்படும். மருத்துவமனைகளில் பலவகை உண்டு. கிராம மருத்துவமனை, ஆதார மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனை, போதனா மருத்துவ மனை என்பன அவையாகும்.

**நோயாளரைப் பார்வையிடல் :** மருந்து கொடுத்தல், எக்ஸ்ரேகதிர் படமெடுத்தல், ஈ. சீ. ஜி படம் எடுத்தல், இரத்த பரிசோதனை செய்தல், மலசல பரிசோதனை செய்தல் முதலிய பல கருமங்கள் நடைபெறும். வைத்திய நிபுணர்கள், மருத்துவ கலாநிதிகள், மருந்தகர்கள், தாதியர், மற்றும் உதவியாளர் எனப் பலர் அங்கு பணிபுரிவர். பெரிய வைத்திய சாலைகளில் மார்பு, இதயம், கண், காது, பல், குடல் நோய், மகப்பேறு என்று பல பிரிவுகள் இருக்கும். இருவாரம் ஒருமாதம் முதலிய கால எல்லைகளுக்கொருமுறை "கிளினிக்கு" - பார்வையிட்டு மருந்தளித்தல் நடைபெறும். வைத்திய நிபுணரின் கீழ் இதற்கென்று குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கும். அரச மருத்துவ மனைகள் அன்றித் தனியார் மருத்துவமனைகளும் உண்டு.

**பிரதேசசெயலகம் :** இங்கு பொதுமக்களுக்கான உணவுப் பங்கீட்டு முத்திரை தொடர்பான அலுவல்கள் முதல் பல கருமங்கள் நடைபெறும். இங்கு உயரதிகாரிகளும் எழுதுவினைஞர்களும் கடமையாற்றுவர்.

**மாவட்டச்செயலகம் :** இலங்கை 25 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதை முன்பு படித்தீர்கள். இங்கு நிருவாகப் பிரிவுகள் பல இருக்கும். அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பிரதமகணக்காளர், எழுதுவினைஞர்கள் முதலாகப் பலர் கடமை ஆற்றுவர். முன்னாளில் இவ்வமைப்பு கச்சேரி எனப்பட்டது.

**தொலைத்தொடர்பு நிறுவனம் :** பிள்ளைகளே உங்கள் குடும்ப உறுப்பினர்கள் யாரும் இலங்கைக்கு வெளியே இருக்கலாம். அவர்களுடன் கடிதமூலம் தொடர்புகொள்ள அதிக நாள்கள் எடுக்கும். இப்போது நாட்டின் பல பாகங்களிலும் தனியார்களும் அரசார்களும் தொலைத்தொடர்பு நிலையங்களை வைத்து நடத்துகிறார்கள். குறிப்பிட்ட ஒருவர் பாரிசு நகரில் இருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுவோம். நகரத்தில் உள்ள தொலைத் தொடர்பு நிலையத்துக்குச் சென்று அவருடன் பேச நாம் ஓர் அழைப்பை எடுக்கலாம். தொடர்புகொண்டு அவர் நேராக எம்முடன் கதைப்பது எதிர்வரும் காலத்தில் தொலைபேசி மூலம் பேசுபவரின் முகத்தைக்கூடப் பார்க்கும் அளவுக்குத் தொலைத் தொடர்புச் சேவை வித்தரிக்கப்படுமாம்.

**வங்கிகள் :** நமது நாட்டில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, செலான் வங்கி முதலிய பல வங்கிகள் செயலாற்றுகின்றன. அவற்றில் ஏதாவது ஒன்று உங்கள் நகரத்தில் இருக்கலாம். வங்கியிலே சேமிப்பு நடத்தலாம். காசோலைகளை மாற்றலாம். நீங்கள் உங்கள் அயலில் உள்ள வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை வைத்துக் கொள்ளுங்கள்.

## 18.2. சேவை வழங்கும் செயல் வழிகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்.

முன்பு ஒவ்வொரு மாவட்டங்களிலும் செயலகங்கள் உண்டென்று படித்தோம் அல்லவா? மாவட்டத்து அலுவல்கள் நடைபெறும் இடம் தமிழில் “செயலகம்” என்று சொல்லப்படும். அதுவேதான் கச்சேரி. கச்சேரியில் நடைபெறும் அனைத்து அலுவல்களுக்கும் அரச அதிபரே பொறுப்பாக இருக்கின்றார். அங்கு பலபல திணைக்களங்கள் உண்டு. அவற்றிற்கு உயரதிகாரிகள் உளர்.

கச்சேரியில், கலைகலாசாரம், ஓய்வூதியம், நிதி, விவசாயம் என்று இன்னும் பல்வேறு பிரிவுகளும் இருக்கின்றன. கணக்காளரே நிதிப்பகிர்வுக்குப் பொறுப்பாளராய் உள்ளார். வரவேற்பு இடம் இருக்கும். அங்குள்ள அதிகாரியிடம் எமது தேவையைக் குறிப்பிட்டால் உரிய பிரிவுக்கு அவர் எங்களை வழிப்படுத்தி விடுவார். பிறப்புப்பதிவு செய்யவேண்டுமா? பிறப்புச்சான்றிதழ் பெறவேண்டுமா? உரியவர்கள் அவ்வவ்விடங்களுக்குச் செல்லவேண்டும். கிராம சேவகர் எமது தேவைகளை எழுத்தில் தருவார். அவற்றை நாம் கச்சேரியில் உரியவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் மருத்துவமனைகள் இருக்கின்றனவே அவை உள்ளூராட்சி அமைப்பின் கீழ் செயற்படுவன சில. நேரே மத்திய அரசின் கீழ்ச் செயற்படுவன சிலவுள.

பொலிசு நிலையம் மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கின்றது. நம் நாட்டில் தனியார் மருத்துவ மனையும் மகத்தான தொண்டைப் புரிந்து வருகின்றன.

விபத்து ஆபத்துகளின் போது, உதவியும் ஒத்துழைப்பும் நல்கும் அமைப்புகளும் உண்டு.

## 18.3. இதில் ஒருவருக்கு ஒப்படைக்கப்படும் வேலையை பொறுப்புடன் நிறைவேற்றுதலின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல்.

ஒவ்வொரு நிறுவனத்திலும், பல்வேறு ஊழியர்கள் கடமை புரிகின்றனர். தத்தமக்கு விதிக்கப்பட்ட கடமையை நன்கு நிறைவேற்றுவதில் இன்பம் காணவேண்டும். தமக்குள்ள

உரிமைகளை அனுபவிக்க விரும்பும் ஒருவர் தமக்குள்ள கடமைகளையும் பேணுதல் அவசியம் அல்லவா?

நிறுவனங்களில் கடமைபுரியும் அலுவலர், தாம் பொதுமக்களின் ஊழியர்கள் என்ற குணப்பண்பை வளர்த்தல் வேண்டும். மேற்கு நாட்டுத் தூதரகத்திற்கு நண்பர் ஒருவர் ஒரு தேவைக்குச் சென்றிருந்தாராம். அங்கு அமர்ந்திருந்த அதிகாரி "உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று வினவினாராம். இருக்கையில் அவரை அமரவைத்து விரிவாக விசாரித்து தேவையைக் கேட்டறிந்து அதனை நிறைவு செய்யவேண்டிய நபரை வருவித்து நிறைவேற்றி உதவினாராம். இந்த மனப்பக்குவம் நிறுவனங்களில் வசிக்கும் ஒவ்வொரு பணியாளர்களிடையேயும் வளரவேண்டும்.

எந்த நிறுவனங்களில் கடமை புரியும் எவரும், தங்களிடம் ஒரு கருமங் காரணமாகச் சந்திக்கச் சென்றால், ஏதோ இளக்கமானவர் என்று இகழ்ந்து வாளா இருப்பதைக் காண்கின்றோம்.

எல்லோரும் அல்லர், ஒருசிலர் கையூட்டுக்கூடக் கேட்பது நம்நாட்டு அலுவலகங்களில் சாதாரணமாகி விட்டதென்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

எவரும் தமக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை கட்டுப்பாடு, கண்ணியம் என்பவற்றுடன் செய்து கொடுத்து இன்பங் காணவேண்டும்.

"அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே"

என்பது பெரியோர் வாக்கு.

### 18.4. சேவை வழங்குதல் காலத்திற்குக் காலம் மாற்றம் அடையும் விதம் தொடர்பாக கவனத்தை ஏற்படுத்திக் கொள்ளல்.

முன்பெல்லாம் நமது கிராமங்கள் கோயிற்பற்று என்று பிரிக்கப்பட்டிருந்தன. பின்பு அவை இணைக்கப்பட்டன. மணியகாரர்களுக்குப் பதிலாகக் காரியாதிகள் நியமிக்கப்பட்டனர். காரியாதிகாரிகள் D. R. O என்று வழங்கப்பட்டனர். இப்போது அவை மாற்றமடைந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகவும், ஏன் தேர்தல் தொகுதி வாரியாகவும் கூட நிலவின. இப்போது பிரதேச சபைகளாக இருக்கின்றன. மாவட்டச் செயலகங்களில் அரசாங்க அதிபர்கள் கடமை புகின்றனர்.

பெரும்பாலும் நாம் ஒரு தேவையை நிறைவேற்ற வேண்டுமாயின் எமக்கும் மேலிடத்துக்கும் ஊடகமாகத் - தொடர்பாளராக - கிராமசேவையாளரே விளங்குகின்றார்.

கிராம சேவையாளர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன உடையவராய் இருத்தல் அவசியமாகும். முன்பு பல கருமங்களை நேரடியாகவே உயரதிகாரிகளிடம் சமர்ப்பிக்கக் கூடியனவாக இருந்தன. இன்று பெரும்பாலும் அடிமட்டத்தில் கிராமசேவகரிடம் இருந்தே பெரும்பாலான கருமங்கள் மேலெடுத்துச் செல்லவேண்டி உள்ளன.

### 18.1. நீங்கள் கற்றவை :

1. எமக்குப் பல நிறுவனங்களும் தனிநபர்களும் சேவை வழங்குகின்றன.
2. அவற்றுள் தபாலகம், மருத்துவமனை, பிரதேசச் செயலகம், பொலிசு நிலையம், மாவட்டச் செயலகம், தொலைத் தொடர்பு நிலையம், செஞ்சிலுவைச் சங்கம் முதலியன ஒருசிலவாகும்.

3. தனிநபர் என்ற வகையில், கிராமசேவையாளர், உதவி அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் முதலியோரைக் குறிப்பிடலாம்.
4. தபாலகங்களில், கடிதம் ஏற்றல், விநியோகித்தல், காசுக்கட்டளை, அஞ்சற்கட்டளை விற்றல், தந்தி, தொலைபேசிச் சேவைகள் என்பன நடைபெறுகின்றன.
5. மருத்துவமனைகள், சில வைத்தியசாலைகள், சில ஆதார வைத்தியசாலைகள் மற்றும் சில மாவட்ட மருத்துவமனைகள், போதனா மருத்துவமனைகள் என்று பலதரங்கள் உண்டு.
6. வைத்திய சாலையில் நோயாளரைப் பார்வையிட்டு மருந்து மட்டும் கொடுக்கப்பட்டு மருத்துவமனைகளில் தங்கி இருந்து சிகிச்சை பெறலாம்.
7. பிரதேச செயலகங்களில் உணவுப்பங்கீட்டட்டை மற்றும் விவகாரங்களை விசாரித்துப் பெறலாம்.
8. கச்சேரிகள் எனப்படும் மாவட்டச் செயலகங்களில் எமது வாழ்வுக்குரிய பலதுறைப்பட்ட சேவைகளையும் பெறலாம்.
9. தொலைத்தொடர்பு நிறுவனங்களில் உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகள் முதலியவற்றைப் பெறலாம்.
10. வங்கிகளில் பணத்தை வைப்புச் செய்தல், மீளப் பெறுதல், கடன்வசதி முதலியன உண்டு.

**18.2. நீங்கள் கற்றவை :**

1. மாவட்டச் செயலகத்தில் பல்வேறு பிரிவுகள் உண்டு.
2. நிதி, விவசாயம், கலைகலாசாரம், ஓய்வூதியம் என்பன அவற்றுட் சிலவாம்.
3. கச்சேரியில் வரவேற்பு இடத்துக்குச் சென்று எங்கள் தேவை குறித்து விசாரணை செய்தல் வேண்டும். எங்களை அங்குள்ளவர் உரிய பகுதிக்கு நெறிப்படுத்தி விடுவார்.
4. உரிய பிரிவுடன் தொடர்பு கொண்டு அலுவல்களை நிறைவேற்றலாம்.
5. சில தேவைகளுக்கு கிராமசேவை அலுவலர், பிரதேசசபை அலுவலர்கள் சிபாரிசு வேண்டும்.
6. மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பகுதியில் காட்டி மருந்து பெறலாம். தேவை ஏற்படின் தங்கியிருந்து சிகிச்சை பெற உரிய பிரிவுக்கு "வார்ட்டுக்கு" அனுப்பிவைப்பார்கள். அங்கு சிகிச்சை கிடைக்கும்.
7. பொலிசு நிலையத்தில் "புகார்கள்" பதிவுசெய்து வைக்கலாம். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

**18.3. நீங்கள் கற்றவை :**

1. ஒவ்வொரு நிறுவனத்திலும் பல்வேறு தரங்களில் உள்ள ஊழியர்கள் கடமையாற்றுவர்.
2. ஊழியர்கள் தாம் பொதுமக்களுக்கும் கடமை புரியவேண்டியவர்கள் என்பதனை நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.
3. கருமங்களைத் தவணை போடாது உடனுக்குடன் செய்துதர வேண்டும்.
4. கண்ணியம், கடமை, கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும்.

**18.4. நீங்கள் கற்றவை :**

1. முன்பு சிறு பிரிவுகள் பல இணைந்து காரியாதிகாரி பிரிவு என அழைக்கப்பட்டன.
2. இப்போது அவை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகி உள்ளன.
3. புதிதாகப் பிரதேச செயலகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.
4. எல்லாப் பகுதிகளும் மாவட்டம் என்னும் பெரும்பகுதியுள் அடக்கப்படும்.
5. முழு இலங்கையிலும் 25 மாவட்டங்கள் உண்டு. அவற்றை இலங்கைப் படத்தில் காணலாம்.

## மீட்டற்பயிற்சி

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i. கிராம வைத்தியசாலையில் ...................................... மட்டும் கிடைக்கும்.

ii. கண்ணன் மாவட்ட வைத்தியசாலையில் ...................................... பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றான்.

iii. அண்ணா தொலைத்தொடர்பு நிலையத்துக்குச் சென்று பாரிசுக்கு ...................................... அழைப்பு எடுத்தார்.

iv. எமது தந்தையார் மாவட்டச் செயலகத்தில் ...................................... ஆகக் கடமையாற்றுகிறார்.

v. பொலிசார் ...................................... போது உதவிபுரிவர்.

vi. சிலர் ஒரு கடமையை நிறைவேற்ற ...................................... வாங்குகிறார்கள்.

**விடை கூறுக.**

i. தபாலகத்தில் நடைபெறும் அலுவல்கள் இரண்டு :

...................................... ...................................... ......................................

ii. நகரத்தில் உள்ள வங்கிகள் இரண்டின் பெயர் :

...................................... ......................................

iii. பிரதேச செயலகத்தில் நடைபெறும் வேலை இரண்டு :

...................................... ......................................

iv. வைத்திய கலாநிதி ஒருவரின் இரு பணிகள் :

...................................... ......................................

v. இரண்டு மாவட்டங்களின் பெயர் தருக :

...................................... ......................................

**பொலிசு நிலையத்தைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.**

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

**செயற்பாடு :**

i. பிரதேச காரியாலயத்தில் நடைபெறும் அலுவல்களைச் சென்று பார்வையிடல்.

## 19. சனசமூக அமைப்புகள்

### 19.1. மக்களின் பொது நன்மைக்காக மனிதர்கள், சங்கங்கள், மன்றங்கள் ஒழுங்கமைப்புகள் என்றவாறு ஒன்றுகூடுகின்றனர் என அறிந்துகொள்ளல்.

பிள்ளைகளே! உங்கள் பாடசாலையில், மாணவர் சங்கம் இருக்கலாம். அச்சங்கத்தின் கூட்டம், மாதத்துக்கு ஒரு தடவையோ அன்றி இரு தடவையோ நடைபெறலாம்.

அச்சங்கத்துக்கு, காப்பாளர், தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் என்றின்ன பல அலுவலர்கள் இருக்கலாம். மாணவர் சங்கம், உங்களிடையே பேச்சுவன்மை, நடிப்புத்திறமை, இசைக்கலை மேம்பாடு, எழுத்தாற்றல், கற்பனைவளம் என்பவற்றை வளர்ப்பதற்குப் பல சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. சந்தர்ப்பங்கள் மூலம் வளர்கின்றீர்கள்.

இவ்வாறே, பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு மாணவர் சங்கம், உயர்வகுப்பு மாணவர் சங்கம், சமூகவியல், புவியியல் முதலிய பாடவகைகளுக்காய சங்கம் முதலிய பல அமைப்புகள் இயங்கும்.

நகரம் முதலியவற்றிலும், கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சைவசமய முன்னேற்றச் சங்கம், இலக்கியமன்றம், நல்லொழுக்க சங்கம் முதலிய பல அமைப்புக்கள் இருக்கலாம்.

ஒவ்வொரு சங்கத்துக்கும் தலையாய நோக்கம் இருக்கும். அந்த நோக்கம் கொண்ட பலர் கிராமத்தில் / நகரத்தில் இருக்கலாம். அவர்கள் ஒன்றுகூடி ஒரு சங்கத்தை அமைக்கலாம். சமயப்பற்று மிக்க இளைஞர் பலர் இருக்கலாம். அவர்கள் ஒன்றுகூடிச் சமய முன்னேற்றச் சங்கத்தை அமைக்கலாம். விளையாட்டுத் துறையில் ஆர்வமுடையவர் விளையாட்டுப் பயிற்சி மன்றம் என்னும் பேரில் சங்கத்தை அமைக்கலாம். முன்பு கூறியது போலக் காப்பாளர், தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் முதலிய பல உத்தியோகத்தர் அவற்றிற் கடமை புரிவர்.

ஒவ்வொரு சங்கமும் தமக்கென ஓர் ஒழுக்கக் கோவையை அமைத்து உறுப்பினர்களின் ஒற்றுமையுடன் ஓர் யாப்பை அமைத்து அதன்படி ஒழுகிவரும்.

சங்க உறுப்பினர்கள் ஆண்டு நிறைவில் புதுவருட உத்தியோகத்தரைத் தெரிவு செய்வர். அதனால் பலருக்கு தலைவர் முதலிய பதவிகளை வகித்து அனுபவத்தை வளர்க்க முடிகின்றது. மேலும் ஆண்டு விழாக்களை நடத்துவர். அதில் சமய சமூக கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் அவ்விழாக்களால் ஆற்றல் அனுபவங்கள் பெருகும்.

**கிராம முன்னேற்றச் சங்கம் :** இது கிராம மக்களின் வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு உழைக்கின்றது. அவை செய்யும் நன்மைகள் என்ன? எமது பங்களிப்பென்ன என்று நாம் அறிதல் வேண்டும். இது கிராமத்து மக்களின் நன்மைக்காகக் கிராமத்து மக்கள் ஒன்று சேர்ந்து அமைக்கும் சங்கமாகும். எல்லாக் கிராமங்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில கிராமங்கள் வசதி வாய்ப்புகள் அற்றும் இருக்கலாம்.

நல்ல வீதிகள், தபாலகம், புகைவண்டி நிலையம், மருத்துவமனை, தண்ணீர்வசதி, சந்தைவசதி முதலியன இன்றியும் இருக்கலாம். அவற்றை உண்டுபண்ண அரசின் உதவியுடன் இவ்வமைப்பு முயற்சிக்கலாம். கிராம முன்னேற்றச் சங்கம் செய்யும் வேலைகளுக்கு உதவிபுரிய அரசு பல உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது. அவர்களுடன் சேர்ந்து இயங்கி பல நன்மைகளைப் பெற்றுக் கிராமத்தை மேல்நிலைக்குக் கொண்டுவரலாம்.

**சனசமூக நிலையம் :** மக்கள் பலர் ஒரு பொதுவான இடத்தில் ஒன்றுகூடி அரசியல் அபிப்பிராயங்கள், வானொலிச் செய்திகள், சங்கீதம் முதலியவற்றில் தனிப்பட்ட செலவின்றி அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக நூல் நிலையத்துடன் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். உங்கள் கிராமத்தில் இவ்வித அமைப்பு இருக்கலாம்.

அதை ஒழுங்காக நடத்த பலர் ஒன்றுகூடி ஆண்டுதோறும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதை நீங்கள் அறிந்திருக்கலாம். ஒரு குறிப்பிட்ட அளவுகள் தான் சேர்த்துத் தேவைகளுக்குப் பயன்படுத்துவர்.

உங்கள் கிராமத்தில் உள்ள பலதிறப்பட்ட சங்கங்கள் சபைகளை விசாரித்தறிந்து எழுதிக் கொள்ளுங்கள்.

## 19.2. சங்கங்கள் மன்றங்கள் என்பனவற்றின் நிலைத்திருத்தலுக்கு உறுப்பினர்களின் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளல்.

முன்பு சங்கம், மன்றம் முதலியவற்றின் ஒழுக்கக்கோவை, யாப்பு என்று அழைக்கப்படும் எனப் படித்தீர்கள். ஒவ்வொரு சங்கம், மன்றம், நிறுவனம் தனித்தனியாக யாப்பினை வைத்திருக்கின்றன. அதில் சங்கத்தினது நோக்கம், நோக்கத்தை அடைய மேற்கொள்ள வேண்டிய வழிகள், காப்பாளர், தலைவர், உள்ளிட்ட அலுவலர்கள், பணிகள் முதலியனவெல்லாம் விதந்துரைக்கப்பட்டிருக்கும். அன்றியும் ஆண்டிறுதியில் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுதல் மேலும் ஆண்டிறுதிக் கூட்டம், ஆண்டுவிழா முதலியனவும் தெரிவிக்கப்பட்டிருக்கும். யாப்பு விதிக்கு உட்படாமல் நடப்பவர்களை அதில் இருந்து விலக்குதல் முதலிய விபரங்களும் இருக்கும்.

ஒரு கிராமத்தில் / நகரங்களில் சங்கங்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உண்டு என்று அறிந்தோம். சில சந்தர்ப்பங்களில் காளான் செடிகள் போலச் சில சங்கங்கள் தோன்றும். ஒரு சில ஆண்டுகளில் தேவைகள் நிறைந்ததும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். அவற்றின் சொத்துக்கள் தளபாடங்கள் எல்லாம் தலைவர், செயலாளர் பொருளாளர்களிடம் அடங்கிவிடும்.

சில சங்கங்கள் நல்ல நல்ல பணிகளை நடத்திக் கொண்டிருக்கும். தலைவர் முதலியவர்களின் திறமை, உழைப்பு முதலியன மக்களுக்கு நன்கு பயன்படும். பிறர் புகழைக் காணச் சகிக்காதவர் தலைவர், செயலாளர்களை அகற்றச் சூழ்ச்சி செய்வர். அதனால் மக்கள் பெறவிருக்கும் நற்பயன்கள் இல்லாது போய்விடும்.

மேலும் ஏதோ முரண்பாடுகள் காரணமாக ஒரு சங்கத்தில் இருந்து உறுப்பினர் சிலர் பிரிந்து சென்று போட்டிச் சங்கம் அமைப்பர். அச்சங்கம் குறுகிய வாழ்வுடன் மடிந்து விழுவதும் உண்டு.

" ஒற்றுமையே உயிர் நாடி " என்பது பழமொழி; உறுப்பினர்கள் எந்த நிலையிலும் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை பெருகவேண்டும். ஒற்றுமையில்லாக்குடி ஒருமிக்கக் கெடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

" அடம்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு " என்பதற்கிணங்க ஒருமித்த மனத்துடன் சங்கத்தை வழிநடத்திச் செல்லவேண்டும். அப்போதுதான் அந்தச் சங்கம் பல்லாண்டு நின்று நிலவி மக்களுக்கு, சமூகத்துக்கு நற்பணி புரியும்.

**19.1. நீங்கள் கற்றவை :**

1. யாதாயினும் ஒரு அமைப்புக்கு காப்பாளர், தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர், உறுப்பினர் எனப்பலர் இருப்பர்.
2. நீங்களும் பலர் சேர்ந்து உறுப்பினர்களாகித் தலைவர் முதலிய உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்து ஒரு சங்கத்தை உண்டாக்கலாம்.
3. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பேச்சு வன்மை, நடிப்புத் திறமை முதலிய பல திறமைகளை வளர்க்கலாம்.
4. கிராம முன்னேற்றச் சங்கம் கிராமத்தவர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் அமைப்பாகும்.
5. சமயம், மொழி, கலை முதலிய பல்வேறு விடயங்களுக்கும் முயற்சி செய்பவர்.

**19.2. நீங்கள் கற்றவை :**

1. பலபல காரணங்களை முன்னிட்டு நகரங்களில் / கிராமங்களில் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.
2. சில சங்கங்கள் குறுகிய ஆயுளுடன் மறைந்து விடுகின்றன.
3. அச்சங்கங்களின் நிதி, தளபாடம் முதலியவற்றை ஒருசிலர் தமது ஆக்கிக் கொள்ளுகின்றனர்.
4. சில சங்கங்கள் நெடிது பல்லாண்டு நின்று மகத்தான பணிகளை இயற்றுகின்றன.
5. சில இடங்களில் போட்டிச் சங்கங்கள் கூட உண்டு.
6. ஒற்றுமையே உயிர்நாடி என்று உழைத்தால் முன்னேற்றம் அடையலாம்.

### மீட்டற்பயிற்சி

**சரியாயின் சரி என்பதன் கீழும் பிழையாயின் பிழை என்பதன் கீழும் கீறிடுக.**

i. உயர்தரக் கல்லூரிகளில் சமூகவியல் முதலிய பாடங்களுக்குக் கூடச் சங்கங்கள் இருக்கின்றன. (சரி / பிழை)

ii. புதுவருட உத்தியோகத்தர்கள், ஆண்டு விழாவின்போது தெரிவு செய்யப்படுகின்றனர். (சரி / பிழை)

iii. ஒரு சங்கம் நிலைக்க வேண்டுமாயின் உறுப்பினர்களின் ஒற்றுமை தேவையில்லை. நல்ல மூலதனம் இருந்தாற் போதும். (சரி / பிழை)

iv. ஒரு சங்கத்தின் ஒழுக்கக்கோவை அதன் தொடக்கக் கூட்டத்தில் பொதுச்சபையால் நிறைவேற்றப்பட்டிருக்கும். (சரி / பிழை)

v. பொதுக்கூட்டங்களுக்குத் தலைவர் சமூகம் தந்து தலைமை வகிப்பர். (சரி / பிழை)

**செவ்விய விடையைத் தெரிவுசெய்க.**

i. மாணவர்சங்க வளர்ச்சிப் பணிகளுள் ஒன்று :
(1) பெற்றோரை மகிழ்வித்தல்.
(2) ஆசிரியர்களை மகிழ்வித்தல்.
(3) பேச்சுவன்மையை மாணவர்களிடை வளர்த்தல்.

ii. நூல்நிலையங்களைக் கிராமங்களில் பராமரிக்கும் அமைப்பு :
(1) சனசமூகநிலையம் (2) இடம்பெயர்ந்தோர் கழகம் (3) தொண்டர்சபை

iii. ஒரு சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்வர் :
(1) முதியோர் (2) செயலாளர் (3) கணக்காய்வாளர்

iv. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கடமை :
(1) ஆசிரியர்களை நேரத்துக்கு வரச்செய்தல்.
(2) வளர்ந்துவரும் நிலைக்கு ஏற்பக் கட்டடம், தளவாடம் முதலியவற்றைப் பெறும் முயற்சிகளைச் செய்தல்.
(3) தவணைப் பரீட்சைகளை நடத்துதல்.

**ஒரு சங்கச் செயலாளரின் கடமைகளைக் குறித்து 5 வசனம் எழுதுக.**

............................................................................................................................................................

............................................................................................................................................................

............................................................................................................................................................

............................................................................................................................................................

............................................................................................................................................................

**செயற்பாடு :**

i. மாணவர் குழுக்களாக அமைந்து ஒரு சங்கத் தலைவரைத் தெரிவுசெய்தல்.

ii. உமது கிராமத்தில் உள்ள சங்கங்களின் பெயர்களை விசாரித்தறிதல்.

# 20. அபிவிருத்தி

## 20.1. தமது பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டமொன்றை ஆராய்வதற்கு வழிப்படுத்தல்.

பிள்ளைகளே! உங்கள் பாடசாலையைப் பாருங்கள். அது முன்பு சிறிய கட்டடம் ஒன்றைக் கொண்டிருந்தது. சிறு தொகையினரான மாணவர் அங்கு கல்வி கற்றனர். இப்பொழுது பல கட்டடங்கள் எழுந்து நிற்கின்றன. அதிக எண்ணிக்கையினரான மாணவர் கல்வி கற்கின்றனர். கூடிய தொகையினரான ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இப்போது பாடசாலை அபிவிருத்தி அடைந்துள்ளது என்கிறோம்.

கிராமம் / நகரம் / நாடு என்பவற்றைப் பாருங்கள். சில அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. சில அபிவிருத்தி அடைந்துள்ளன. ஒரு கிராமத்தை எடுத்துக் கொள்ளுவோம். வீதியமைப்பு, மின்சாரம், சந்தை, நெசவு நிலையம் முதலியன எல்லாம் அமைந்திருக்கலாம். ஏன் தொலைபேசி, போக்குவரத்துச் சேவை முதலிய அனைத்தும் இருக்கலாம். அவ்வளவில் அபிவிருத்தி அடைந்தது என்பதற்கில்லை. மக்களின் நல்வாழ்விலேயே அபிவிருத்தி தங்கியுள்ளது.

உங்கள் கிராமத்தில் ஒரு புதிய வீதி அமைக்கும் திட்டம் ஒன்றுக்குத் தொடக்க விழா அழைப்பு உங்கள் தந்தையாருக்கு வந்திருப்பதாக வைத்துக் கொள்வோம். விழாத் தொடக்க விழாவன்று நீரும் உமது தந்தையாருடன் செல்கின்றீர். நீர் அங்கு எவற்றைக் கண்டீர்.

அரச அதிகாரி வந்திருப்பார். ஊர்ப்பிரமுகர்கள் வந்திருப்பார்கள். சிரமதானத் தொண்டர்கள் ஒருபுறம் அணிவகுத்து நிற்பார்கள். சிற்றுண்டி, பானவகை தந்து உபசரிக்கும் குழுவினர் நிற்பார்கள். மேலும் காணி உரிமையாளர்கள், கருவிகள் சுமப்பவர்கள் என்றெல்லாம் பலதரப்பினர்களைக் காணலாம். உரிய முகூர்த்தம் வந்ததும் அரச உத்தியோகத்தரும் உள்ளூர்ப் பிரமுகர்களும் மரங்களை வெட்டி வீதியைத் திறக்கும் பணியினைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பர். பின்னர் சிரமதான உறுப்பினர் குழுக்குழுவாகத் தொழில் செய்வதனைக் காண்பீர்கள். இவ்வாறே வேறுவேறு செயற்றிட்டங்களுக்கும் விழாக்கள் நடக்கக்கூடும். அவற்றைக் கண்டு உங்கள் பயிற்சிக் கொப்பிகளில் எழுதிக் கொள்ளுங்கள்.

## 20.2. தமது பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளினால், ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக விசாரித்தறிதல்.

முன்பு பிரதேசம் என்பது கிராமம் / நகரம் முதலியவற்றை உள்ளடக்கிய பெரும்பகுதி என்று படித்துள்ளீர்கள். அபிவிருத்தி என்பது பெரும்பாலும் பொருளாதார வளர்ச்சியைக் குறிக்குமேனும் மேலும் பரந்துபட்ட பொருளை உடையது.

அதாவது தெளிவாகக் கூறுவதானால், அது பொருளாதாரம், சமூகம், கலாசாரம் போன்ற பல்வேறு கூறுகளின் முன்னேற்றத்தின் மூலம் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சிறந்த நல்வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக்கொடுப்பது என்று சொல்லலாம்.

மேலும் சமூக அபிவிருத்தி, உணவு, உடை, வீடுவாசல் போன்றவற்றுடன் சுகாதாரம், கல்வி, தொழில்வாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு, மனித சுதந்திரம், கலாசார மேம்பாடு முதலிய கூறுகளில் எல்லாம் முன்னேற்றம் காணப்பட வேண்டும்.

அபிவிருத்தித் திட்டத்தினால் சுற்றாடல் தாக்கத்துக்கு உள்ளாகின்றது. முன்னர் அதனைப்பற்றிப் படித்திருக்கின்றோம். மீட்டும் தெரிந்து கொள்ளுவோம்.

வளர்ச்சி அடைந்த பிரதேசத்தில் சனத்தொகை கூடி இருக்கும். அதனால் சூழலில் கழிவுப் பொருள்கள் பெருகும். வளி மாசு அடையும். நீர் மாசு அடையும். குப்பைகூளங்களை அப்படியே தள்ளிவிடலாகாது. அவற்றைப் பயனுள்ளனவாக மாற்றவேண்டும்.

தொழிற்சாலைக் கழிவுநீரை இரசாயனப் பொருள்களைக் கொண்டு நச்சை நீக்குதல் வேண்டும். புகையில் உள்ள தீய கூறுகளை அழிக்கவேண்டும்.

தொழில்நுட்ப முன்னேற்றம் - அபிவிருத்தி இவற்றின்போது கலாசார பாரம்பரியங்கள் பாழடையும். அவ்விதம் விடாமல் அவற்றைப் பாதுகாக்கும் முயற்சியிலும் ஈடுபடவேண்டும்.

**20.3. அபிவிருத்தி நடவடிக்கைகள், பிரதேசத்தின், மனித வாழ்க்கைக் கோலத்தை மாற்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் முறையினைத் தேடி அறிதல்.**

இயற்கையை நேசித்து வாழ்ந்த மனிதன் அபிவிருத்தி நடவடிக்கைகளால், செயற்கை வாழ்வின் பிடிக்குள் அகப்பட்டுத் தவிக்கின்றான். இயற்கையை விட்டு வெகுதூரம் விலகிச் செல்கின்றான். செயற்கையால் தூயவளி, தூயநீர் முதலியன மாசடைதலை முன்பு படித்தோம். பாவம் மனிதன் இன்று அசுத்தமான வளியையும் அசுத்தமான நீரையும் உட்கொள்ளவேண்டி வந்துவிட்டது.

தூய காற்றோட்டமும் சூரிய ஒளியும் நிறைந்த இல்லங்களில் கிராமத்தில் வாழ்ந்த அவன் இன்று அவை கிடைக்காதவனாய்த் திகைக்கின்றான்.

தொழில்நுட்ப வசதியால் மின்சத்தியே அவனுக்கு உறுதுணையாகிவிட்டது. மின்விளக்கு, மின்விசிறி, மின்அடுப்பு இவை அவனுடைய நாளாந்த வாழ்வில் இடம்பிடித்துக் கொண்டன. மின்சத்தி நின்றுவிட்டால் வாழ்க்கைநிலை ஸ்தம்பிக்கும் பான்மை உண்டாகிவிட்டது.

மரநிழலில் ஓய்வு நேரத்தைக் கழித்தான், ஓடியாடினான். நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தான். மரங்கள் காபனீரொட்சையிட்டை உறிஞ்சுவது குறித்து முன்பு படித்தீர்கள்.

இப்போது நுகர்பொருள் உற்பத்திகளைப் பெருக்க இரசாயனப் பொருள்களை உபயோகிப்பது சர்வசாதாரணமாகி விட்டது. அதனால் ஏற்படும் பக்க விளைவுகளோ அநந்தம்! அநந்தம்!!

அபிவிருத்தி காரணமாகப் போக்குவரத்து வசதிகள் பெருகிவிட்டன. முன்பெல்லாம் பலமைல் தூரம் நடந்து உடலுரம் பெற்றவன் இன்று சிலமைல் கூட நடக்கமாட்டானாய் இருக்கின்றான். போக்குவரத்துச் சாதனங்களையே நம்பி வாழ்கின்றான். வண்டி வாகனங்களின் புகை, தூசு முதலியவற்றால் சூழல் மாசடைவதை முன்பு படித்தோம்.

தூயநீர், மோர் முதலியவற்றைப் பருகியவன் இன்று புதியபுதிய பானங்களை அருந்தி அவற்றால் அவஸ்தை உறுகின்றான். உணவு, உடை, பழக்கவழக்கம், மனிதநேயம் எல்லாம் மாற்றமடைகின்றன.

முன்பெல்லாம் விசாலமான தனிவீடுகளில் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தவன் தொடர்மாடிகளில் செயற்கையுடன் வாழ்ந்து சிறுமைப்படுகின்றான்.

**20.1. நீங்கள் கற்றவை :**

1. பாடசாலை அபிவிருத்தி, மாணவர் தொகை, ஆசிரியர் தொகை முதலியவற்றில் மட்டும் தங்கி இருக்கவில்லை.
2. வகுப்பறை, விளையாட்டிடம், ஆய்வுகூடம், நூல்நிலையம் முதலியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. அவற்றுடன் அங்கு கல்விகற்கும் மாணவர்களின் சித்திப்பேறும் நன்கு இருத்தல் வேண்டும்.
4. ஒரு அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்கும்போது பலருக்கும் அழைப்பு அனுப்புவர்.
5. தொடக்கவிழாவில் அதிகாரிகளும் ஊர்ப்பிரமுகர்களும் கலந்துகொள்வர்.
6. உரிய முகூர்த்தத்தில் அதனைத் தொடங்குவர்.

**20.2. நீங்கள் கற்றவை :**

1. அபிவிருத்தியில் பொருளாதார வளர்ச்சி மையமாக இருத்தல் வேண்டும்.
2. சமூகம், கலாசாரம் போன்ற பிறதுறைகளும் வளர்ச்சி பெறவேண்டும்.
3. தனிமனித சுதந்திரம், சமூகப்பாதுகாப்பு முதலியன பேணப்பட வேண்டும்.
4. அபிவிருத்தியினால் ஏற்படும் சூழல் தாக்கங்களும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
5. சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கான வழிகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.
6. அபிவிருத்தி என்ற வகையில் சமய கலாசார பாரம்பரியங்களுக்குச் சீர்குலைவு உண்டாகாவண்ணம் பேணப்பட வேண்டும்.

**20.3. நீங்கள் கற்றவை :**

1. மனிதன் முன்பெல்லாம் இயற்கையை நேசித்து வாழ்ந்தான்.
2. இன்று செயற்கை வாழ்வில் வெகுதூரம் வந்துவிட்டான்.
3. வான் (ஆகாயம்) வளி (காற்று) நீர் முதலிய எல்லாமே மாசடையத் தொடங்கிவிட்டன. (மாசு - அழுக்கு)
4. மின்சத்தியிலே முழுவதும் தங்கி உள்ளது; அது பிழைத்துவிட்டால் செய்வது அறியாமல் தவிக்கின்றான்.
5. உணவு, வாழ்வு எங்கும் செயற்கை இடம்பிடித்து விட்டது.
6. புதிய ஊக்குவிப்புப் பானங்கள் நன்மை தரப்போவதில்லை.
7. மனித நேயம் கெட்டழிந்து போய்க்கொண்டு இருக்கின்றது.
8. இயற்கையோடு இணைந்த வாழ்வு மலரவேண்டும்.

### மீட்டற்பயிற்சி

**புள்ளிக்கோட்டில் மிகவும் பொருத்தமானவற்றைத் தெரிந்தெடுத்து எழுதுக.**

i. இக்காலத்தில் நவீன வசதிகள் ..............................

ii. உள்ளூர்ப் பிரமுகர்களும் உயர் அதிகாரிகளும் ..............................

iii. அபிவிருத்தி என்பது ..............................

iv. பண்டைய மக்கள் இயற்கையுடன் ..............................

v. இன்றைய மனிதனுக்குப் பலதுறைகளிலும் ..............................

(அ) இணைந்து வாழ்ந்தான்.
(ஆ) மின்சக்தியே பெரிதும் உதவுகின்றது.
(இ) வீதி திறக்கும் வைபவத்தில் பங்குபற்றினர்.
(ஈ) பொருளாதார வளர்ச்சியில் தங்கியுள்ளது.
(உ) எல்லாவழிகளிலும் புகுந்துவிட்டது.

**ஒரு சொல்லில் விடை தருக.**

i. ஓய்வு நேரத்தை எவ்வாறு கழிக்கின்றீர்? ..............................

ii. மரங்கள் வளித்தூய்மைக்கு எப்படி உதவுகின்றன? ..............................

iii. பருகுவதற்குச் சிறந்த பானம் ஒன்று கூறுக? ..............................

iv. கழிவுநீரை எவ்வாறு சுத்தஞ் செய்யலாம்? ..............................

v. சிரமதானம் என்றால் என்ன? ..............................

**மரங்களும் மனிதனும் பற்றி 5 வசனம் எழுதுக.**

..............................

..............................

..............................

..............................

..............................

**செயற்பாடு :**

i. உங்கள் கிராமத்துப் பாடசாலை, வீதி முதலியவற்றில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் கேட்டறியுங்கள்.

யாழ் கு. வி. அச்சக உரிமையாளர் திரு. கு. வி. அமிர்தலிங்கதுரை அவர்களால்
கொழும்பு - 13, லக்சுமி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

*விற்பனையாகின்றன !*

JIM DAV SCHAVONG NAVLANANTHA VID. DATE ---- LIBRARY

# 5 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தை தழுவியது

## பாடநூல்களும் பயிற்சிகளும்

********************************

1. தமிழ்மொழி அடிப்படை அறிவும் செயல் நெறியும்.
2. கணிதப் பயிற்சி (மிகத்தெளிவான செய்கைமுறை கொண்டது)
3. New Class work Book for English (Year 5)
4. குழந்தைகளுக்கான நாமும் சுற்றாடலும் (பாடநூல்)
5. ஆரம்ப விஞ்ஞானம் (பாடநூல்)
6. குழந்தைகளுக்கான சுகாதாரக்கல்வி (பாடநூல்)
7. நாமும் சுற்றாடலும் மதிப்பீட்டுப்பயிற்சி.
8. ஆரம்ப விஞ்ஞான மதிப்பீட்டுப்பயிற்சி.
9. சைவநெறி மதிப்பீட்டுப்பயிற்சி.
10. அழகியற்கல்விக்கான இன்பத்தமிழ்ப்பாடல்கள் (கவிதைத்தொகுப்பு)
11. மாணவர்களுக்கான இன்பத்தமிழ்க்கட்டுரைகள் (புலமைப்பரிசிற் பரீட்சைக்கானது)
12. புலமைப்பரிசிலிலும் தேர்வுப்பரீட்சையிலும் சிறப்புச் சித்தி பெறுவதற்கான பயிற்சி நூல்கள் :-
    தமிழ்மொழிப் பயிற்சி - கணிதப்பயிற்சி.
13. புலமைப்பரிசில் ஆண்டு 5 இற்கான புதிய பயிற்சிநூல்கள்:-
    (1995 நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பாடத்திற்கானது)
    பகுதி I (வினாப்பத்திரம் I இற்குரியது)
    பகுதி II (வினாப்பத்திரம் II இற்குரியது)
14. Model Essays (Read & Write) Year 5.

*வெளியீடு :*

**கு.வி.அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்**

**K.V.PRINTERS - JAFFNA**

புதிய பாடத்திட்டத்திற்கான

# புலமைப்பரிசில் பரீட்சை

## ஆண்டு 5

235

# பயிற்சி வினாத்தாள்கள்

## வினாப்பத்திரம் - I, II

## [விடைக்குறிப்புக்களுடன்]

## (புதிய பதிப்பு)

**இவ்வினாப்பத்திரம் தொடர்பான குறிக்கோள்கள்**

பகுதி I

* பிரதியீடு, பொருள்விளக்கம், எதிர்வுகூறல், மொழிபெயர்ப்பு, பிரச்சினை தீர்த்தல், தொடர்புகளைப் பார்த்தல், காரண காரியங்களை இனங்காணல், தகவல்களின் ஒழுங்கமைப்பு, புலக்காட்சி அவதானிப்பு, உள்ளடகத் தொடர்பு, காரணம் காணல், சிறப்புத் தொடர்புகளை இனங்காணல், அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் ஆகிய வினாவகைகளின் பாகுபாட்டுக்கமைய வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பகுதி II

* மாணவர் திரட்டியுள்ள திறன்களை நுணுகி ஆராய்தல்.
* மாணவர்கள் பெறும் பாட அநுபவங்களை ஆராய்தல்.
* மாணவரிடத்தே விருத்தியடைந்துள்ள அறிவு, மனப்பாங்கு, திறன் ஆகியவற்றை மாணவரின் வயது மட்டத்திற்கேற்ப மதிப்பீடு செய்தல்.
* பெற்ற அறிவினை நாளாந்தம் ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தல்.
* வகுப்பறையில் கற்கும் கோட்பாடுகளை பயன்படுத்தும் ஆற்றலை மதிப்பீடு செய்தல்.
* மாணவர்கள் பெறும் கற்றல் அநுபவங்களை ஆராய்தல்.
* ஆக்கத்திறனை மதிப்பீடு செய்தல்.

(இவையாவும் அடக்கி இவ்வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன)

*வெளியீடு :*

**கு.வி.அச்சகம் - யாழ்ப்பாணம்**

**K.V. PRINTERS - JAFFNA**

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

நூலகம்

இப்புத்தகம் கீழ்க்குறிப்பிடப்படும் திகதியில் அல்லது அதற்குமுன்னர் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்குள் ஒப்படைக்காத புத்தகத்திற்கு நாளொன்றிற்கு 2ரூபா வீதம் அறவிடப்படும்.

-ஆசிரிய நூலகர்-

DONATED BY ADB FUNDED
SECONDARY EDUCATION DEVELOPMENT PROJECT
MINISTRY OF EDUCATION & HIGHER EDUCATION

NOW ON SALE

**READ AND WRITE MODEL ESSAYS AND COMPOSITIONS**

**YEAR - 4, 5, 6, 7, 8, 9, 10 & 11**

# PUBLISHER'S NOTE

Dear Teachers, Parents, and Students.

We are glad to bring out this new series of "**READ AND WRITE**" books which will supplement our "**NEW CLASS WORK BOOKS**".

Teachers and parents very often lament that their children are unable to read or write well in English. What is the reason? Where lies the fault? The answer is simple. Our children do not learn their reading and writing properly. Why? Because they do not have the right material for practicing their reading and writing.

You will find the material in this series very suitable for reading and writing practise. The materials are so carefully designed and graded to create and sustain the interest of the students. The topic for each grade have been selected bearing in mind their needs. The topics and lengths are so appropriate to each level that the students will never find their reading and writing dull.

We assure you all that this series will go a long way in developing the reading and writing skills of our students. The special feature of this series is the writing space provided for practise. The students must first use the material for practicing their reading well and then start writing what they can read well.

We welcome your criticism for a better service.

**Publishers**

(ALL RIGHTS RESERVED BY THE PUBLISHERS)

PUBLISHER'S :

**K. V. PRINTERS - JAFFNA.**

DISTRIBUTORS : **K. V. PRINTERS**
**BOOKS DISTRIBUTING CENTRE,**
**30, NEW CHETTY STREET,**
**COLOMBO - 13.**

TELEPHONE : 342829